**வகுப்பு : பத்து** **இயல் : ஒன்று**

**செய்யுள் - அன்னை மொழியே**

| | |
|---|---|
| 1. | **தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?** |
| | ➢ அன்னைத் தமிழ் மொழியே!<br>➢ அழகாய் அமைந்த செந்தமிழே!<br>➢ பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனி நீயே!<br>➢ கடல் கொண்ட குமரிக் கண்டத்தில் அரசாண்ட மண்ணுலகப் பேரரசே!<br>➢ பாண்டிய மன்னனின் மகளே!<br>➢ திருக்குறளின் பெருமைக்குரியவளே<br>➢ பத்துப்பாட்டே<br>➢ எட்டுத்தொகையே<br>➢ பதினெண்கீழ்க்கணக்கே<br>➢ நிலைத்த சிலப்பதிகாரமே<br>➢ அழகான மணிமேகலையே!<br>➢ உன்னைத் தலைபணிந்து வாழ்த்துகின்றோம். |
| 2. | **தமிழ் மொழியின் செப்பரிய பெருமைகளைப் பெருஞ்சித்திரனார் எவ்வாறு கூறுகிறார்?** |
| | ➢ செழுமை மிக்க தமிழே! எமது உயிரே! சொல்லுதற்கு அரிய நின் பெருமைகளை என்னுடைய தமிழ் நாவானது எப்படி விரித்துரைக்கும்?<br>➢ பழம் பெருமையும் தனிச் சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழ்மொழியே! உன்னுடைய நீண்ட நிலைத்த தன்மையும் வேற்றுமொழியார் உன்னைப் பற்றி உரைக்கும்<br>புகழுரைகளும் எமக்குள்ளே பற்றுணர்வை எழுப்புகின்றன.<br>➢ எம்முடைய தனித்தமிழே! வண்டானது செந்தாமரையில் உள்ள தேனைச் சுவைத்து சிறகுகளை அசைத்தாடுவது போல நாங்களும் உன்னைச் சுவைத்து உன் பெருமைகளை எங்கும் முழங்குவோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| | **செய்யுள் அடியொற்றிய வினாக்கள்:** | | | |
| | **அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!**<br>**முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!**<br>**கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்**<br>**மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!** | | | |
| 1. | இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நம் பாடத் தலைப்பு என்ன? | | | |
| | ***அ. அன்னை மொழியே*** | **ஆ. இரட்டுற மொழிதல்** | **இ. சிலேடை** | **ஈ. தமிழ்ச் சொல்வளம்** |
| 2. | இப்பாடலின் ஆசிரியர் யார்? | | | |
| | **அ. பாரதியார்** | **ஆ. சச்சினாந்தன்** | ***இ. பாவலரேறு பெருஞ்சித்திரனார்*** | **ஈ. பாரதிதாசன்** |
| 3. | இப்பாடலாசிரியரின் இயற்பெயர் என்ன? | | | |
| | **அ. கபிலர்** | **ஆ. பரணர்** | ***இ. துரை மாணிக்கம்*** | **ஈ. திருவள்ளுவர்** |
| 4. | மன்னி – என்னும் சொல் உணர்த்தும் பொருள் யாது? | | | |
| | **அ. அரசி** | ***ஆ. நிலைத்து*** | **இ. குலைத்து** | **ஈ. விரிந்து** |
| 5. | எக்கண்டத்தில் தமிழ் நிலைபெற்று இருந்தது? | | | |
| | **அ. ஆசியாக் கண்டம்** | **ஆ. ஐரோப்பா கண்டம்** | ***இ. குமரிக்கண்டம்*** | **ஈ. அமெரிக்கா கண்டம்** |
| 6. | இப்பாடல் வரிகள் எந்த நூல் தொகுப்பிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளன? | | | |
| | ***அ. கனிச்சாறு*** | **ஆ. தென்சிட்டு** | **இ. தமிழ்ச்சிட்டு** | **ஈ. தென்மொழி** |
| 7. | இப்பாடல் ஆசிரியர் எவ்வாறு புகழப்படுகிறார்? | | | |
| | **அ. பாவலர் புலி** | ***ஆ. பாவலரேறு*** | **இ. பாவலர் களிறு** | **ஈ. பாவலர் மணி** |
| | **தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**<br>**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**<br>**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**<br>**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!** | | | |
| 1. | தமிழ் யாருடைய மகள் என்று கவிஞர் கூறுகிறார்? | | | |
| | ***அ. பாண்டியன்*** | **ஆ. சேரன்** | **இ. சோழன்** | **ஈ. பல்லவன்** |
| 2. | தென்னன் என்னும் சொல் யாரைக் குறிக்கிறது? | | | |
| | ***அ. பாண்டியன்*** | **ஆ. சேரன்** | **இ. சோழன்** | **ஈ. பல்லவன்** |
| 3. | பாப்பத்தே – உணர்த்துவது எது? | | | |
| | **அ. எட்டுத்தொகை** | ***ஆ. பத்துப்பாட்டு*** | **இ. பத்து பாப்பா** | **ஈ. பத்து பாடல்** |
| 4. | முடி தாழ – சொல் உணர்த்தும் பொருள் யாது? | | | |
| | **அ. தலை சீவி** | **ஆ. தலை தாழச் செய்து** | **இ. தலைக்குக் குளித்து** | ***ஈ. தலை வணங்கி*** |
| 5. | நற்கணக்கே என்னும் சொல் குறிக்கும் இலக்கிய வகை எது? | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | **அ. சிற்றிலக்கிய வகைகள்** | **ஆ. எட்டுத்தொகை** | ***இ. பதினெண் கீழ்க்கணக்கு*** | **ஈ. பத்துப்பாட்டு** |
| 6. | முன்னும் நினைவால் - பொருள் யாது? | | | |
| | **அ. குறையும் நினைவால்** | ***ஆ. பொங்கும் நினைவால்*** | **இ. குவியும் நினைவால்** | **ஈ. பொழியும் நினைவால்** |
| **7.** | இப்பாடல் வரிகள் குறிப்பிடும் காப்பியங்கள் எவை? | | | |
| | **அ. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை** | **ஆ. திருக்குறள், பத்துப்பாட்டு** | ***இ. சிலப்பதிகாரம், மணிமேகலை*** | **ஈ. மணிமேகலை, பத்துப்பாட்டு** |

## செய்யுள் : இரட்டுற மொழிதல்

| | | |
|---|---|---|
| 1. | **தமிழழகனார் தமிழையும், கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.** | |
| | **தமிழ்** | **கடல்** |
| | இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாய் வளர்ந்தது | முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது. |
| | முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசண்யம் ஆகிய மூன்று வகைச் சங்குகளைத் தருகிறது. |
| | ஐம்பெருங்காப்பியங்களை அணிகளாய்ப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. |
| | சங்கப்பலகையில் இருந்த புலவர்களால் காக்கப்பட்டது. | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது. |

**முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்**
**மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்**
**அணை கிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு**
**இணை கிடந்தே தமிழ் ஈண்டு**

| | | | |
|---|---|---|---|
| 1. | முத்தமிழ் எனப்படுவது ………………… | | |
| | **அ. இயல், இசை, நாடகம்** | **ஆ. முதல், இடை, கடை** | **இ. சேர, சோழ, பாண்டியர்** |
| 2. | எதை வைத்துத் தமிழை வளர்த்தனர்? | | |
| | **அ. முத்தமிழ்** | **ஆ. முச்சங்கம்** | **இ. மூவேந்தர்** |
| 3. | சந்தக் கவிமணி எனக் குறிப்பிடப்படுபவர் யார்? | | |
| | **அ தமிழ் மகனார்** | **ஆ. தமிழொளி** | **இ. தமிழழகனார்** |
| 4. | தமிழழகனாரின் இயற்பெயர் என்ன? | | |
| | **அ. சண்முகமணி** | **ஆ. சண்முகசுந்தரம்** | **இ. சண்முகக்கவிராயர்** |
| 5. | இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள பாடலின் தலைப்பு என்ன? | | |
| | **அ. இரட்டுறமொழிதல்** | **ஆ. மொழி வாழ்த்து** | **இ. அன்னை மொழியே** |
| 6. | தமிழ் யாரால் காக்கப்பட்டது? | | |

| | | | |
|---|---|---|---|
| | **அ. சங்க கால மக்களால்** | **ஆ. சங்க கால மன்னர்களால்** | **இ. சங்கப் புலவர்களால்** |
| **7.** | இரட்டுறமொழிதல் அணியை .................. என்றும் அழைப்பர். | | |
| | **அ. சிலேடை அணி** | **ஆ. உவமையணி** | **இ. வேற்றுமையணி** |
| **8.** | தமிழ் ......................... அணிகலன்களாகக் கொண்டது. | | |
| | **அ. ஐம்படைகளை** | **ஆ. ஐம்பூதங்களை** | **இ. ஐம்பெருங்காப்பியங்களை** |
| **9.** | கடல் எவற்றைத் தருகிறது எனப் புலவர் கூறுகிறார்? | | |
| | **அ. நத்தை, முத்து** | **ஆ. உப்பு, நீர்** | **இ. முத்து, அமிழ்து** |
| **10** | கடல் எத்தனை வகையான சங்குகளைத் தருகிறது? | | |
| | **அ. இரண்டு வகை** | **ஆ. மூன்று வகை** | **இ. பத்து வகை** |
| | **உரைநடை : தமிழ்ச்சொல்வளம்** | | |
| **1.** | **பூவின் நிலைகளைக் குறிக்கும் பெயர்களை எழுதுக.** | | |
| | அரும்பு – பூவின் தோற்ற நிலை<br>போது – பூ விரியத் தொடங்கும் நிலை<br>மலர் - பூவின் மலர்ந்த நிலை<br>வீ – மரம், செடியிலிருந்து கீழே விழுந்த நிலை<br>செம்மல் - பூ வாடிய நிலை | | |
| **2.** | ***தானியங்களுக்கு வழங்கும் பெயர்கள் குறித்து எழுதுக*** | | |
| | கூலம் : நெல், புல்<br>பயறு : அவரை, உளுந்து<br>கடலை : வேர்க்கடலை, கொண்டைக்கடலை<br>விதை : கத்தரி, மிளகாய்<br>காழ் : புளி, காஞ்சிரை<br>முத்து : வேம்பு, ஆமணக்கு<br>கொட்டை : மா, பனை<br>தேங்காய்: தென்னை<br>முதிரை : அவரை, துவரை | | |
| **3.** | **தாவரங்களின் கிளைப்பிரிவுகளுக்கு வழங்கும் பெயர்கள் குறித்து எழுதுக.** | | |
| | கிளைப்பிரிவுகள் :<br>கவை : அடிமரத்தில் இருந்து பிரியும் மாபெரும் கிளை<br>கொம்பு : கவையின் பிரிவு<br>கிளை : கொம்பின் பிரிவு<br>சினை : கிளையின் பிரிவு<br>போத்து : சினையின் பிரிவு | | |



| | |
|---|---|
| | குச்சு : போத்தின் பிரிவு<br>இணுக்கு : குச்சியின் பிரிவு |
| **4.** | **தாவரங்களின் குலை வகை, கெட்டுப் போன காய்கனிகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை?** |
| | குலை வகை :<br>கொத்து – அவரை, துவரை<br>குலை – முந்திரி<br>தாறு – வாழை<br>கதிர் - கேழ்வரகு, சோளம்<br>அலகு (அ) குரல் - நெல், தினை<br>சீப்பு - வாழை<br>கெட்டுப்போன காய்கறி வகை :<br>சூம்பல், சிவியல், சொத்தை, வெம்பல்<br>அளியல், அழுகல், சோண்ட, கோட்டான் காய்<br>கூகைக்காய், தேரைக்காய், அல்லிக்காய், ஒல்லிக்காய் |
| **5.** | **தாவரங்களின் இலை, கொழுந்து வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.** |
| | இலை – புளி, வேம்பு முதலியவற்றின் இலை<br>தாள் - நெல், புல் முதலியவற்றின் இலை<br>தோகை – சோளம், கரும்பு முதலியவற்றின் இலை<br>ஓலை – தென்னை, பனை முதலியவற்றின் இலை<br>சண்டு – காய்ந்த தாளும் தோகையும்<br>சருகு – காய்ந்த இலை<br>தளிர் - நெல், புல் முதலியவற்றின் கொழுந்து<br>முறி – புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து<br>குருத்து – சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து<br>கொழுந்தாடை – கரும்பின் நுனிப்பகுதி |
| **6.** | **பிஞ்சு வகைகளின் பெயர்களை எழுதுக** |
| | ❖ பூம்பிஞ்சு – பூவோடு கூடிய இளம் பிஞ்சு<br>❖ பிஞ்சு - இளம் காய்<br>❖ வடு – மாம்பிஞ்சு<br>❖ மூசு – பலாப்பிஞ்சு |
| **7.** | **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் விளக்குக.** |
| | ❖ தமிழின் சொல்வளம் செம்மொழிகளுக்கு எல்லாம் பொது.<br>❖ தமிழின் சொல்வளத்தைப் பல துறைகளிலும் காணலாம்.<br>❖ ஆங்கிலம் போன்ற மொழிகளில் இலையைக் குறிக்க ஒரே சொல் மட்டுமே உள்ளது. |

| | |
|---|---|
| | ❖ தமிழில் அதன் வன்மை, மென்மையைக் கொண்டு பலவகையாகப் பாகுபாடு செய்துள்ளனர்.<br>❖ இது மட்டுமன்றி தாவரங்கள், மணிவகை, இளம் பயிர்வகை, காய்கனி வகை, அடி, கிளை, கொழுந்து என அனைத்து உறுப்புகளுக்கும் சொற்களைப் பகுத்து வைத்துள்ளனர்.<br>❖ தமிழ்நாட்டு நெல்லில் செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும் சம்பா, மட்டை, கார் என்றும் பல வகைகள் உள்ளன.<br>❖ ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச்சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.<br>❖ வரகு, காடைக்கண்ணி, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டில் தவிர வேறெங்கும் விளைவதில்லை. |
| 8 | **தாவரங்களின் அடிப்பகுதியைக் குறிக்கும் சொற்களை எழுதுக** |
| | ❖ **நெல், கேழ்வரகு - தாள்**<br>❖ **கீரை, வாழை - தண்டு**<br>❖ **நெட்டி, மிளகாய்ச்செடி - கோல்**<br>❖ **குத்துச்செடி, புதர் - தூறு**<br>❖ **கம்பு, சோளம் - தட்டு அல்லது தட்டை**<br>❖ **கரும்பு - கழி**<br>❖ **மூங்கில் - கழை**<br>❖ **புளி, வேம்பு - அடி** |

## துணைப்பாடம் : உரைநடையின் அணிநலன்கள்

**முன்னுரை** :சங்க இலக்கியம் நம் பாட்டனார் தோப்பு. இடைக்கால இலக்கியம் நம் தந்தையார் தோட்டம். இக்கால இலக்கியம் நம் பூங்கா. இவை அனைத்தின் நயங்களையும் ஒன்று சேர்த்து உரைநடையின் அணிநலன்களாகக் காண்போம்.

**உரைநடையில் உவமை** : உணர்ச்சிகளைக் காட்ட உவமை கொண்ட மொழிநடையே ஏற்ற கருவியாகும்.

*சான்று :"திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த நிலைக் கண்ணாடிகளைப் போல் வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்" என்று குறிஞ்சி மலர் நூலில் ஆசிரியர் உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.*

**உரைநடையில் உருவகம்** :உவமையும் பொருளும் வேற்றுமையின்றி ஒன்றெனக் கூறுவது உருவகமாகும். தமிழில் உவமையை விட உருவகமே உணர்வுகளைத் தூண்டி வெற்றி பெறுகிறது.

*சான்று : முகநிலவில் வியர்வை முத்துகள் துளிர்த்தன*

**உரைநடையில் இணை ஒப்பு** :உவம் உருபு மறைந்து வந்தால் எடுத்துக்காட்டு உவமை அணி. எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்தும் போது இணை ஒப்பு என்கிறோம்.

*சான்று :ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா?*

*புரோகிதருக்காக அமாவாசை காத்திருக்குமா?*

**உரைநடையில் இலக்கணை :** உயிர் இல்லாத பொருள்களை உயிருள்ளன போலவும் உணர்வு இல்லாத பொருள்களை உணர்வடையன போலவும் கற்பனை செய்வது இலக்கணை.

*சான்று :“சோலையில் புகுவேன், மரங்கள் கூப்பிடும்*

*விருந்து வைக்கும், ஆலமர நிழலில்*

*அமர்வேன்.ஆல் என் விழுதைப்பார்*

*அந்த அரசுக்கு இஃது உண்டோ?*

**உரைநடையில் முரண்படு மெய்ம்மை:**படிப்பவருக்கு முரண்படுவது போல் இருக்கும். உண்மையில் முரண்படாத மெய்ம்மையைச் சொல்வது.

*சான்று : இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்பட வேண்டும்.*

**உரைநடையில் எதிரிணை :** சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவது. இதனை எதிரிணை என்கிறோம்.

*சான்று :*குடிசைகள் ஒரு பக்கம்,

கோபுரங்கள் மறு பக்கம்.

பசித்த வயிறுகள் ஒரு பக்கம்

புளித்த ஏப்பக்காரர்கள் மறுபக்கம்

**முடிவுரை :**பேசினால் உரையாடல், எழுதினால் உரைநடை. இன்றைய உரைநடையின் வளர்ச்சியோ அளவற்றது. கட்டுரை, சிறுகதை, புதினம் இவையெல்லாம் இன்றைய உரைநடையின் இலக்கிய வடிவங்களாகத் திகழ்கின்றன. இவற்றைப் படித்து நம் அறிவை வளப்படுத்திக் கொள்வோம்.

## இலக்கணம் - எழுத்து – சொல்

### சான்றுகள் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. | செய்யுளிசை அளபெடை | | |
| | ***அ. உழாஅர்*** | **ஆ. கெடுப்பதூஉம்** | **இ. தழீஇ** |
| 2. | சொல்லிசை அளபெடை | | |
| | **அ. உழாஅர்** | **ஆ. கெடுப்பதூஉம்** | ***இ. நசைஇ*** |
| 3. | இன்னிசை அளபெடை | | |
| | **அ. உழாஅர்** | ***ஆ. கெடுப்பதூஉம்*** | **இ. தழீஇ** |
| 4. | தனிக்குறல் அடுத்து வரும் ஒற்றளபெடை | | |
| | ***அ. சங்ங்கு*** | **ஆ. காங்ங்கு** | **இ. வாங்ங்கு** |
| 5. | இசைநிறை அளபெடை | | |

| | | | |
|---|---|---|---|
| | ***அ. உழாஅர்*** | **ஆ. கலங்ங்கு** | **இ. தழீஇ** |
| **6.** | பொதுமொழிக்குச் சான்று தருக. | | |
| | ***அ. அரண்மனை*** | **ஆ. கண்ணன்** | **இ. லட்சுமி வந்தாள்** |
| **7.** | வினையாலணையும் பெயர் | | |
| | ***அ. பொறுத்தார்*** | **ஆ. பொறுத்தல்** | **இ. பொறுப்பு** |
| **8.** | எதிர்மறைத்தொழிற்பெயர் | | |
| | **அ. கொல்லுதல்** | **ஆ. கொன்றவன்** | ***இ. கொல்லாமை*** |
| **9.** | ஆற்றைக் குறிக்கும் பொதுமொழி | | |
| | **அ. காவிரி** | **ஆ. கங்கை** | ***இ. வைகை*** |
| **10.** | எண்ணைக் குறிக்கும் பொதுமொழி | | |
| | ***அ. எட்டு*** | **ஆ. ஒன்று** | **இ. இரண்டு** |
| | **கோடிட்ட இடங்களை நிரப்புக** | | |
| **1.** | அளபெடை ..................... வகைப்படும். | | |
| | ***அ. இரண்டு*** | **ஆ. மூன்று** | **இ. நான்கு** |
| **2.** | உயிரளபெடை .................. வகைப்படும். | | |
| | **அ. இரண்டு** | ***ஆ. மூன்று*** | **இ. நான்கு** |
| **3.** | ஒற்றளபெடையில் அளபெடுக்கும் எழுத்துகள் மொத்தம் ........... ஆகும். | | |
| | **அ. பத்து** | **ஆ. இருபது** | ***இ. பதினொன்று*** |
| **4.** | செய்யுளிசை அளபெடையின் வேறுபெயர் ..................... அகும். | | |
| | **அ. இன்னிசை அளபெடை** | **ஆ. அசைநிறை அளபெடை** | ***இ. இசைநிறை அளபெடை*** |
| **5.** | செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது ......................... அளபெடை ஆகும். | | |
| | ***அ. இன்னிசை*** | **ஆ. இசைநிறை** | **இ. செய்யுளிசை** |
| **6.** | செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது ..................... அளபெடை ஆகும். | | |
| | **அ. இன்னிசை** | ***ஆ. சொல்லிசை*** | **இ. செய்யுளிசை** |
| **7.** | மொழி .................... வகைப்படும். | | |
| | **அ. இரண்டு** | ***ஆ. மூன்று*** | **இ. நான்கு** |
| **8.** | தொழிற்பெயர் ......................... வகைப்படும். | | |
| | ***அ. இரண்டு*** | **ஆ. மூன்று** | **இ. நான்கு** |
| **9.** | தொழிற்பெயர் விகுதி இல்லாமல் பகுதி மட்டும் வந்து தொழிலை உணர்த்துவது ................................. தொழிற்பெயர் ஆகும். | | |
| | ***அ. முதனிலை*** | **ஆ. முதனிலை திரிந்த** | **இ. விகுதி பெற்ற** |
| **10.** | வினையாலணையும் பெயர் ........................... காட்டும் | | |

| | | | |
|---|---|---|---|
| | **அ. பெயர்** | ***ஆ. காலம்*** | **இ. பண்பு** |
| 11. | வினையாலணையும் பெயர் .................. இடத்திற்கு உரியது. | | |
| | **அ. தன்மை** | ***ஆ. மூவிடத்திற்கும்*** | **இ. படர்க்கை** |
| 12. | தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது .................. எனப்படும். | | |
| | ***அ. பொதுமொழி*** | **ஆ. தமிழ்மொழி** | **இ. தொடர்மொழி** |
| | **கூறியவாறு செய்க** | | |
| 1. | எ.்.கிலங்கிய – அளபெடை ஆக்குக. | | |
| | ***அ. எ.்.்.கிலங்கிய*** | **ஆ. எ.்.குஇலங்கிய** | **இ. எ.்.்.இலங்கிய** |
| 2. | எட்டு – பிரித்து எழுதுக. | | |
| | **அ. எட் + து** | **ஆ. எட்டு + து** | ***இ. எள் + து*** |
| 3. | படாஅ – அளபெடை நீக்கி எழுதுக | | |
| | **அ. பட்டா** | ***ஆ. படா*** | **இ. பாடா** |
| 4. | அளபெடை – பிரித்து எழுதுக. | | |
| | ***அ. அளபு + எடை*** | **ஆ. அளபு + உடை** | **இ. அளபு + துடை** |
| 5. | வேங்கை – பிரித்து எழுதுக. | | |
| | ***அ. வேம் + கை*** | **ஆ. வே + கை** | **இ. வேங் + கை** |
| 6. | கெடு – முதனிலை திரிந்த தொழிற்பெயராக்குக. | | |
| | **அ. கெடுதல்** | ***ஆ. கேடு*** | **இ. கேடுதல்** |
| 7. | படம் பார்த்தான் - எவ்வகை மொழி எனக் கண்டறிக. | | |
| | **அ. தனிமொழி** | ***ஆ. தொடர்மொழி*** | **இ. பொதுமொழி** |
| 8. | வந்தான் - விணையாலனையும் பெயராக மாற்றுக. | | |
| | ***அ. வந்தவன்*** | **ஆ. வந்தாள்** | **இ. வருகிறான்** |
| 9. | எட்டு – பொதுமொழி ஆக்குக. | | |
| | **அ. எட் + து** | **ஆ. எட்டு + து** | ***இ. எள் + து*** |
| 10. | நடத்தல் - எதிர்மறைத் தொழிற்பெயர் ஆக்குக. | | |
| | **அ. நடந்தான்** | ***ஆ. நடவாமை*** | **இ. நடந்தவன்** |
| | **இலக்கணக்குறிப்பு எழுதுக** | | |
| 1. | உரனசைஇ | | |
| | ***அ. சொல்லிசை அளபெடை*** | **ஆ. இசைநிறை அளபெடை** | **இ. செய்யுளிசை அளபெடை** |
| 2. | ஆஅதும் என்னுமவர் | | |
| | **அ. இன்னிசை அளபெடை** | **ஆ. இசைநிறை அளபெடை** | ***இ. செய்யுளிசை அளபெடை*** |
| 3. | எடுப்பதூஉம் | | |

| | | | |
|---|---|---|---|
| | ***அ. இன்னிசை அளபெடை*** | **ஆ. இசைநிறை அளபெடை** | **இ. செய்யுளிசை அளபெடை** |
| **4.** | அரங்ங்கம் | | |
| | **அ. உயிரளபெடை** | ***ஆ. ஒற்றளபெடை*** | **இ. சொல்லிசை அளபெடை** |
| **5.** | கண்ணன் | | |
| | ***அ. தனிமொழி*** | **ஆ. தொடர்மொழி** | **இ. பொதுமொழி** |
| **6.** | பெற்றானை | | |
| | **அ. வினைமுற்று** | **ஆ. வினையெச்சம்** | ***இ. வினையாலணையும் பெயர்*** |
| **7.** | உரை | | |
| | ***அ. முதனிலைத் தொழிற்பெயர்*** | **ஆ. முதனிலை திரிந்த தொழிற்பெயர்** | **இ. விகுதி பெற்ற தொழிற்பெயர்** |
| **8.** | பேறு | | |
| | **அ. முதனிலைத் தொழிற்பெயர்** | ***ஆ. முதனிலை திரிந்த தொழிற்பெயர்*** | **இ. விகுதி பெற்ற தொழிற்பெயர்** |
| **9.** | அந்தமான் | | |
| | **அ. தனிமொழி** | **ஆ. தொடர்மொழி** | ***இ. பொதுமொழி*** |
| **10.** | பேசாமை | | |
| | ***அ. எதிர்மறைத் தொழிற்பெயர்*** | **ஆ. தொழிற்பெயர்** | **இ. விகுதி பெற்ற தொழிற்பெயர்** |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



### அறிவின் திறவுகோல்

வசதி இல்லாமல் கல்வி கல்லாதவர் சிலர்.
வசதி இருந்தும் கல்வியைக் கல்லாதவர் பலர்.
நம் வாழ்க்கை என்னும் கடலைக் கடக்க அறிவு என்னும் ஓடம் தேவை.
அறிவை அள்ளித் தருவது கல்வி மட்டுமே.
அறிவு என்னும் பூட்டைக் கல்வி என்னும் சாவி கொண்டு திறப்போம்.

அறிவு என்னும்
பூட்டைத் திறக்க
நல்ல புத்தகம்

| | |
|---|---|
| | என்ற சாவி தேவை<br>பூட்டிய அறிவின் திறவுகோல்<br>கல்வியே ஆகும். |
| | **இயல் - 2** |
| | **கேட்கிறதா என் குரல் ( உரைநடை )** |
| 1. | **காற்றிற்கு வழங்கப்படும் பெயர்களை எழுதுக.** |
| | ➢ காற்று, வளி, தென்றல், புயல், சூறாவளி எனப் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது.<br>➢ பருவநிலை, சூழல்,வீசும் வேகம் ஆகியவற்றிற்கேற்ப இவ்வாறு அழைக்கப்படுகிறது.<br>➢ தென்றல் காற்று, பூங்காற்று, கடல்காற்று, பனிக்காற்று, வாடைக்காற்று, மேல்காற்று, கீழ்காற்று, மென்காற்று, இளந்தென்றல், புழுதிக்காற்று, ஆடிக்காற்று, கடுங்காற்று, சுடுங்காற்று, புயல்காற்று, பேய்க்காற்று, சுழல்காற்று, சூறாவளிக்காற்று எனப் பல்வேறு பெயர்களால் காற்று அழைக்கப்படுகிறது. |
| 2. | **நான்கு திசையிலும் வீசும் காற்றைப் பற்றி எழுதுக.** |
| | ❖ கிழக்கு என்பதற்கு குணக்கு என்னும் பெயரும் உண்டு.<br>❖ கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல் எனப்படுகிறது.<br>❖ கொண்டல் காற்று குளிர்ச்சியைத் தருகிறது.<br>❖ மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயரும் உண்டு.<br>❖ மேற்கிலிருந்து வீசும் காற்று கோடை எனப்படுகிறது.<br>❖ வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயரும் உண்டு.<br>❖ வடக்கிலிருந்து வீசும் காற்று வாடைக்காற்று எனப்படுகிறது.<br>❖ தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல் காற்று.<br>❖ பல நீர் நிறைந்த பகுதிகளைக் கடந்து வருவதால் இதமான இயல்பு கொள்கிறது. |
| | கிழக்கு → குணக்கு → கொண்டல் காற்று<br>மேற்கு → குடக்கு → கோடைக் காற்று<br>வடக்கு → வாடை → வாடைக்காற்று<br>தெற்கு → தென்றல் → இதமான காற்று |

| | |
|---|---|
| 3. | **இலக்கியங்களில் காற்று எவ்வாறு நீங்கா இடத்தைப் பிடித்திருக்கிறது?** |
| | ➢ பலவித மலர்களின் நறுமணத்தை அள்ளி வரும்போது வண்டுகளையும் அழைத்து வருவதால் இளங்கோவடிகள் காற்றை<br>➢ வண்டொடு புக்க மணவாய்த் தென்றல் என்று உரைக்கின்றார்.<br>➢ பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பத்மகிரிநாதர் தென்றல் விடு தூது என்னும் சிற்றிலக்கியத்தில் "செந்தமிழின் பின்னுதித்த தென்றலே" எனத் தூது செல்லக் காற்றை அன்போடு அழைக்கிறார்.<br>➢ நதியில் விளையாடிக் கொடியில் தலைசீவி எனப் பலவாறாக இன்றளவும் இலக்கியப் படைப்புகளிலும் திரையிசைப் பாடல்களிலும் காற்று நீங்கா இடம் பிடித்திருக்கிறது. |
| 4. | **நீர் தன்னைப் பற்றி பேசினால் - உங்களுடைய கற்பனையில் விடை தருக.**<br>நீரின்றி அமையாது உலகு:<br>நீரின்றி அமையாது உலகு என்று வள்ளுவர் போற்றி உரைத்துள்ளார். மனிதக் கூட்டம் மட்டுமின்றி அனைத்து உயிர்களும் வாழத்துணை செய்து நீரே ஆகும்.<br>பல்வேறு தோற்றங்களில் நீர்:<br>நீரைத் தண்ணீர், மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர், குடிநீர் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது.<br>பல வகையில் பயன் தருவன:<br>நீர், அருவி, ஆறு ஏரி, கடல், உறைக்கிணறு, ஆழிக்கிணறு, கட்டுக்கிணறு, ஊற்று என பல நீர்நிலைகளாகிப் பயன்படுகின்றன.<br>பழம்பெரும் பனுவல்களில் நீர்:<br>திருக்குறளும் சங்கப்பாடல்களும் நீருக்கே முதலிடம் தந்து பாடப்பட்டுள்ளது.<br>கலம் செலுத்தும் கடலாக நீர்:<br>தமிழர்கள் கடல் வணிகத்தின் மூலம் கடலை தம் ஆளுகையில் பல நூற்றாண்டுகளாக வைத்திருந்தனர். வணிகப் பயணங்களில் நீர் பலவாறு பயன்படுகிறது. |
| 5. | ***காற்றின் ஆற்றல் குறித்து எழுதுக.*** |
| | ➢ உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கிறது.<br>➢ தாவரங்களின் உணவு உற்பத்திக்கு உதவுகிறது.<br>➢ விதைகளை எடுத்துச்சென்று பல இடங்களில் தூவுகிறது.<br>➢ புவியின் சங்கிலித் தொடர் அறுபடாமலிருக்க உதவுகிறது.<br>➢ தொலைத்தொடர்பின் மையமாக உள்ளது.<br>➢ மின்சாரம் தயாரிக்க உதவுகிறது. |
| 6. | **காற்று மாசடையக் காரணங்கள் யாவை?** |
| | ➢ குப்பைகள், நெகிழிப்பைகள், மெது உருளைகள் ஆகியவற்றை எரித்தல்.<br>➢ குளிர்சாதனப் பெட்டிகள், குளிரூட்டிகளை அதிகம் பயன்படுத்துதல்.<br>➢ பட்டாசுகளை மிகுதியாக வெடிப்பது. |

| | |
|---|---|
| | ➢ புகை வடிகட்டி இல்லாமல் தொழிற்சாலைகளை இயக்குவது.<br>➢ தொழிற்சாலைகள், ஊர்திகள் வெளியிடும் புகை<br>➢ விமானங்கள் வெளியிடும் புகை<br>➢ கண் எரிச்சல், தலைவலி, நுரையீரல் புற்றுநோய், இளைப்பு நோய் ஏற்படுதல்.<br>➢ ஓசோன் படலத்தைப் பாதித்தல். |
| **7.** | **ஹிப்பாலஸ் பருவக்காற்று குறித்து விவரிக்க.** |
| | • கி.பி. முதல் நூற்றாண்டில் ஹிப்பாலஸ் என்னும் பெயர்கொண்ட கிரேக்க மாலுமி பருவக்காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்கு நேரே விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார்.<br>• அதுமுதல் யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன.<br>• அந்தப் பருவக் காற்றுக்கு யவனர் அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பாலஸ் என்பதையே சூட்டினார்கள்.<br>• ஹிப்பாலஸ் பருவக் காற்றின் வழியில் யவனக் கடல் வணிகம் பெறுகிற்று. |
| | **செய்யுள் - காற்றே வா! (பாரதியார்)** |
| 1. | **காற்றே வா கவிதையில் பாரதியார் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.** |
| | ➢ பூக்களின் மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு<br>➢ மனத்தை மயங்கச் செய்யும் இனிய வாசனையுடன் வா.<br>➢ உயிர் வளியை எங்களுக்குக் கொண்டு வந்து தருக.<br>➢ எமது உயிராகிய நெருப்பை நீடித்து நின்று தருமாறு வீசு<br>➢ எமது உயிர் நெருப்பை அணைத்து விடாதே<br>➢ பேய் போல வீசி அதனை மடித்து விடாதே<br>➢ சீராக நெடுங்காலம் வீசு<br>➢ உமக்குப் பாட்டுகள் பாடி வழிபடுகின்றோம். |
| 2. | **பாரதியார் பற்றிக் குறிப்பு எழுதுக.** |
| | ❖ நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா, சிந்துக்குத் தந்தை, பாட்டுக்கொரு புலவன் என்றெல்லாம் பாராட்டப் பெற்றவர்.<br>❖ எட்டயபுர ஏந்தலாக அறியப்பட்டவர்.<br>❖ கவிஞர்<br>❖ கட்டுரையாளர்<br>❖ கேலிச்சித்திரம், கருத்துப்படம் உருவாக்கியவர்.<br>❖ கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சால் சபதம் போன்ற நூல்களை எழுதியவர்.<br>❖ இந்தியா, சுதேசமித்திரன் போன்ற இதழ்களின் ஆசிரியர். |
| 3. | **வசன கவிதை – குறிப்பு எழுதுக** |

| | | | | |
|---|---|---|---|---|
| | ➢ உரைநடையும் கவிதையும் இணைந்து இலக்கண வரம்புக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவமே வசன கவிதை எனப்படுகிறது.<br>➢ இவ்வடிவம் பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>➢ ஆங்கிலத்தில் Prose poetry எனப்படுகிறது.<br>➢ உணர்ச்சி பொங்கப் பாடும் இடங்களில் யாப்பு தடையாக இருப்பதை உணர்ந்த பாரதி இவ்வடிவத்தை எளிமையாகக் கையாண்டார்.<br>➢ வசன கவிதையே புதுக்கவிதை தோன்றக் காரணமாயிற்று. | | | |
| 4. | **சோலைக் காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடலை எழுதுக.** | | | |
| | ❖ சோலைக் காற்று : கோடைக்காலம் வந்துவிட்டது. மின்விசிறியே உனக்கு இனி ஓய்வே இருக்காதே!<br>❖ மின்விசிறி : ஆமாம். இனி எனக்கு ஓய்வே இருக்காது. முன்பெல்லாம் தேவைக்கு மட்டுமே பயன்படுத்தினார்கள். அதனால் சற்று ஓய்வு இருக்கும்.<br>❖ சோலைக் காற்று : ஆமாம் தற்பொழுது அனைவரும் வீட்டிற்குள்ளே முடங்கி விடுகின்றனர். வெளியில் சோலை, வயல்வெளிளுக்கு வருவது இல்லை. என் காற்றை அவர்கள் விரும்புவதும் இல்லை.<br>❖ மின்விசிறி : உன் காற்றே உடலுக்கு நல்லது. தூய்மையானது. அதை மனிதர்கள் புரிந்து கொள்ள வேண்டும். | | | |
| | **செய்யுள் அடியொற்றிய வினாக்கள்** | | | |
| | **காற்றே வா,**<br>**மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு மனத்தை**<br>**மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா:**<br>**இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த**<br>**ப்ராண – ரஸத்தை எங்களுக்குக் கொண்டு கொடு.** | | | |
| 1. | இப்பாடல் இடம்பெற்றுள்ள பாடலின் தலைப்பு என்ன? | | | |
| | **அ. முல்லைப்பாட்டு** | **ஆ. காற்றே வா!** | **இ. எங்கள் தமிழ்** | **ஈ. மலைபடுகடாம்** |
| 2. | இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன? | | | |
| | **அ. பாரதிதாசன்** | **ஆ. கண்ணதாசன்** | **இ. பாரதியார்** | **ஈ. ஔவையார்** |
| 3. | மயலுறுத்து என்ற சொல்லின் பொருள் யாது? | | | |
| | **அ. மயங்கச் செய்** | **ஆ. பேசச் செய்** | **இ. படிக்கச் செய்** | **ஈ. சிரிக்கச்செய்** |
| 4. | வசன கவிதையே ................. தோன்றக் காரணமாயிற்று. | | | |
| | **அ. சிறுகதை** | **ஆ. புதுக்கதை** | **இ. தொடர்கதை** | **ஈ. புதுக்கவிதை** |
| 5. | பாரதியார் .................. புலவன் எனப் பாராட்டப்பெற்றவர். | | | |
| | **அ. தமிழுக்கொரு** | **ஆ. பாட்டுக்கொரு** | **இ. வீட்டுக்கொரு** | **ஈ. நாட்டுக்கொரு** |

| | | | | |
|---|---|---|---|---|
| **6.** | ப்ராண – ரஸம் என்னும் சொல்லின் பொருளை எழுதுக. | | | |
| | **அ. உயிர்வளி** | **ஆ. ஹைட்ரஜன்** | **இ. நைட்ரஜன்** | **ஈ. ஹீலியம்** |
| 7. | பாரதியார் எழுதிய காவியங்கள் குயில்பாட்டு, .............. ஆகும் | | | |
| | **அ. பாஞ்சாலி சபதம்** | **ஆ. புதுயுகம்** | **இ. அன்பின் வீடு** | **ஈ. காவியபாவை** |
| 8. | பாரதியார் இந்தியா ............... முதலிய இதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றினார். | | | |
| | **அ. தினகரன்** | **ஆ. சங்கமித்திரன்** | **இ. சுதேசமித்திரன்** | **ஈ. காவியமித்திரன்** |
| 9. | காற்றின்றி அமையாது உலக ........................ | | | |
| | **அ. உயிரியக்கம்** | **ஆ. அணு இயக்கம்** | **இ. மண்ணியக்கம்** | **ஈ. வளி இயக்கம்** |

## செய்யுள் - முல்லைப்பாட்டு (நப்பூதனார்)

| | |
|---|---|
| **1.** | **முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.** |
| | • அகன்ற உலகத்தை வளைத்துப் பெருமழை பொழிகிறது.<br>• கடலின் குளிர்ந்த நீரைப் பருகி விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.<br>• மாலைப்பொழுதில் முதிய பெண்கள் மிகுந்த காவலையுடைய ஊர்ப்பக்கம் சென்றனர்.<br>• வண்டுகள் ஒலிக்கும் நறுமணம் கொண்ட முல்லைப் பூக்களோடு நெல்லையும் சேர்த்து தெய்வத்தின் முன் தூவினர்.<br>• தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.<br>• அங்கு இளங்கன்று பசியால் வாடிக் கொண்டிருந்தது.<br>• அதைக் கண்ட இடைமகள் “உன் தாய்மார் இப்போது வந்துவிடுவர். வருந்தாதே” என்றாள்.<br>• இது நல்ல சொல் எனக்கொண்டு முதுபெண்கள் தலைவியிடம் கூறினர். |
| **2.** | **மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.** |
| | ❖ மழைநீரில் குளித்துவிட்டுத் தென்னந்தோப்பில் தலையை உலர்த்த வரும் தென்றல் காற்று<br>❖ அணில்களின் சடுகுடு விளையாட்டால் மரங்களின் இலைகளில் சொட்டும் நீர்.<br>❖ சுருதியோடு பாடும் குயில்<br>❖ மழலை மாறாத நதி இசை<br>❖ தாழ்வாரங்களில் சொட்டும் நீர் போடும் தாளம்.<br>❖ உடலில் உரசும் மெல்லிய குளிர் காற்று<br>❖ தேங்கிய குட்டைகளில் குதித்து விளையாடும் குழந்தைகள்.<br>❖ காகிதக் கப்பல் விட்டு மகிழும் சிறுவர்களின் கூச்சல். |

### செய்யுள் அடியொற்றிய வினாக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அருங்கடி மூதூர் மருங்கில் போகி,<br>யாழ் இசை இன வண்டு ஆர்ப்ப, நெல்லொடு,<br>நாழி கொண்ட, நறுவீ முல்லை<br>அரும்பு அவிழ் அலரி தூஉய், கைதொழுது,<br>பெருமுது பெண்டிர், விரிச்சி நிற்ப | | | |
| 1. | இச்செய்யுள் வரிகள் இடம்பெறும் நூலின் பெயர் என்ன? | | | |
| | *அ. முல்லைப்பாட்டு* | ஆ. குறிஞ்சிப்பாட்டு | இ. மலைபடுகடாம் | |
| 2. | இச்செய்யுளின் ஆசிரியர் பெயர் என்ன? | | | |
| | அ. நல்லந்துவனார் | *ஆ. நப்பூதனார்* | இ. குமரகுருபரர் | |
| 3. | நறுவீ என்ற சொல்லின் பொருள் யாது? | | | |
| | அ. நல்ல நிறமுடைய மலர்கள் | ஆ. நிறைய மலர்கள் | *இ. நறுமணமுடைய மலர்கள்* | |
| 4. | விரிச்சி என்ற சொல்லின் பொருள் என்ன? | | | |
| | *அ. நற்சொல்* | ஆ. தீயசொல் | இ. பழையசொல் | |
| 5. | மூதூர் - இலக்கணக்குறிப்பு எழுதுக. | | | |
| | *அ. பண்புத்தொகை* | ஆ. வினைத்தொகை | இ. உவமைத்தொகை | |
| 2 | நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு<br>வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை<br>நீர்செல, நிமிர்ந்த மாஅல் போல,<br>பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,<br>கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி | | | |
| 1. | தமிழர்கள் ............ இயைந்த வாழ்வைக் கொண்டிருந்தனர்? | | | |
| | அ. செயற்கையோடு | ஆ. கடலோடு | இ. மலையோடு | *ஈ. இயற்கையோடு* |
| 2. | முல்லைப்பாட்டு ................ நூல்களுள் ஒன்றாகும். | | | |
| | *அ. பத்துப்பாட்டு* | ஆ. எட்டுத்தொகை | இ. பதிற்றுப்பத்து | ஈ. நாலடி நானூறு |
| 3. | முல்லைப்பாட்டு .................. பாவால் இயற்றப்பட்டது. | | | |
| | அ. வஞ்சிப்பா | ஆ. வெண்பா | இ. கலிப்பா | *ஈ. ஆசிரியப்பா* |
| 4. | நனந்தலை – சொல் உணர்த்தும் பொருள் யாது? | | | |
| | அ. சிறிய | *ஆ. அகன்ற* | இ. குறுகிய | ஈ. நீண்ட |
| 5. | நேமி என்னும் சொல்லின் பொருள் யாது? | | | |
| | *அ. சக்கரம்* | ஆ. சங்கு | இ. உலகம் | ஈ. பூமி |
| 6. | கோடு என்னும் சொல் உணர்த்தும் பொருள் யாது? | | | |
| | அ. சிலை | ஆ. கொலை | இ. கலை | ஈ. மலை |
| 7. | தடக்கை என்னும் சொல்லின் இலக்கணம் யாது? | | | |
| | அ. உரிச்சொல் தொடர் | ஆ. இடைச்சொல் தொடர் | இ. பெயர்ச்சொல் தொடர் | ஈ. வினைச்சொல் தொடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | **சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்<br>உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்<br>நடுங்கு சுவல் அசைத்த கையள்,“ கைய<br>கொடுங்கோற் கோவலர் பின்நின்று உய்த்தர<br>இன்னே வருகுவர், தாயர்” என்போள்<br>நன்னர் நன்மொழி கேட்டனம்** | | | |
| **1.** | சுவல் என்னும் சொல்லின் பொருளை எழுதுக. | | | |
| | **அ. தோல்** | **ஆ. தோள்** | **இ. தேள்** | **ஈ. சுவர்** |
| **2.** | நற்சொல் கேட்டவர்கள் யார்? | | | |
| | **அ. முதுபெண்டிர்** | **ஆ. சிறுவர்** | **இ. சிறுமியர்** | **ஈ. ஆய்மகள்** |
| **3.** | பாடலில் வந்துள்ள எதுகைச் சொற்கள் | | | |
| | **அ. நடுங்கு – நன்னர்** | **ஆ. நோக்கி – கோவலர்** | **இ. சிறுதாம்பு – உறுதுயர்** | **ஈ. கேட்டனம் - சுவல்** |
| **4.** | ‘உறுதுயர்’ - இலக்கணக்குறிப்பு எழுதுக | | | |
| | **அ. பெயரெச்சம்** | **ஆ. வினையெச்சம்** | **இ. வினைமுற்று** | **ஈ. வினைத்தொகை** |
| **5.** | ஆய்மகள் என்பவர் யார்? | | | |
| | **அ. மகள்** | **ஆ. சிறுமி** | **இ. இடையர் மகள்** | **ஈ. தேவர் மகள்** |
| **6.** | இன்னே வருகுவர் யார்? | | | |
| | **அ. கன்றின் தாய்** | **ஆ. இடைமகளின் தாய்** | **இ. முதுபெண்டிர்** | **ஈ. சிறு பெண்கள்** |
| | **இலக்கணம் - தொகைநிலைத் தொடர்கள்** | | | |
| | **சான்று தருக.** | | | |
| 1. | உவமைத்தொகை | | | |
| | *அ. பவளவாய்* | ஆ. கார்குழல் வந்தாள் | இ. ஊசி குத்தினான் | |
| 2. | வேற்றுமைத்தொகை | | | |
| | *அ. சிலைவடித்தான்* | ஆ. பவளம் போன்றது | இ. இராமன் வந்தான் | |
| 3. | பண்புத்தொகை | | | |
| | *அ. வட்டக்கல்* | ஆ. ஒரு முட்டை | இ. ஒரு ரூபாய் | |
| 4. | அன்மொழித்தொகை | | | |
| | அ. செந்தமிழ் | ஆ. ஊறுகாய் | *இ. கயல்விழி வந்தாள்* | |
| 5. | உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை | | | |
| | *அ. தமிழ்த்தொண்டு* | ஆ. பனைமரம் | இ. இராமா காப்பாற்று | |
| 6. | இருபெயரொட்டுப்பண்புத்தொகை | | | |
| | *அ. பனைமரம்* | ஆ. ஊறுகாய் | இ. சுடுசோறு | |
| 7. | உம்மைத்தொகை | | | |
| | அ. செவ்விதழ் | ஆ. நிலாமுகம் | *இ. அண்ணன் தம்பி* | |

| | | | |
|---|---|---|---|
| 8. | வினைத்தொகை | | |
| | அ. கதிரவன் | ஆ. மேல்திசை | *இ. அலைகடல்* |
| 9. | விரியுவமை | | |
| | *அ. அன்னம் போன்ற நடை* | ஆ. முத்துப்பல் | இ. வெற்றிலைப்பாக்கு |
| 10. | பண்பு உருபுகள் | | |
| | *அ. ஆன, ஆகிய* | ஆ. போல, போன்ற | இ. சால, தவ |
| | **கோடிட்ட இடங்களை நிரப்புக.** | | |
| 1. | ஒரு பொருளைச் சிறப்பித்துக் கூற அதைவிடச் சிறந்த வேறொரு பொருளோடு ஒப்பிடுவது ............................ எனப்படும். | | |
| | *அ. உவமை* | ஆ. உவமேயம் | இ. உவம உருபு |
| 2. | சிறப்பிக்கப்படும் பொருளுக்கு ஒப்பாகக் காட்டப்படும் பொருள் ........... | | |
| | அ. உவமேயம் | *ஆ. உவமை* | இ. உவம உருபு |
| 3. | தொகைநிலைத்தொடர்கள் ...................... வகைப்படும். | | |
| | அ. நான்கு | *ஆ. ஆறு* | இ. ஒன்பது |
| 4. | ஒரு தொடரில் வேற்றுமை உருபும் அதன் பொருளை விளக்கும் பண்பும் மறைந்து வருவது ..................... எனப்படும். | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை | *இ. உருபும் பயனும் உடன்தொக்கத் தொகை* |
| 5. | தொகை உவமையின் வேறுபெயர் ....................... | | |
| | *அ. உவமைத்தொகை* | ஆ. உம்மைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 6. | காலம் கரந்த பெயரெச்சம் .................. எனப்படும். | | |
| | அ. உவமைத்தொகை | *ஆ. வினைத்தொகை* | இ. பண்புத்தொகை |
| 7. | வினைப்பகுதியும் அடுத்து பெயர்ச்சொல்லும் அமைந்த சொற்றொடர்களிலேயே ........................ அமையும். | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. உம்மைத்தொகை | *இ. வினைத்தொகை* |
| 8. | எண்ணல், எடுத்துல், முகத்தல், நீட்டல் எனும் நான்கு அளவுப் பெயர்களைத் தொடர்ந்து வரும் தொகை ................. ஆகும். | | |
| | அ. உவமைத்தொகை | *ஆ. உம்மைத்தொகை* | இ. பண்புத்தொகை |
| 9. | வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை ஆகிய தொகைநிலைத் தொடர்கள் அவை அல்லாத வேறு சொற்கள் மறைந்து நின்று பொருள் தருவது ..................................... எனப்படும். | | |
| | *அ. அன்மொழித்தொகை* | ஆ. உம்மைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 10. | சிறப்புப்பெயர் முன்னும் பொதுப்பெயர் பின்னும் நின்று இடையில் ஆகிய என்னும் பண்பு உருபு தொக்கி வருவது .......................... தொகையாகும். | | |
| | அ. அன்மொழித் | *ஆ. இருபெயரொட்டுப் பண்புத்* | இ. பண்புத் |

| | | | |
|---|---|---|---|
| 11. | தொக்கி வருதல் என்றால் .................... என்று பொருள். | | |
| | அ. வெளிப்பட்டு வருதல் | *ஆ. மறைந்து வருதல்* | இ. வேகமாக வருதல் |
| 12. | உவமைக்கும் பொருளுக்கும் இடையில் உவம உருபு மறைந்து வருவது ...................... எனப்படும். | | |
| | *அ. உவமைத்தொகை* | ஆ. உம்மைத்தொகை | இ. பண்புத்தொகை |
| | **கூறியவாறு செய்க.** | | |
| 1. | மதிமுகம் - உவமையை எடுத்து எழுதுக | | |
| | *அ. மதி* | ஆ. முகம் | இ. முகமதி |
| 2. | ஊறுகாய் - இறந்தகாலப் பெயரெச்சம் ஆக்குக. | | |
| | அ. ஊறும் காய் | *ஆ. ஊறிய காய்* | இ. ஊறுகின்ற காய் |
| 3. | தாயும் சேயும் - உம்மைத்தொகை ஆக்குக. | | |
| | அ. தாயும் சேய் | *ஆ. தாய்சேய்* | இ. தாய் சேயும் |
| 4. | மலர்க்கை – விரி உவமையாக்குக. | | |
| | *அ. மலர் போன்ற கை* | ஆ. கை போன்ற மலர் | இ. போன்ற மலர்க்கை |
| 5. | முழவு உறழ் தடக்கை – உவம உருபைச் சுட்டுக. | | |
| | அ. முழவு | *ஆ. உறழ்* | இ. தடக்கை |
| 6. | பாய்கின்ற புலி – வினைத்தொகை ஆக்குக. | | |
| | அ. பாயும் புலி | *ஆ. பாய்புலி* | இ. புலி பாயும் |
| 7. | பொற்றொடி வந்தாள் - எவ்வகைத்தொடர் என அறிக. | | |
| | *அ. அன்மொழித்தொகை* | ஆ. உம்மைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 8. | “கு” என்னும் வேற்றுமை உருபின் வகை என்ன? | | |
| | *அ. நான்காம் வேற்றுமை* | ஆ. இரண்டாம் வேற்றுமை | இ. ஆறாம் வேற்றுமை |
| 9. | வெற்றிலைப் பாக்கு – எண்ணும்மை ஆக்குக. | | |
| | அ. வெற்றில பாக்கு | *ஆ. வெற்றிலையும் பாக்கும்* | இ. வெத்தல பாக்கு |
| 10. | கனிவாய் - உவமேயம் எது? | | |
| | அ. கனி | *ஆ. வாய்* | இ. வாய்கனி |
| | **இலக்கணக்குறிப்பு எழுதுக.** | | |
| 1. | இன்மொழி | | |

| | | | |
|---|---|---|---|
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 2. | கொல்களிறு | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 3. | சிவப்புச்சட்டை பேசினார் | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. அன்மொழித்தொகை | இ. பண்புத்தொகை |
| 4. | மார்கழித் திங்கள் | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. இருபெரொட்டுப் பண்புத்தொகை |
| 5. | வீசு தென்றல் | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 6. | மதுரை சென்றார் | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வேற்றுமைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 7. | கரும்பலகை | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 8. | விரி உவமை | | |
| | அ. முத்துப்பல் | ஆ. பல்முத்து | இ. முத்துப் போன்ற பல் |
| 9. | வேய்த்தோள் | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 10. | தொகை உவமை | | |
| | அ. பாத தாமரை | ஆ. தமரை போன்ற பாதம் | இ. தாமரைப்பாதம் |
| 11. | சொல்லிலக்கணம் | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வேற்றுமைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 12. | எழுகதிர் | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 13. | பால்குடம் | | |
| | அ. உருபும் பயனும் உடன்தொக்கத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 14. | பூரி கிழங்கு | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. உம்மைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 15. | செங்காந்தள் | | |

| | | | |
|---|---|---|---|
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 16. | சாரைப்பாம்பு | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. இருபெரொட்டுப் பண்புத்தொகை |

## துணைப்பாடம் - புயலிலே ஒரு தோணி – ப. சிங்காரம்

**குறிப்புச் சட்டகம்**

- **முன்னுரை**
- **கடற்பயணத்தில் கண்ட காட்சிகள்**
- **தொங்கான் படும் பாடு**
- **கடற்கூத்தில் தொங்கானின் நிலை**
- **தொங்கான் மிதந்து சென்ற காட்சி**
- **இயல்பு நிலைக்குத் திரும்புதல்**
- **முடிவுரை**

முன்னுரை : பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தெற்காசிய நாடுகளில் பல்வேறு தமிழ்க்குடிகள் புலம் பெயர்ந்தனர். அவ்வாறு புலம் பெயர்ந்த தமிழர்களில் ஒருவரே நம் நூலாசிரியர் ப.சிங்காரம். அவர் இந்தோனேசியாவில் இருந்தபோது இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தது. அந்த நேரடி அனுபவங்களோடு கற்பனையும் கலந்த கதை தான் ‘புயலிலே ஒரு தோணி’.

கடற்பயணத்தில் கண்ட காட்சிகள் : கொளுத்திக் கொண்டிருந்த வெயில் இமை நேத்தில் மறைந்துவிட்டது. மேகக் கூட்டங்கள் ஒன்று திரண்டு கும்மிருட்டாய் நின்றன. புழுங்கிற்று. காற்று இல்லாமல் அலைகள் மொழுமொழுவென நெளிந்தன. பாண்டியன் எழுந்துபோய் அண்ணாந்து பார்த்தான். எதிர்திசையில் வானையும் கடலையும் மாறி மாறி பார்த்தவாறு கப்பித்தானுடன் மாலுமிகள் பரபரப்பாக பேசிக் கொண்டிருந்தார்கள். விவரிக்க முடியாத உணர்வு, உறுத்தல் ஒவ்வொருவர் உணர்விலும் பட்டது.

தொங்கான் படும் பாடு : இடி, மின்னல் கீற்றுகள் தொங்கானையும் அதிலிருந்த நடப்பன கிடப்பனவற்றையும் உலுக்கியது. வானம் உடைந்து மழை கொட்டுகொட்டென்று கொட்டியது. சூறாவளி, மழைக்காற்று ஆடிக்குதித்து கெக்களித்தன. அலையோட்டம் தெரியவில்லை. வானுடன் கடல் கலந்து விட்டது போல காற்றுடன் இணைந்துவிட்டது. தொங்கான் அப்படியும் இப்படியும் மாயத்தாவிக்குதித்து விழுந்து திணறித் தத்தளித்தது. எலும்பு முறிவது போல நொறுநொறு நொறுங்கல் ஒலி.

கடல் கூத்தில் தொங்கானின் நிலை : திடுமென அமைதி பாய்ந்து வந்து மிரட்டியது. பலகை அடைப்பிலிருந்து கப்பித்தான் கத்துகிறான். பாண்டியன் எழுந்தான். எங்கெங்கோ இடுக்குகளில் முடங்கிக் கிடந்த உருவங்கள் தலைதூக்கின. தொங்கான் தள்ளாடுகிறது. மலைத்தொடர் போன்ற அலைகள் மோதித் தாக்குகின்றன. வானும் கடலும், வளியும் மழையும் மீண்டும் ஒன்றுகூடி மழை கொட்டுகிறது. காற்றில் கடல் வெறிக்கூத்தாடுகிறது. தொங்கான் நடுநடுங்கித் தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து நொறுங்குகிறது.

தொங்கான் மிதந்து சென்ற காட்சி : திடீரென சூரிய வெளிச்சம். தொங்கானில் நீர் நெளிந்தது. பாய்மரம் ஒடிந்து கிடக்கிறது. கப்பலில் இருந்த நீரை மாலுமிகள் இறைத்து ஊற்றுகின்றனர். ஓட்டையை அடைக்கிறார்கள். ஆப்பு அடிக்கிறார்கள். தொங்கானின் இருபுறமும் தேயிலைப் பெட்டிகள் மிதந்து வர தொங்கான் தன்வசமின்றித் தடுமாறிச் செல்கிறது. கடற்கூத்தில் தூக்கியெறியப்பட்ட பெட்டிகளும் சிப்பங்களும் உடன் மிதந்து சென்றன.

இயல்பு நிலைக்குத் திரும்புதல் : கப்பித்தான் வானையும் கடலையும் பார்தர்துவிட்டு இனிமேல் பயமில்லை. இரண்டு நாளில் கரையைப் பார்க்கலாம் என்றார். தொங்கான் மிதந்து சென்றது. கடல்கூத்துக்கு ஐந்தாம் நாள் மரப்பச்சை தெரிவது போலிருந்தது. அடுத்தநாள் முற்பகலில் கரையை நெருங்கி நின்றது.

முடிவுரை : தொங்கானில் இருந்த பயணிகள் சுங்க அலுவலகத்திற்குச் சென்று பயணச்சீட்டுகளை நீட்டினர். அதிகாரி
சீட்டுகளில் முத்திரை வைத்துத் திருப்பிக் கொடுத்தார். புயலின் பெருங்காட்சியை, சீற்றத்தை இக்கதை கண்முன் விவரிக்கின்றது.

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

## இயற்கை காப்போம்



❖ **காட்டை அழித்தால்**
**காலன் வருவான்**
**காலமும் மாறிப் போய்விடுமே!**
**காற்றைச் சுமக்கும் நிலை வருமே!**
**மாசு நீங்கிய வாழ்வைப் பெறவே**
**மரங்கள் நடுவோமே!**
**மண்ணின் மாண்பைக் காத்திடுவோமே!**

❖ **மரங்கள் நடச் சொன்னோம்!**
**மறுத்தார்கள்...................**
**கரும் புகையைத் தவிர்க்கச் சொன்னோம்!**
**மறுத்தார்கள்...................**
**மழைநீர் சேகரிக்கச் சொன்னோம்!**
**மறுத்தார்கள்.................**
**இன்று நீரை விலைக்கு வாங்குகிறோம்!**
**நாளை காற்றையும் விலைக்கு வாங்க வேண்டிவருமோ?**

## இயல் - மூன்று

## உரைநடை - விருந்து போற்றுதும்

**1. ஏழ்மையிலும் விருந்து போற்றிய தமிழர் பண்பாட்டை விவரி?**

- விருந்தளிக்க செல்வம் மட்டும் இருந்தால் போதாது.
- விருந்து கொடுக்க வேண்டும் என்ற எண்ணமும் இருத்தல் வேண்டும்.
- பணம் இல்லை என்றாலும் எண்ணம் இருந்தால் தன்னிடம் இல்லை என்றாலும் பிறரிடம் கடன் பெற்றாவது விருந்து அளிக்கப்படும்.
- தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி. இதனை
  "குரல் உனக்கு விதைத் தினை உரல்வாய்ப் பெய்து
  சிறிது புறப்பட்டன்றோ இவள்"
  என புறநானூறு காட்சிப்படுத்துகிறது.
- நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன்.
- இன்றும் விருந்தினர் வந்ததால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு.

**2. விருந்தோம்பல் அன்றும், இன்றும் எவ்வாறு மாறியுள்ளது என எழுதுக.**

| அன்று | இன்று |
|---|---|
| அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினராக ஏற்றனர். | இன்று புதியவர்களை விருந்தினராக ஏற்பதே இல்லை |
| வீட்டின் முன்புறம் திண்ணையும் தலை வைக்கத் திண்டும் அமைத்துக் கட்டினர். | திண்ணைகள் வைத்துக் கட்டுவதே இல்லை |
| அனைத்துஇல்லம் சார்ந்த விழாக்களும் இல்லத்திலேயே கொண்டாடி விருந்தினர்களைப் போற்றினர். | அனைத்து இல்லம் சார்ந்த விழாக்களும் திருமணக் கூடங்களில் நடத்தப்படுகின்றன. |
| தமிழர் உள்ளங்களிலும் இல்லங்களிலும் விருந்தோம்பல் பண்பு செழித்திருந்தது. | அனைத்து ஏற்பாடுகளும் திருமண ஏற்பாட்டாளர்களால் செய்யப்படுகின்றன. |

**3. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.**

- ✓ எங்கள் இல்லத்திற்கு என் தந்தையின் நண்பர்கள் பொங்கல் திருநாளன்று வந்தனர்.
- ✓ நாங்கள் அவர்களை அன்போடு வரவேற்றோம். வந்தவர்களை வாருங்கள் என்று அழைத்து அவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுத்தோம்
- ✓ அவர்களை அமரவைத்து அவர்களிடம் நலம் விசாரித்தும் என் தாய், தந்தையர் பேசிக் கொண்டு இருந்தனர்.
- ✓ சிறிது நேரம் கழித்து அவர்கள் குடிக்கப் பழச்சாற்றினைக் கொடுத்தோம்

| | |
|---|---|
| | ✓ பிறகு அவர்கள் உணவருந்த சுவையான உணவு சமைத்து வைத்திருந்தோம்.<br>✓ வந்தவர்களை உணவருந்த அழைத்து வந்து வாழையிலை போட்டு கூட்டு பொரியல், இனிப்பு, வடை , பாயசம் என்று அறுசுவை உணவைப் படைத்தோம்.<br>✓ அவர்கள் உண்டபின் அவர்களுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்து இளைப்பாற வைத்தோம்.<br>✓ பின் அவர்கள் வீட்டிற்குச் செல்லும் போது அவர்களுக்குப் பரிசுப்பொருள் கொடுத்து வீட்டின் வாசல் வரை சென்று வழி அனுப்பி வைத்தோம். |
| 4. | ***விருந்து போற்றுதல் அறம் என்பதை நிறுவுக*** |
| | ➢ தமிழர்கள் விருந்தினரைப் போற்றுதலை ஒரு அறமாகக் கருதினர்.<br>➢ திருவள்ளுவர் விருந்தோம்பலுக்கு ஒரு அதிகாரத்தையே படைத்துள்ளார்.<br>➢ 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்னும் குறளில் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.<br>➢ கோவலனைப் பிரிந்து வாழும் கண்ணகி அவனைப் பிரிந்ததை விட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்துகிறாள்.<br>➢ கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாகக் கமபர் குறிப்பிட்டுள்ளார்.<br>➢ கலிங்கத்துப் பரணியிலும் செயங்கொண்டார் விருந்திடுவோரின் முகமலர்ச்சி பற்றிக் குறிப்பிட்டுள்ளார். |
| 5. | **வாழை இலையில் விருந்து பற்றி எழுதுக** |
| | ❖ தமிழர் பண்பாட்டில் வாழையிலைக்கு தனி இடம் உண்டு<br>❖ தலைவாழை இலையில் விருந்தளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.<br>❖ வாழையிலையில் பல்வேறு மருத்துவப் பயன்கள் உள்ளன.<br>❖ உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் விரிந்த பகுதியும் வரவேண்டும்.<br>❖ இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலிய அளவில் சிறிய உணவுகளையும்<br>❖ வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலிய அளவில் பெரிய உணவு வகைகளையும்<br>❖ நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப பரிமாறுவார்கள். |
| | **செய்யுள் - காசிக்காண்டம்** |
| 1. | **விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.** |

| | |
|---|---|
| | ➢ விருந்தினராக ஒருவர் வந்தால், அவரை வியந்து உரைத்தல்.<br>➢ நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்<br>➢ முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல்<br>➢ வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல்<br>➢ விருந்தினர் எதிர் நிற்றல்<br>➢ அவர் முன் மனம் மகிழும்படிப் பேசுதல்<br>➢ அவர் அருகிலேயே அமர்ந்து கொள்ளுதல்<br>➢ அவர் விடைபெற்றுச் செல்லும் போது வாயில் வரை பின் தொடர்ந்து செல்லல்<br>➢ விருந்தினரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல்<br>ஆகிய ஒன்பதும் விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கமாகும். |
| | **செய்யுள் - மலைபடுகடாம்** |
| 1. | **கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?** |
| | ❖ பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப் போகும் கூத்தரைக் வழிப்படுத்துதல்<br>❖ பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்: இரவில் சேர்ந்து தங்குங்கள்.<br>❖ ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள்.<br>❖ அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.<br>❖ கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.<br>❖ அங்குள்ளவரிடம் நன்னின் கூத்தர்கள் என்று சொல்லுங்கள்.<br>❖ அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள்<br>❖ உறவினர்கள் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர்<br>❖ நீண்ட வழியைக் கடந்து வந்த துன்பம் தீர இனிய சொற்களைக் கூறுவர்<br>❖ அங்கே நெய்யில் வெந்த மாமிசத்தின் பொறியலையும் தினைச் சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள். |
| 2. | **ஆற்றுப்படுத்தல் என்பது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.** |
| | ✓ ஆற்றுப்படுத்துதல் என்பது வள்ளலை நாடி வருபவர்களை அழைத்து யாம் இவ்விடத்தேச் சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம்.<br>✓ நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை ஆகும்.<br>✓ ஆற்றுப்படுத்தல் என்பது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக இருக்கிறது.<br>✓ தன்னிடம் இல்லை என்றோ தெரியாது என்றோ கூறாமல் யார் வந்தாலும் அவர்களுக்கு வழிகாட்டுதலாக இருக்கிறது.<br>✓ அன்றைய ஆற்றுப்படுத்தல் இன்றைய வழிகாட்டுதலாக மாறியுள்ளது. |

| | |
|---|---|
| | ✓ இது ஒவ்வொரு நிலையிலும் மாற்றம் அடைந்துள்ளது. உதவி தேவைப்படுபவர்களுக்கு பெரும் உதவியாக இருந்து வருகிறது.<br>✓ இதுவே இன்றைய ஆற்றுப்படுத்தல் ஆகும். |
| 3. | **மலைபடுகடாம் குறிப்பு எழுதுக.** |
| | ❖ பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று<br>❖ 583 அடிகளைக் கொண்ட நூல்<br>❖ கூத்தராற்றுப்படை என்றும் அழைக்கப்படுகிறது.<br>❖ மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் பலவகை ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் மலைபடுகடாம் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.<br>❖ நன்னன் என்னும் குறுநில மன்னனைப் பாட்டுடைத் தலைவனாக் கொண்டு பாடப்பட்டது.<br>❖ ஆசிரியர் பெருங்கௌசிகனார். |
| | **துணைப்பாடம் - கோபல்லபுரத்து மக்கள்** |
| | குறிப்புச்சட்டகம்<br>முன்னுரை<br>அதிகாலை கிராமத்துக் காட்சி<br>அன்னமய்யா கண்ட காட்சி<br>அன்னமய்யாவின் செயல்<br>அன்னமய்யாவின் விருந்தோம்பல்<br>அன்னமய்யாவின் திருப்தி<br>முடிவுரை.<br><br>**முன்னுரை:**<br>கிராமத்து வெள்ளந்தி மனிதர்கள் காட்டும் விருந்தோம்பல், இயல்பான வரவேற்பும் எளிமையான உணவும் பசித்தவர்களுக்குத் தம்மிடம் இருப்பதைக் கொடுக்கிற மனித நேயம் ஆகியவற்றை இக்கதைப்பகுதி எடுத்துக் கூறுகிறது.<br>**அதிகாலை கிராமத்துக் காட்சி:**<br>அதிகாலை நேரத்தில் பாச்சல் எடுத்து முடித்துவிட்டு கஞ்சியைக் குடிக்க உட்காரும் வேளையில் அன்னமய்யா யாரோ ஒரு சன்னியாசியைக் கூட்டிக் கொண்டு வருவதைக் கண்டான் சுப்பையா. வரட்டும் அவருக்கும் கஞ்சி ஊற்றி நாமும் குடிப்போம் என்றார். அந்தப் புஞ்சை சாலையோரத்தில் தேசாந்திரிகள் வந்து இவர்களிடம் தண்ணீரோ, கஞ்சியோ சாப்பிட்டு விட்டுப் போவது வழக்கம்.<br>**அன்னமய்யா கண்ட காட்சி:** |

| | |
|---|---|
| | சாலையோரத்தில் புளிய மரத்தில் சாய்ந்து உட்கார்ந்திருந்தவர் சன்னியாசி இல்லை அவர் ஒரு வாலிபர் என்பதை அன்னமய்யா அறிந்து கொண்டார். அவருடைய முகம் பசியால் வாடி இருந்தது. அன்னமய்யாவைப் பார்த்தவுடன் சிறு புன்னகை காட்டினான்.<br>**அன்னமய்யாவின் செயல்:**<br>அன்னமய்யாவைப் பார்த்து குடிக்க தண்ணீர் கிடைக்குமா என்று கேட்டதற்கு, அருகு எடுத்துட்டு இருக்கிறவர்களிடம் நீச்சுத் தண்ணீர் வாங்கி வரட்டுமா? என்று கேட்டான் அன்னமய்யா. அந்த வாலிபன் நாமே அங்கு போய் விடலாமா என்றான். அன்னமய்யா தனது தோளைப் பிடித்து நடந்து வரும்படி கேட்டும் அந்த வாலிபன் மெதுவாக நடந்தான்.<br>**அன்னமய்யாவின் விருந்தோம்பல்:**<br>வேப்பமர நிழலில் இருந்த ஒரு மண் கலயத்தில் மேல் வைக்கப்பட்ட கல்லை அகற்றி சிரட்டையில் பதமான வடித்த நீரைக் குடிங்க எனக் கொடுத்தான். பிறகு தெளிவு மறைந்து சோற்றின் மகுளி மேலே வந்ததும் வார்த்துக் கொடுத்தான். பின் வயலுக்கு அழைத்துச் சென்று கம்மஞ்சோற்றைச் சாப்பிட வைத்தான். அந்த வாலிபன், அன்னமய்யா என்ற பெயர் இவருக்கு எவ்வளவு பொருத்தம் என்று நினைத்துக் கொண்டான்.<br>**அன்னமய்யாவின் திருப்தி:**<br>வந்தவனுக்கு எப்படி ஒரு நிறைவு ஏற்பட்டதோ அதைவிட மேலான திருப்தி அன்னமய்யாவிற்கு ஏற்பட்டது. வயிறு நிறைந்ததும் தூங்கிவிடும் குழந்தையைப் பார்ப்பதுபோல அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான் அன்னமய்யா. பின்பு வயலுக்கு அழைத்துச் சென்று கம்பஞ்சோற்றையும் துவையலையும் சாப்பிடக் கொடுத்து பசியாற்றி திருப்தியடைந்தான்.<br>**முடிவுரை:**<br>கரிசல் காட்டு மக்களின் கலாச்சாரம், வாழ்க்கை முறைகள், வட்டார வழக்குச் சொற்களில் பேசும் இயல்பு, பசித்த வேளையில் வந்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிற மனித நேயம் ஆகியவற்றை ஆசிரியர் காட்சிப்படுத்துகிறார்.<br>******************* |
| | **பாடல் அடியொற்றிய வினாக்கள்** |
| | **எழுதல் முன் மகிழ்வன செப்பல்<br>பொருந்து மற்று அவன் தன் அருகுற இருத்தல்<br>போமெனில் பின் செல்வதாதல்<br>பரிந்து நன் முகமன் வழங்கல்** |

| | | | |
|---|---|---|---|
| 1. | **இச்செய்யுள் அடிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் யாது?** | | |
| | **அ. காசிக்காண்டம்** | **ஆ. மலைபடுகடாம்** | **இ. முல்லைப்பாட்டு** |
| 2. | **இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் யார்?** | | |
| | **அ. நப்பூதனார்** | **ஆ. அதிவீரராம பாண்டியர்** | **இ. குமரகுருபரர்** |
| 3. | **இந்நூல் எந்த நகரத்தின் பெருமைகளைக் கூறுகிறது?** | | |
| | **அ. கன்னியாகுமரி** | **ஆ. இராமேஸ்வரம்** | **இ. காசி** |
| 4. | **அருகுற என்னும் சொல்லின் பொருளை எழுதுக.** | | |
| | **அ. அருகில்** | **ஆ. தொலைவில்** | **இ. மேல்மாடியில்** |

| | | | |
|---|---|---|---|
| 5. | வழங்கல் என்பதன் இலக்கணக்குறிப்பு எழுதுக. | | |
| | அ. பண்புப்பெயர் | ஆ. தொழிற்பெயர் | இ. காலப்பெயர் |
| 6. | செப்பல் என்னும் சொல்லின் பொருளை எழுதுக. | | |
| | அ. செருப்பு | ஆ. கூறுதல் | இ. எழுதுதல் |
| | அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்<br>சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி<br>நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்<br>மான விறல்வேள் வயிரியம் எனினே | | |
| 1. | இச்செய்யுள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன? | | |
| | அ. காசிக்காண்டம் | ஆ. மலைபடுகடாம் | இ. முல்லைப்பாட்டு |
| 2. | இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் யார்? | | |
| | அ. பெருங்கௌசிகனார் | ஆ. நப்பூதனார் | இ. மாமூலனார் |
| 3. | மலைபடுகடாம் ............. எனவும் அழைக்கப்படுகிறது. | | |
| | அ. பாணாற்றுப்படை | ஆ. கூத்தராற்றுப்படை | இ. சிறுபாணாற்றுப்படை |
| 4. | இந்நூலின் பாட்டுடைத் தலைவன் பெயர் என்ன? | | |
| | அ. மன்னன் | ஆ. நன்னன் | இ. கண்ணன் |
| 5. | நரலும் என்னும் சொல்லின் பொருள் யாது? | | |
| | அ. ஒலிக்கும் | ஆ. சொல்லும் | இ. செல்லும் |
| 6. | ஆரி என்னும் சொல்லின் பொருள் யாது? | | |
| | அ. கருமை | ஆ. பெருமை | இ. அருமை |
| 7. | வயிரியம் என்பது யாரைக் குறிக்கிறது? | | |
| | அ. கூத்தர் | ஆ. உழவர் | இ. அரசர் |
| | நும்இல் போல நில்லாது புக்கு<br>கிழவிர் போலக் கேளாது கெழீஇ<br>சேட் புலம்பு அகல இனிய கூறி<br>பருஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு<br>குரூஉக்கண் இறடிப் பொம்மல் பெறுகுவிர் | | |
| 1. | இச்செய்யுள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன? | | |
| | அ. காசிக்காண்டம் | ஆ. மலைபடுகடாம் | இ. முல்லைப்பாட்டு |
| 2. | இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் யார்? | | |
| | அ. பெருங்கௌசிகனார் | ஆ. நப்பூதனார் | இ. மாமூலனார் |
| 3. | வேவை என்பதன் பொருள் யாது? | | |
| | அ. இறந்தது | ஆ. வெந்தது | இ. பறந்தத |
| 4. | இறடி என்பது எதனைக் குறிக்கிறது? | | |
| | அ. தினையை | ஆ. கரடியை | இ. விலங்கை |
| 5. | பொம்மல் என்பதன் பொருள் யாது? | | |
| | அ. உணவு | ஆ. வழி | இ. விளக்கம் |
| 6. | கெழீஇ - இலக்கணக்குறிப்பு யாது? | | |

| | | | |
|---|---|---|---|
| | அ. செய்யுளிசை அளபெடை | ஆ. சொல்லிசை அளபெடை | இ. இன்னிசை அளபெடை |
| 7. | பரூஉக்குறை - இலக்கணக்குறிப்பு யாது? | | |
| | அ. செய்யுளிசை அளபெடை | ஆ. சொல்லிசை அளபெடை | இ. இன்னிசை அளபெடை |
| | | | |
| | இயல் - 3 – தொகாநிலைத் தொடர்கள் | | |
| | சான்றுகள் எழுதுக: | | |
| 1. | எழுவாய்த் தொடர் | | |
| | அ. கபிலன் வந்தான் | ஆ. கண்ணா வா | இ. இராமா காப்பாற்று |
| 2. | விளித்தொடர் | | |
| | அ. மணி அடித்தது | ஆ. கண்ணா வா, ஒளியே வா | இ. காற்று வீசியது |
| 3. | வேற்றுமைத்தொடர் | | |
| | அ. வீட்டைக் கட்டினான், மரத்தை வெட்டினான்,பாடசாலைக்குச் சென்றான்<br>ஆ. பல்போன்ற முத்து<br>இ. புயல் அடித்தது | | |
| 4. | இடைச்சொல் தொடர் | | |
| | அ. மற்றுப்பிற | ஆ. நாடகக்கலை | இ. ஆடிய மயில் |
| 5. | வினையெச்சத்தொடர் | | |
| | அ. படித்த புத்தகம் | ஆ. சென்ற இடம் | இ. ஓடி வா, சென்று கண்டேன் |
| 6. | பெயரெச்சத்தொடர் | | |
| | அ. பறந்த விமானம், பாடும் பறவை | ஆ. படித்தான் | இ. சென்று வந்தான் |
| 7. | வினைமுற்றுத்தொடர் | | |
| | அ. சென்று வந்தான் | ஆ. கண்டாள் கண்ணகி, பாடினாள் விமலா, கூறினாள் வழக்கை | இ. படித்துப் பார்த்தான் |
| 8. | இடைச்சொல் தொடர் | | |
| | அ. அவரே சொன்னார், சொல்லவே இல்லை | ஆ. வந்த இடம், சொன்னது யார்? | இ. படித்துப் பார், ரோஜா மலர் |
| 9. | உரிச்சொல்தொடர் | | |
| | அ. படித்த புத்தகம் | ஆ. சென்ற இடம் | இ. சாலப் புகழ்ந்தான், உறுதுணை |
| 10. | அடுக்குத்தொடர் | | |
| | அ. பாம்பு பாம்பு<br>ஓடு ஓடு | ஆ. சலசல, பளபள | இ. குடுகுடு, கடகட |
| | | | |
| | கோடிட்ட இடங்களை நிரப்புக | | |
| 1. | ஒரு தொடரில் இரு சொற்கள் அமைந்து இரண்டிற்கும் இடையில் சொல்லோ உருபோ மறையாது பொருளை உணர்த்துவது ..................... எனப்படும். | | |
| | அ. தொகைநிலைத்தொடர் | ஆ. தொகாநிலைத்தொடர் | இ. வேற்றுமைத்தொடர் |

| | | | |
|---|---|---|---|
| 2. | தொகாநிலைத்தொடர் ............................ வகைப்படும். | | |
| | அ. ஒன்பது | ஆ. ஆறு | இ. எட்டு |
| 3. | விளியுடன் வினை தொடர்வது ...................... ஆகும். | | |
| | ஆ. வினைமுற்று | ஆ. பெயரெச்சம் | இ. விளித்தொடர் |
| 4. | முற்றுப் பெறாத வினை பெயர்ச்சொல்லைத் தொடர்வது ............... எனப்படும். | | |
| | அ. விளித்தொடர் | ஆ. பெயரெச்சத்தொடர் | இ. வினையெச்சத்தொடர் |
| 5. | வேற்றுமை உருபுகள் வெளிப்பட அமையும் தொடர்கள் .................. தொகாநிலைத் தொடர்கள் ஆகும். | | |
| | அ. வேற்றுமை | ஆ. உவமை | இ. அன்மொழி |
| 6. | இடைச்சொல்லுடன் பெயரோ, வினையோ தொடர்வது .............. தொடர் ஆகும். | | |
| | அ. உரிச்சொல் | ஆ. பெயர்ச்சொல் | இ. இடைச்சொல் |
| 7. | ஒரு சொல் இரண்டு மூன்று முறை அடுக்கித் தொடர்வது ........ ஆகும். | | |
| | அ. அடுக்குத்தொடர் | ஆ. இரட்டைக்கிளவி | இ. வேற்றுமைத்தொகை |
| | இலக்கணக் குறிப்பு | | |
| 1. | நன்மொழி | | |
| | அ. பண்புத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. உவமைத்தொகை |
| 2. | வியத்தல், நோக்கல் | | |
| | அ. பண்புப்பெயர்கள் | ஆ. தொழிற்பெயர்கள் | இ. காலப்பெயர்கள் |
| 3. | எழுதுதல், உரைத்தல் | | |
| | அ. பண்புப்பெயர்கள் | ஆ. சினைப்பெயர்கள் | இ. தொழிற்பெயர்கள் |
| 4. | செப்பல், இருத்தல், வழங்கல் | | |
| | அ. காலப்பெயர்கள் | ஆ. தொழிற்பெயர்கள் | இ. பண்புப்பெயர்கள் |
| 5. | அசைஇ, கெழீஇ | | |
| | அ. சொல்லிசைபெடைகள் | ஆ. இன்னிசையளபெடைகள் | இ. செய்யுளிசையளபெடைகள் |
| 6. | பரூஉக், குரூஉக்கண் | | |
| | அ. இன்னிசை அளபெடைகள் | ஆ. சொல்லிசை அளபெடைகள் | இ. செய்யுளிசை அளபெடைகள் |
| 7. | நண்பா கேள் | | |
| | அ. விளித்தொடர் | ஆ. உவமைத்தொடர் | இ. பெயரெச்சத்தொடர் |
| 8. | ஆடி மகிழ்ந்தான் | | |
| | அ. வினையெச்சத்தொடர் | ஆ. உவமைத்தொடர் | இ. பெயரெச்சத்தொடர் |
| 9. | முகிழ்ந்த | | |
| | அ. வினையெச்சம் | ஆ. வினைமுற்று | இ. பெயரெச்சம் |

| | | | |
|---|---|---|---|
| 10. | மாமலர் | | |
| | அ. உரிச்சொல் தொடர் | ஆ. உவமைத்தொடர் | இ. பெயரெச்சத்தொடர் |
| 11. | எவைஎவை | | |
| | அ. இரட்டைக்கிளவி | ஆ. அடுக்குத்தொடர் | இ. உவமைத்தொடர் |
| 12. | நண்பா | | |
| | அ. விளித்தொடர் | ஆ. உவமைத்தொடர் | இ. எழுவாய்த்தொடர் |
| 13. | விரைந்து | | |
| | அ. பெயரெச்சம் | ஆ. வினைமுற்று | இ. வினையெச்சம் |
| 14. | தெரிந்த | | |
| | அ. பெயரெச்சம் | ஆ. வினையெச்சம் | இ. வினைமுற்று |
| 15. | இசைத்து | | |
| | அ. பெயரெச்சம் | ஆ. வினையெச்சம் | இ. வினைமுற்று |
| 16. | மூதூர் | | |
| | அ. பண்புத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. உவமைத்தொகை |
| 17. | உறுதுயர் | | |
| | அ. உவமைத்தொகை | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை |
| 18. | கைதொழுது | | |
| | அ. இரண்டாம் வேற்றுமைத்தொகை | ஆ. மூன்றாம் வேற்றுமைத்தொகை | இ. ஏழாம் வேற்றுமைத்தொகை |
| 19. | தடக்கை | | |
| | அ. உரிச்சொல் தொடர் | ஆ. இடைச்சொல்தொடர் | இ. அடுக்குத்தொடர் |
| | கூறியவாறு செய்க | | |
| 1. | அரசன் - விளித்தொடராக மாற்றுக | | |
| | அ. அரசே வருக! | ஆ. அரசன் வந்தான் | இ. அரசனே வந்தான் |
| 2. | இராமன் - பெயரெச்சத் தொடராக மாற்றுக | | |
| | அ. இராமனா அவன்? | ஆ. பாடிய இராமன் | இ. இராமன் வந்தான் |
| 3. | கபிலன் - வினைமுற்றுத் தொடராக மாற்றுக | | |
| | அ. உண்ட கபிலன் | ஆ. கபிலன் உண்ட | இ.உண்டான் கபிலன் |
| 4. | மாணவர்கள் ஆசிரியரை வரவேற்றனர் - அடுக்குத் தொடராக மாற்றுக | | |
| | அ. மாணவர்கள் ஆசிரியரை வருக வருக என வரவேற்றனர். | | |
| | ஆ. மாணவர்கள் ஆசிரியரை பளபளவென வரவேற்றனர் | | |

| | |
|---|---|
| | **இ. மாணவர்கள் ஆசிரியரை குளுகுளுவென வரவேற்றனர்** |
| | <br>துள்ளித்திரியும் நாய்க்குட்டியே.....<br>துவளாதே பசியால்!<br>ஏக்கத்தோடு என்னைப் பாராதே.......<br>என்னருகில் ஓடி வா!<br>இருக்கும் உணவைப் பகிர்ந்து,<br>இருவரும் உண்ணலாம் வா!<br>இல்லாமை இருந்தால் என்ன?<br>ஈரமுள்ள இதயமுண்டு! |
| | உண்ணும் உணவை<br>நாய்க்கும் தரும் உயிர்நேயம்<br>குடிசையில் வாழ்ந்தாலும்<br>குபேர எண்ணம் சிறுமிக்கு!<br>பிற உயிர் பசியைப் போக்கிடும்<br>அளவற்ற ஆவல்<br>சின்னஞ்சிறு பெண்ணாயினும்<br>பசிபோக்கும் உயர்ந்த உள்ளம்! |
| | **செய்யுள் - திருக்குறள்** |
| 1. | **ஒழுக்கமுடைமை அதிகாரம் கூறும் ஒழுக்கங்கள் பற்றி எழுதுக.** |
| | ❖ ஒழுக்கம் அனைவருக்கும் சிறப்பைத் தரும்.<br>❖ ஒழுக்கத்தை உயிரைவிட மேலானதாகப் போற்றிக் காக்க வேண்டும்.<br>❖ ஒழுக்கமாக வாழும் எல்லாரும் மேன்மை அடைவர்.<br>❖ ஒழுக்கம் தவறுபவர் அடையக் கூடாத பழிகளை அடைவர்.<br>❖ உலகத்தோடு வாழக் கல்லாதவர் பல நூல்களைக் கற்றாராயினும் அறிவு இல்லாதவரே ஆவர். |
| 2. | **பெரியாரைத் துணைக்கோடல் எவ்வாறு?** |
| | ➢ கிடைத்தற்குரிய பேறுகளுள் எல்லாம் பெரும்பேறு பெரியோரைப் போற்றித் துணையாக்கிக் கொள்ளுதல் ஆகும்.<br>➢ குற்றங் கண்ட இடத்துக் கூறும் பெரியாரைத் துணை கொள்ளாத பாதுகாப்பற்ற மன்னன் பகைவர் இன்றியும் தானே கெடுவான்.<br>➢ பலரோடு பகை கொள்வதைக் காட்டிலும் பலமடங்கு தீமையைத் தருவது நற்பண்புடையார் நட்பைக் கைவிடுதலாகும். |
| 3. | **கொடுங்கோண்மை பற்றி வள்ளுவர் கூறுவது யாது?** |
| | ❖ அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானதாகும்.<br>❖ தன் நாட்டில் நிகழும் தீமைகளை நாளும் ஆராய்ந்து ஆட்சி செய்யாத மன்னன் தன் நாட்டை நாள்தோறும் இழப்பான். |

| | |
|---|---|
| 4. | **கண்ணோட்டம் பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.** |
| | ➢ பாடலோடு பொருந்தாத இசையால் எந்தப் பயனும் இல்லை.<br>➢ அதுபோல இரக்கம் இல்லாவிட்டால் கண்களால் எந்தப் பயனும் இல்லை.<br>➢ நடுநிலையாகக் கடமை தவறாமல் இரக்கம் காட்டுபவருக்கு இவ்வுலகமே உரிமை உடையதாகும்.<br>➢ விரும்பத் தகுந்த இரக்க இயல்பைக் கொண்டவர்கள் பிறர் நன்மை கருதித் தமக்கு நஞ்சைக் கொடுத்தாலும் அதனை உண்ணும் பண்பாளர் ஆவர். |
| 5. | **ஆள்வினை உடைமையில் வள்ளுவர் கூறும் கருத்துகளை எழுதுக.** |
| | ❖ ஒரு செயலைச் செய்து முடிக்கும் பொழுது சோர்வு அடையாதிருக்க வேண்டும்.<br>❖ அச்செயலை முயற்சியுடன் முடிப்பது பெருமை தரும்.<br>❖ விடாமுயற்சி என்ற உயர்பண்பு கொண்டவர்களால்தான் பிறருக்கு உதவுதல் என்ற உயர்ந்த நிலையை அடைய முடியும்.<br>❖ முயற்சி செய்தால் ஒருவர்க்குச் செல்வம் பெருகும்.<br>❖ முயற்சி இல்லாவிட்டால் அவருக்கு வறுமையே வந்து சேரும்.<br>❖ உடல் ஊனம் ஒருவருக்குப் பழியில்லை.<br>❖ அறிய வேண்டியவற்றை அறிந்து முயற்சி செய்யாமையே பழியாகும். |
| | **இயல் - 4 உரைநடை – செயற்கை நுண்ணறிவு** |
| 1. | **வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் கூறுக.** |
| | ➢ செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்<br>➢ செயற்கை நுண்ணறிவைக் கொண்ட இயந்திரம் மனிதர்களுடன் சதுரங்கம் முதலான விளையாட்டுகளை விளையாடுகிறது.<br>➢ கண் அறுவை மருத்துவம் செய்கிறது<br>➢ சமைக்கிறது<br>➢ சில புள்ளிகளை வைத்துப் படம் வரைகிறது. |
| 2. | **இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை எழுதுக. (அல்லது) செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகளை எழுதுக** |
| | ➢ இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன என்றே கூறலாம்.<br>➢ அறிவியல் என்னும் ஒற்றை வார்த்தையில் இந்த உலகமே இயங்குகிறது என்றே கூறலாம்.<br>➢ நமது அன்றாட தேவைகள், வாழ்க்கை முறைகளில் அறிவியல் பயன்பாடு அதிகரித்து வருகிறது.<br>➢ வீட்டு உபயோகப் பொருட்களில் தொடங்கி கணினி, செயற்கை நுண்ணறிவு தொலைபேசி, ரோபோ என இன்று அறிவியல் கண்டுபிடிப்புகள் ஏராளம்.<br>➢ கல்வித்துறையில் மின்னனுக் கல்வியறிவையும் புகுத்தி புது புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.<br>➢ மருத்துவ அறிவியல் கண்டுபிடிப்புகள் பலவித நோய்களை அறிந்து சிகிச்சைப் பெற உதவுகிறது.<br>➢ அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித வாழ்வில் புதிய மாற்றங்களைச் செய்து வருகிறது. |

| | |
|---|---|
| | ➢ உலகின் எல்லா மூலைகளிலும் அறிவியல் கண்டுபிடிப்புகள் மனித வாழ்வை வளப்படுத்தி வருகின்றது. |
| 3. | **மனிதர்களின் மூளையைப் போன்றது செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனித மூளையைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்துகின்றது. இதனால் மனித குலத்திற்கு ஏற்படும் நன்மைகளைப் பற்றி எதிர்காலத் தொழில்நுட்பம் என்னும் தலைப்பில் எழுதுக.** |
| | ➢ வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றங்களைச் செயற்கை நுண்ணறிவு கொண்டு வரப்போகிறது.<br>➢ மனிதர் செய்ய இயலாத செயல்களையும் செய்ய முடியும்.<br>➢ உயிராபத்தை விளைவிக்கக் கூடிய செயல்களைச் செய்ய முடியும்.<br>➢ புதிய வணிக வாய்ப்புகளைச் செயற்கை நுண்ணறிவு நல்குகிறது.<br>➢ ஆலோசனை வழங்குவது, பயண ஏற்பாடு செய்துதருவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது, குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டுவது எனப் பலவற்றைச் செய்யும்.<br>➢ நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவைக் கொண்டு இயக்க வேண்டியிருக்கும்.<br>➢ மென்பொருள் கவிதைகள், கதைகள் எழுதுவதிலும் எதிர்காலத்தில் மனிதனுடன் போட்டி போடலாம்.<br>➢ கல்வித்துறையிலும் தொழில்நுட்பத்தைப் பலவிதங்களில் பயன்படுத்தும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. |
| 4. | **பெப்பர் ரோபோ எப்படிப் பயன்படுகிறது?** |
| | • ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதனே பெப்பர்.<br>• உலக அளவில் விற்பனையாகும் ஒரு ரோபோ.<br>• வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் கிடைக்கின்றன.<br>• மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயல்படுகின்றன.<br>• இதனை வரவேற்பாளராகவும் பணியாளராகவும், வீடுகளிலும் வணிக நிறுவனங்களிலும் உணவு விடுதிகளிலும் பயன்படுத்துகின்றனர். |
| 5. | **செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள் யாவை?** |
| | ➢ நமது வாழ்க்கையையும் வணிகத்தையும் நம்மை அறியாமலேயே வளப்படுத்திக் கொண்டிருக்கின்றது.<br>➢ இதைக்கண்டு அச்சப்பட்டவர்களின் அலறல்களை நாம் எதிர்கொள்வதே முதல் அறைகூவல்.<br>➢ புதிய கண்டுபிடிப்புகள் அறிமுகமாகும் போது பழைய வேலைவாய்ப்புகள் புதிய வடிவில் மாற்றம் பெறுகின்றன.<br>➢ செயற்கை நுண்ணறிவின் தொழில்நுட்பம் அளிக்கும் வியக்கத்தக்க நன்மைகளைப் புரிந்து கொள்ளவும் வரவேற்கவும் நாம் தயாராக வேண்டும்.<br>➢ செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி மனித இனத்தைத் தீங்குகளிலிருந்து காக்கவும், நோய்களைக் கண்டறியவும் மருத்துவம் செய்யவும் புதிய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. |
| 6. | **செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.** |
| | குறிப்புச்சட்டகம் |

| | |
|---|---|
| | எதிர்காலத்தில் ரோபோக்கள்<br>செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள்<br>கல்வியில் செயற்கை நுண்ணறிவு<br>ஆனாலும் முன்னேற்றமே!<br><br>எதிர்காலத்தில் ரோபோக்கள்:<br>➢ எதிர்காலத்தில் ரோபோவிடம் குழந்தையை ஒப்படைத்துவிட்டு பெற்றோர்கள் அலுவலகம் செல்ல இயலும்.<br>➢ விடுதிகளில் வங்கிகளில் அலுவலகங்களில் சேவைகளை ரோபோக்கள் அளிக்கும்.<br>செயற்கை நுண்ணறிவின் பொதுவான கூறுகள்:<br>➢ செயற்கை நுண்ணறிவு நமது வாழ்க்கையையும் வணிகத்தையும் வளப்படுத்திக் கொண்டிருக்கிறது.<br>➢ செயற்கை நுண்ணறிவு அளிக்கும் நன்மைகளைப் புரிந்து கொள்ளவும் வரவேற்கவும் தயாராகி வருகின்றது.<br>கல்வியில் செயற்கை நுண்ணறிவு:<br>➢ கல்வியறிவுடன் மின்னணுக் கல்வியறிவையும் மின்னணுச் சந்தைப்படுத்துதலையும் அறிந்திருப்பது வாழ்க்கையை எளிதாக்கும்.<br>➢ தொழிற்புரட்சியின் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தும் அறிவே நம்மை வளப்படுத்த உதவும்.<br><br>ஆனாலும் முன்னேற்றமே!<br>➢ மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலுமே நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் இருக்கின்றன.<br>➢ செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் எதிர்காலத்தில் உலகில் ஒவ்வொரு துறையிலும் அளவிலாத முன்னேற்றத்தைத் தரும். |
| 7. | ***மெய்நிகர் உதவியாளர் செய்யும் உதவிகள் சிலவற்றை எழுதுக.*** |
| | ➢ கண்ணுக்குப் புலப்படாத மனிதனைப் போல நம்முடன் உரையாடி சில உதவிகள் செய்கின்றது.<br>➢ நாம் சொல்கிறவர்களுக்குத் தொலைபேசி அழைப்பு விடுக்கும்.<br>➢ நாம் திறக்கக் கட்டளையிடும் செயலியைத் திறக்கும்.<br>➢ நாம் கேட்பதை உலாவியில் தேடும்.<br>➢ நாம் விரும்பும் கவிதையை இணையத்தில் தேடித் தரும்.<br>➢ எந்தக் கடையில் எது விற்கும் என்று சொல்லும்.<br>➢ படிப்பதற்கு ஏற்ற நூல்களைப் பட்டியலிடும்.<br>➢ நாம் எடுத்த ஒளிப்படங்களைப் பற்றி கருத்துரைக்கும். |
| 8. | **செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன?** |

| | |
|---|---|
| | ➢ செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு எனலாம்.<br>➢ அது தானாகக் கற்றுக் கொள்ளக்கூடியது.<br>➢ தனக்கு வரும் புதிய புதிய சூழ்நிலைகளில் மனிதரைப்போல தானே முடிவெடுக்கும் திறனுடையது.<br>➢ ஒளிப்படங்கள், எழுத்துகள், காணொலிகள், ஒல்கள் போன்றவற்றிலிருந்து கற்றுக் கொள்ளும் இயல்புடைய மென்பொருளை ஆராய்ச்சியாளர் வடிவமைக்கிறார்கள்.<br>➢ கற்றுக் கொண்டதைத் தேவைப்படும் இடங்களில் தேவைப்படும் நேரங்களில் செயல்படுத்தும். |
| 9. | **ஒளிப்படக் கருவியில் செயற்கை நுண்ணறிவின் பணி யாது?** |
| | ❖ சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிப்படக் கருவி செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பத்தைக் கொண்டிருக்கிறது.<br>❖ கடவுச்சொல்லும் கைரேகையும் திறன்பேசியைத் திறப்பது பழமையானது.<br>❖ தற்காலத்தில் முகத்தை அடையாளம் கண்டு திறப்பதே புதுமை.<br>❖ படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கிறது.<br>❖ திறன்பேசிகளில் உள்ள ஒளிப்படக் கருவியில் எடுக்கும் படங்களை மெருகூட்ட இத்தொழில்நுட்பம் உதவுகிறது.<br>❖ காணொலிகளைத் தொகுக்கும் மென்பொருள்களில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் பயன்படுகிறது. |
| | **இயல் - 4 – செய்யுள் - பெருமாள் திருமொழி** |
| 1. | **மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக. (அல்லது) மாளாத காதல் நோயாளன் போல் என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.** |
| | ❖ மருத்துவர் உடலில் ஏற்பட்ட புண்ணைக் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார்.<br>❖ வித்துவக்கோட்டில் எழுந்தருளியிருக்கும் அன்னையே!<br>❖ அதுபோன்று நீ உனது விளையாட்டால் நீங்காத துன்பத்தை எனக்குத் தந்தாலும் உன் அடியவனாகிய நான் உன் அருளையே எப்பொழுதும்' எதிர்பார்த்து வாழ்கின்றேன். |
| 2. | **பக்தி இலக்கியங்களில் எவ்வாறு அறிவியல் கருத்துகள் செறிந்திருந்தன?** |

| | | | |
|---|---|---|---|
| | ❖ தமிழர் பண்டைய நாட்களிலிருந்தே அறிவியலை வாழ்வியலோடு இணைத்துக் காணும் இயல்புடையவர்களாக இருக்கிறார்கள்.<br>❖ அதன் விளைவாக சங்க இலக்கியத்தில் அறிவியல் கருத்துகள் நிறைந்துள்ளன.<br>❖ இணையாகப் பக்தி இலக்கியங்களிலும் அறிவியல் கருத்துகள் செறிந்திருக்கின்றன. | | |
| | **செய்யுள் அடியொற்றிய வினாவிடை** | | |
| | **வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**<br>**மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்**<br>**மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ**<br>**ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே.** | | |
| 1. | இப்பாடலை எழுதியவர் யார்? | | |
| | அ. அப்பர் | ஆ. சுந்தரர் | இ. குலசேகராழ்வார் |
| 2. | இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? | | |
| | அ. பெருமாள் திருமொழி | ஆ. பரிபாடல் | இ. நளவெண்பா |
| 3. | 'மாளாத' என்பதன் இலக்கணக் குறிப்பு யாது? | | |
| | அ. ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம் | ஆ. வினைத்தொகை | இ. வினையெச்சம் |
| 4. | பாடலில் வந்துள்ள அடி எதுகைகளை எழுதுக | | |
| | அ. வாளால், மாளாத | ஆ. வாளால், சுடினும் | இ. மாளாத, நோயாளன் |
| 5. | 'உனதருளே'– பிரித்து எழுதுக | | |
| | அ. உன் + அருளே | ஆ. உனது +அருளே | இ. உன் + அருள் |
| | **பரிபாடல்** | | |
| 1. | **உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.** | | |
| | ➢ பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமாக கரு பேரொலியுடன் தோன்றியது.<br>➢ ஐம்பூதங்களின் அணுக்களுடன் வானம் என்னும் முதல் பூதத்தின் ஊழி அது.<br>➢ அந்த அணுக்களின் ஆற்றல் பருப்பொருள்கள் சிதறும் படியாகப் பல ஊழிக் காலங்கள் கடந்து சென்றன.<br>➢ நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகி விளங்கிய ஊழிக்காலம் தொடர்ந்தது.<br>➢ பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் தொடர்ந்தது<br>➢ அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது.<br>➢ மீண்டும் மீண்டும் நிறை வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில் உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது.<br>➢ அச்சூழலில் உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான ஊழிக்காலம் வந்தது. | | |
| | **செய்யுளடி வினாவிற்கு விடையளி:** | | |
| 1. | **செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு** | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று<br>உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு<br>மீண்டும் பீடு உயர்பு ஈண்டி அவற்றிற்கும்<br>உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும். | | | |
| 1 | இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? | | | |
| | அ.பத்துப்பாட்டு | ஆ. சங்கஇலக்கியம் | இ. பரிபாடல் | ஈ. எட்டுத்தொகை |
| 2 | இப்பாடலின் ஆசிரியர ............. | | | |
| | அ. நக்கீரர் | ஆ. கீரந்தையார் | இ. பெருங்கௌசிகனார் | ஈ. குலசேகராழ்வார் |
| 3 | பாடலிலுள்ள எதுகைச் சொற்கள் | | | |
| | அ. உள்முறை-உள்ளீடு | ஆ.வெள்ளம்-மூழ்கி | இ. தண்பெயல்-தலைஇய | ஈ. செந்நீர்-தண்பெயல் |
| 4 | தண்பெயல் என்பதன் பொருள் ............... | | | |
| | அ. குளிர்ந்த மழை | ஆ. காற்று | இ. வானம் | ஈ. தீ |
| 2. | விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்வக்<br>கருவளர் வானத்து இசையில் தோன்றி<br>உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்<br>உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும். | | | |
| 1 | இச்செய்யுளினை இயற்றியவர் யார்? | | | |
| | அ. பிசிராந்தையார் | ஆ. ஆண்டாள் | இ. கீரந்தையார் | ஈ. பெரியாழ்வார் |
| 2 | பரிபாடல் ...... நூல்களுள் ஒன்றாகும். | | | |
| | அ. பத்துப்பாட்டு | ஆ. எட்டுத்தொகை | இ.பதினெண் கீழ்க்கணக்கு | ஈ. குறுந்தொகை |
| 3 | ..........பரிபாடல் என்னும் புகழுடையது பரிபாடல். | | | |
| | அ. ஓங்கு | ஆ. மங்கா | இ. விரி | ஈ. அழியா |
| 4 | ஊழி - இச்சொல்லின் பொருள் யாது? | | | |
| | அ. யுகம் | ஆ. முறை | ஆ. சிறப்பு | ஈ. மகிழ்ச்சி |
| 5 | சங்க நூல்களுள் ........ பாடப்பட்ட நூல் பரிபாடல். | | | |
| | அ.பண்ணொடு | ஆ. விண்ணொடு | இ. சந்தமுடன் | ஈ. நயமுடன். |
| | **விண்ணைத் தாண்டிய நம்பிக்கை** | | | |
| | குறிப்புச்சட்டகம்<br>முன்னுரை<br>ஸ்டீபன் ஹாக்கிங்கின் தோற்றம்<br>கருந்துளை பற்றிய ஸ்டீபன் ஹாக்கிங்கின் கருத்து | | | |

| | |
|---|---|
| | ஹாக்கிங் கதிர்வீச்சு<br>அறிவியல் கோட்பாடுகள்<br>ஸ்டீபன் ஹாக்கிங் பெற்ற விருதுகள்<br>முடிவுரை |
| | <u>முன்னுரை:</u><br>அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது. ஐயங்களை நீங்குகிறது. தன்னால் எந்த இயக்கமும் மேற்கொள்ள இயலாத நிலையிலும் அறிவியலின் இயங்கும் தன்மையை அறிந்து புது உண்மைகளைச் சொன்ன ஒருவரை உலகம் போற்றுவதில் வியப்பில்லை.<br><u>ஸ்டீபன் ஹாக்கிங்கின் தோற்றம்:</u><br>தலை வலது பக்கம் சாய்ந்திருக்கின்றது. கீழிருக்கும் சில பற்கள் மேல் உதட்டை அழுத்தி வெளிவந்து நிற்கின்றன. அவர் அமர்ந்திருப்பது கணிப்பொறியுடன் சேர்ந்த சக்கர நாற்காலி. அவரது கன்னத்தின் தசைகள் சிறிது அசைகின்றன.<br><u>கருந்துளை பற்றிய ஸ்டீபன் ஹாக்கிங்கின் கருத்து:</u><br>பேரண்டம் பெரு வெடிப்பினால் உருவானதே என்பதற்கான சான்றுகளைக் கணிதவியல் அடிப்படையில் விளக்கினார். இப்புவியின் இயக்கும் ஆற்றலாகக் கடவுள் என்று ஒருவரைக் கட்டமைக்க வேண்டியதில்லை என்றார்.<br><u>ஹாக்கிங் கதிர்வீச்சு:</u><br>கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வர முடியாது. கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. கருந்துளை உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை. கருந்துளையிலிருந்து கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி வெடித்து மறைந்து விடும். இந்த ஆராய்ச்சியின் முடிவு ஹாக்கிங் கதிர்வீச்சு என்று அழைக்கப்படுகிறது. இது முந்தைய கருத்துகளை தலைகீழாகப் புரட்டிப் போட்டது. ஹாக்கிங் கருந்துளை என்பது படைப்பின் ஆற்றல் என்று நிறுவினார்.<br><u>அறிவியல் கோட்பாடு:</u><br>ஐன்ஸ்டைன் போல கோட்பாடுகளாக வெளியிடாமல் விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டு ஸ்டீபன்ஹாக்கிங் விளக்கியதால் உலகம் கருந்துளைக் கோட்பாட்டை புரிந்து கொண்டது.<br><u>ஸ்டீபன்ஹாக்கிங் பெற்ற விருதுகள்:</u><br>➢ அமெரிக்காவின் உயரிய விருதான அதிபர் விருது.<br>➢ ஆர்பர்ட் ஐன்ஸ்டைன் விருது<br>➢ உல்ஃப் விருது<br>➢ காப்ளி பதக்கம்<br>➢ அடிப்படை இயற்பியல் பரிசு என அவர் பெற்ற விருதுகள் அவரால் பெருமையடைந்தன.<br><u>முடிவுரை:</u><br>ஸ்டீபன்ஹாக்கிங், ஊனம் ஒருவருக்குக் குறையாகாது. ஊக்கமும் உழைப்பும் ஆளுமைத் தன்மையும் இல்லாமல் இருப்பதே குறையாகும் என்பததை உலகிற்கு உணர்த்தியவர். அறிவியல் உலகில் மட்டுமன்றி சமூக உளவியல் அடிப்படையிலும் தன்னம்பிக்கையின் சிகரமாக விளங்கியவர். |

**இலக்கணம் - பொது – வழு, வழாநிலை, வழுவமைதி**

| | | | |
|---|---|---|---|
| | இலக்கணக்குறிப்பு எழுதுக | | |
| 1. | ஒரு பெண்பாற்பெயர் ஆண்பால் வினைமுற்றைக் கொண்டு முடிவது | | |
| | அ. திணைவழு | ஆ. மரபு வழு | இ. பால்வழு |
| 2. | ஒரு உயர்திணைப் பெயர் அஃறிணை வினை கொண்டு முடிவது | | |

| | | | |
|---|---|---|---|
| | அ. திணைவழு | ஆ. மரபு வழு | இ. பால்வழு |
| 3. | ஓர் இடப்பெயர் அதே இடப்பெயர் கொண்டு முடிவது | | |
| | அ. இடவழாநிலை | ஆ. காலவழாநிலை | இ. பால் வழாநிலை |
| 4. | ஓர் காலப்பெயர் வேறொரு காலப்பெயர் கொண்டு முடிவது | | |
| | அ. இடவழு | ஆ. பால்வழு | இ. காலவழு |
| 5. | வினாத்தொடருக்குப் பொருத்தமில்லாத வினாவைக் கேட்பது | | |
| | அ. இடவழு | ஆ. வினா வழு | இ. விடைவழு |
| 6. | என் மாமா வந்தது என்பது | | |
| | அ. திணைவழு | ஆ. வினா வழு | இ. விடைவழு |
| 7. | அவன் வந்தாள் என்பது | | |
| | அ. திணைவழு | ஆ. பால் வழு | இ. விடைவழு |
| 8. | யான் வந்தான் என்பது | | |
| | அ. திணைவழு | ஆ. பால் வழு | இ. இடவழு |
| 9. | நாளை வந்தான் என்பது | | |
| | அ. காலவழு | ஆ. பால் வழு | இ. இடவழு |
| 10. | கடம்பூருக்கு வழி யாது எனில் நாளை வருகிறேன் எனக் கூறுவது | | |
| | அ. திணைவழு | ஆ. பால் வழு | இ. விடைவழு |
| 11. | யானை மேய்ப்பவனை இடையன் என்று கூறுவது | | |
| | அ. திணைவழு | ஆ. பால் வழு | இ. மரபு வழு |
| 12. | பசுவை லட்சுமி வந்தாள் எனக் கூறுவது | | |
| | அ. திணைவழுவமைதி | ஆ. பால் வழுவமைதி | இ. மரபு வழுவமைதி |
| 13. | இதோ சென்றுவிட்டேன் | | |
| | அ. கால வழுவமைதி | ஆ. பால் வழுவமைதி | இ. மரபு வழுவமைதி |
| 14. | கன்றை என்னடா விளையாட வேண்டுமா | | |
| | அ. திணைவழுவமைதி | ஆ. பால் வழுவமைதி | இ. மரபு வழுவமைதி |
| 15. | அமைச்சர் நாளை விழாவிற்கு வருகிறார் | | |
| | அ. கால வழுவமைதி | ஆ. பால் வழுவமைதி | இ. மரபு வழுவமைதி |
| 16. | நீ வந்தேன் | | |
| | அ. காலவழு | ஆ. பால் வழு | இ. இடவழு |
| 17. | ஊழ்ஊழ் | | |
| | அ. இரட்டைக்கிளவி | ஆ. அடுக்குத்தொடர் | இ. தொடர்மொழி |
| 18. | வளர்வானம் | | |
| | அ. பண்புத்தொகை | ஆ. வேற்றுமைத்தொகை | இ. வினைத்தொகை |
| 19. | செந்தீ | | |
| | அ. பண்புத்தொகை | ஆ. வேற்றுமைத்தொகை | இ. வினைத்தொகை |
| 20. | வாரா(ஒன்றன்) | | |

| | | | |
|---|---|---|---|
| | அ. பெயரெச்சம் | ஆ.ஈறுகெட்ட பெயரெச்சம் | இ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். |
| | கோடிட்ட இடங்களை நிரப்புக. | | |
| 1. | இலக்கணமுறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் ..................... எனப்படும். | | |
| | அ. வழு | ஆ. வழாநிலை | இ. வழுவமைதி |
| 2. | இலக்கண முறையின்றி பேசுவதும் எழுதுவதும் ................. எனப்படும். | | |
| | அ. வழு | ஆ. வழா நிலை | இ. வழுவமைதி |
| 3. | வழா நிலை ................. வகைப்படும். | | |
| | அ. எட்டு | ஆ. ஆறு | இ. ஒன்பது |
| 4. | வழு ............. வகைப்படும். | | |
| | அ. எட்டு | ஆ. ஏழு | இ. ஒன்பது |
| 5. | இடம் .............. வகைப்படும் | | |
| | அ. எட்டு | ஆ. இரண்டு | இ. ஒன்பது |
| 6. | இடம் .............., .............., ............... என மூவகைப்படும். | | |
| | அ. தன்மை, முன்னிலை, படர்க்கை | ஆ. நேற்று, இன்று, நாளை | இ. இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் |
| 7. | பகுதி மட்டும் வந்து தொழிலைக் குறிப்பது ............ எனப்படும். | | |
| | அ. தொழிற்பெயர் | ஆ. முதனிலைத் தொழிற்பெயர் | இ. முதனிலை திரிந்ததொழிற்பெயர் |
| 8. | எண் ................, .................... என இருவகைப்படும். | | |
| | அ. நன்மை, தீமை | ஆ. பெருமை, சிறுமை, | இ. ஒருமை, பண்மை |
| 9. | வந்தான் என்னும் வினைமுற்று ............. என வினையாலணையும் பெயராய் வரும். | | |
| | அ. வருவான் | ஆ. வரமாட்டான் | இ. வந்தவன் |
| 10. | அஃறிணைப் பால்கள் .............. மற்றும் ............ ஆகும். | | |
| | அ. ஆண்பால், பெண்பால் | ஆ. பலர்பால், ஒன்றன்பால் | இ. ஒன்றன்பால், பலவின்பால் |
| 11. | உயர்திணைப் பால்கள் .............., ............., ............ ஆகும். | | |
| | அ. ஆண்பால், பெண்பால், பலர்பால் | ஆ. ஆண்பால், பெண்பால், பலவின்பால் | இ. ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் |
| 12. | பால் என்பதற்கு ............... என்று பொருள். | | |
| | அ. பருப்பு அல்லது பிரிவு | ஆ. பகுப்பு அல்லது பிரிவு | இ. வகுப்பு அல்லது பிரிவு |
| 13. | திணை என்பதன் பொருள் ................... ஆகும். | | |
| | அ. ஒழுக்கம் | ஆ. தானிய வகை | இ. தயக்கம் |
| 14. | திணை ................ , .............. என இருவகைப்படும். | | |
| | அ. மக்கள் திணை, உயர்திணை | ஆ. உயர்திணை, அஃறிணை | இ. உயிர்திணை, அல்லாத திணை |
| | சான்று தருக. | | |
| 1. | முன்னிலை ஒருமைப்பெயர் | | |

| | | | |
|---|---|---|---|
| | அ. நான் | ஆ. நீ | இ. அவன் |
| 2. | முன்னிலை பன்மைப்பெயர் | | |
| | அ. நான், நாங்கள் | ஆ. நான், நீ | இ. நீர், நீங்கள் |
| 3. | முன்னிலை ஒருமைப்பெயர் | | |
| | அ. நான், யான் | ஆ. நான், அவன் | இ. நான், நீ |
| 4. | தன்மை பன்மை பெயர்கள் | | |
| | அ. நாம், யாம், நாங்கள் | ஆ. நான், அவன் | இ. நான், நீ |
| 5. | படர்க்கை ஒருமைப்பெயர் | | |
| | அ. தான் | ஆ. நான் | இ. நீங்கள் |
| 6. | படர்க்கைப் பெயர்கள் | | |
| | அ. தான், தாம், தாங்கள் | ஆ. நீ, நீவிர், நீங்கள் | இ. நான், நாம், நாங்கள் |
| 7. | முன்னிலப் பெயர்கள் | | |
| | அ. தான், தாம், தாங்கள் | ஆ. நீ, நீவிர், நீங்கள் | இ. நான், நாம், நாங்கள் |
| 8. | படர்க்கை வினை | | |
| | அ. வந்தான் | ஆ. வந்தேன் | ஈ. வந்தாய் |
| 9. | முன்னிலை வினைகள் | | |
| | அ. நடந்தாய், வந்தீர், சென்றீர்கள் | ஆ. வந்தேன், வருவேன், வருவான் | ஈ. தந்தான், தருவான், செல்வான் |
| 10. | தன்மை வினைகள் | | |
| | அ. நடந்தாய்,வந்தீர் | ஆ. வந்தேன், வந்தோம் | ஈ. தந்தான், தருவான் |
| | கூறியவாறு செய்க. | | |
| 1. | புலவர் வந்தது – வழுவை நீக்கி எழுதுக. | | |
| | அ. புலவர் வந்தார்கள் | ஆ. புலவர் வந்தன | இ. புலவர் வந்தார் |
| 2. | இன்று வருவான் - காலவழுவை நீக்கி எழுதுக. | | |
| | அ. இன்று வருகிறான் | ஆ. நாளை வந்தான் | இ. நேற்று வருவான் |
| 3. | பறவைகள் பறந்தது – வழுவை நீக்கி எழுதுக. | | |
| | அ.பறவைகள் பறந்தன | ஆ. பறவைகள் சென்றது | இ. பறவைகள் பாடியது |
| 4. | மூவேந்தர் வந்தார் - வழாநிலையாக்குக. | | |
| | அ. மூவேந்தர் வந்தனர் | ஆ. மூவேந்தர் வந்தது | இ. மூவேந்தர் வந்தன |
| 5. | காற்று வீசும் - வழுவமைதியாக்குக. | | |
| | அ. காற்று வீசுகிறது | ஆ. காற்று வீசியது | இ. காற்று வீசும் |
| 6. | தென்னங்கன்று – வழாநிலைக்குக. | | |
| | அ. தென்னம்பிள்ளை | ஆ. தென்னைந்தோட்டம் | இ. தென்னைமரங்கள் |
| 7. | புலி கர்ஜிக்கும் - வழாநிலையாக்குக. | | |
| | அ. புலி உறுமும் | ஆ. புலி கர்ஜக்கும் | இ. புலி கீச்சிடும் |
| 8. | பசுக்குட்டி – வழாநிலையாக்குக. | | |

| | | | |
|---|---|---|---|
| | அ. பசுக்கன்று | ஆ. குட்டிப்பசு | இ. பசுமாடு |
| 9. | **படித்து விட்டாயா? – கால வழுவமைதியாக்குக.** | | |
| | அ.இதோ படித்து விட்டேன் | ஆ. இதோ படிக்கிறேன் | இ. இதோ படித்து விடுவேன். |
| 2. |  | இயந்திரத்தை மனிதன் ஆண்டது<br>பழமையாய்ப் போனதே!<br>மனிதனை ஆள்கின்ற இணைய<br>இயந்திர உலகம் இயல்பானதே!<br>இயந்திரத்தின் பிடியில் மனிதா<br>இனிதே மாட்டிக் கொண்டாயே?<br>இனி உன் இயல்புகள் மாறிப் போகலாம்<br>மனித உணர்வுகள் மாறாமல் பார்த்துக்கொள்! | |

## இயல் – 5 – உரைநடை – மொழிபெயர்ப்புக் கல்வி

**1. மொழிபெயர்ப்புக் கல்வி பற்றியும் பயன்கள் பற்றியும் எழுதுக.**

- ❖ மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் அனைத்துலக அறிவையும் எளிதாகப் பெறமுடியும்.
- ❖ பல அறிவுத்துறைகளுக்கும் தொழில்துறைகளுக்கும் வேண்டிய அனைத்தையும் நாமே உருவாக்கிக் கொள்ளமுடியும்.
- ❖ மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும்.
- ❖ வேலைவாய்ப்புத் தளத்தை முழுமையாக விரிவாக்க முடியும்.
- ❖ நாடு விடுதலை பெற்ற பிறகு பல நாட்டுத் தூதரகங்கள் நம்நாட்டில் நிறுவப்பட்டன.
- ❖ அவை தத்தம் மொழிகளைக் கற்றுக் கொடுக்கின்ற முயற்சியை மேற்கொண்டு வருகின்றன.
- ❖ இதனைச் சார்ந்து பிறமொழிகளைக் கற்றுத்தரும் தனியார் நிறுவனங்களும் உருவாகியுள்ளன.
- ❖ பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பிறமொழிகளைக் கற்கும் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**2. பல்துறை வளர்ச்சியில் மொழிபெயர்ப்பின் பங்கு என்ன?**

- ❖ பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது.
- ❖ மொழிபெயர்ப்பு இல்லையெனில் உலகை எல்லாம் வலையாகப் பிடித்திருக்கிற ஊடகத்தின் வளர்ச்சி இல்லை.
- ❖ தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம். இதழ்கள் போன்ற ஊடகங்கள் மொழிபெயர்ப்பால் தான் வளர்ச்சி பெறுகின்றன.
- ❖ விளம்பர மொழிக்கு மொழிபெயர்ப்பு தேவைப்படுகிறது.
- ❖ திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் ஆகியன வேற்று மொழிமாற்றம் செய்யப்பட்டு அனைத்து மொழி பேசும் மக்களையும் சென்று அடைகின்றன.
- ❖ இதனால் புதுவகையான சிந்தனைகள், மொழிக்கூறுகள் பரவுகின்றன.

**3. மொழிபெயர்ப்பின் செம்மை பற்றி விளக்குக.**

- ➤ Hundred rail sleepers were washed awayஎன்பதை தொடர் வண்டியில் உறங்கிக் கொண்டிருந்த நூறுபேர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டார்கள் என்று ஒரு

| | |
|---|---|
| | செய்தித்தாள் வெளியிட்டது.<br>➢ Rail sleepers என்பது தொடர்வண்டியின் போக்குவரத்துப் பாதையில் உள்ள குறுக்குக் கட்டைகளைக் குறிக்கும்.<br>➢ அதனை உறங்கிக் கொண்டிருந்தோர் என மொழிபெயர்த்தது பெரும் பிழையே.<br>➢ Camel என்பதற்கு வடம்(கயிறு), ஒட்டகம் என இருபொருள் உண்டு.<br>➢ ஊசி காதில் வடம் நுழையாது என்னும் வேற்றுமொழித் தொடரை ஊசி காதில் ஒட்டகம் நுழையாது என்று மொழிபெயர்த்துக் கூறுவது தவறு.<br>➢ Underground drainage என்ற தொடரை பாதளச் சாக்கடை என்று மொழிபெயர்த்தனர். மலையாளத்தில் புதைசாக்கடை என்று உள்ளது.<br>➢ Tele என்பது தொலை என்பதைக் குறிக்கிறது. இதுவே Telephone, Television, Telescope, Telegraph என்பவை முன்னொட்டுகளுடன் மொழிபெயர்க்கப்பட்டன.<br>➢ இடம் பார்த்து மொழிபெயர்ப்பு முறையாகச் செய்யப்பட வேண்டும். |
| 4. | **மொழிபெயர்ப்பின் தேவை குறித்து எழுதுக.** |
| | ➢ மொழிபெயர்ப்பு எல்லக் காலகட்டங்களிலும் தேவையான ஒன்று.<br>➢ விடுதலைக்குப் பிறகு நாட்டின் பல பகுதிகளையும் ஒரே ஆட்சியின் கீழ் இணைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.<br>➢ தேசிய உணர்வு ஊட்டுவதற்கும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் இந்திய அரசு மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகக் கொண்டது.<br>➢ ஒரு மொழியில் இருக்கும் நூல்களைப் பிறமொழியில் மொழியெர்த்தது.<br>➢ பல்வேறு மாநிலங்களில் இருந்த எழுத்தாளர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோரைப் பற்றிய நூல்களையும் வெளியிட்டது.<br>➢ இத்தகைய மொழிபெயர்ப்பு முயற்சிகள் சாகித்திய அகாதெமி, தேசிய புத்தக நிறுவனம், தென்னிந்தியப் புத்தக நிறுவனம் ஆகியவற்றின் மூலம் செய்யப்பட்டன. |
| 5. | **இலக்கிய இறக்குமதி பற்றி எழுதுக.** |
| | ❖ பிறமொழி அலக்கியங்களை அறிந்து கொள்ளவும் அவைபோன்ற புதிய படைப்புகளை உருவாக்கவும் மொழிபெயர்ப்பு உதவுகிறது.<br>❖ மொழிவேலியை அகற்றும் பணியை மொழிபெயர்ப்பு செய்கிறது.<br>❖ ஜெர்மன் மொழியில் மொழிபெயர்ப்பின் மூலம் அறியப்பட்ட சேக்ஸ்பியர் அந்நாட்டுப் படைப்பாளர் போலவே கொண்டாடப்பட்டார்.<br>❖ தமிழருக்குரிய திருக்குறள் உலக மொழிகளுக்கு உரியதாக மாறியது மொழிபெயர்ப்பால் தான்.<br>❖ தாகூர் வங்க மொழியில் இயற்றிய கீதாஞ்சலி ஆங்கில மொழியில் மொழிபெயர்த்த பிறகே அவருக்கு நோபல் பரிசு கிடைத்தது.<br>❖ பாரதியின் கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தால் உலக அளவிஜல் உயரிய விருதுகள் கிடைத்திருக்கலாம். |
| | **இயல் - 5 செய்யுள் - நீதி வெண்பா** |
| 1. | **செய்கு தம்பிப் பாவலரின் கல்வி பற்றி கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.** |
| | ➢ அருளைப் பெருக்கி<br>அறிவைச் சீராக்குவோம்!<br>➢ மயக்கம் அகற்றி<br>அறிவைத் தெளிவாக்குவோம்!<br>➢ உயிருக்கு அரிய துணை கல்வியே! |

| | |
|---|---|
| | ➢ கல்வியைப் போற்றிக் கற்போம்! கற்போம்! |
| **2.** | **கல்வியை எவ்வாறு போற்றிக் கற்க வேண்டும் என்று செய்குதம்பிப் பாவலர் கூறுகிறார்?** |
| | ➢ அருளினைப் பெருக்கி, அறிவைச் சீராக்கி<br>➢ மயக்கம் அகற்றி<br>➢ அறிவுக்குத் தெளிவு தந்து<br>➢ உயிருக்கு அரிய துணையாய் இன்பம் சேர்ப்பது கல்வியே.<br>➢ எனவே அதனைப் போற்றிக் கற்க வேண்டும். |
| **3.** | **சதாவதானம் என்றால் என்ன?** |
| | ❖ சதம் என்றால் நூறு என்பது பொருள்.<br>❖ ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்ணறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம் எனப்படும்.<br>❖ சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர் ஆவார். |
| **4.** | **செய்குதம்பிப் பாவலர் - குறிப்பு வரைக.** |
| | ❖ சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர்.<br>❖ கன்னியாகுமரி மாவட்டம் இடலாக்குடி என்னும் ஊரைச் சேர்ந்தவர்.<br>❖ காலம் : 1874 முதல் 1950<br>❖ பதினைந்து வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்றவர்.<br>❖ 1907 மார்ச் 10ஆம் நாளில் அறிஞர் பலர் முன்னிலையில் நுஸறு செயல்களை ஒரே நேரத்தில் செய்து காட்டி ‘சதாவதானி’ என்னும் பாராட்டுப் பெற்றவர்.<br>❖ இவரது அனைத்து நூல்களும் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. |

**செய்யுளடி வினாவிடை**

| | | | | |
|---|---|---|---|---|
| | **அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி<br>மருளை அகற்றி மதிக்கும் தெருளை<br>அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்<br>பொருத்துவதும் கல்வியென்றே போற்று** | | | |
| 1. | இப்பாடல் இடம்பெற்றுள்ள பாடலின் தலைப்பு என்ன? | | | |
| | அ. நீதி வெண்பா | ஆ. கலி வெண்பா | இ. சொல் வெண்பா | ஈ. பூத்தொடுத்தல் |
| 2. | இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன? | | | |
| | அ.செய்குதம்பிப் பாவலர் | ஆ. திருவள்ளுவர் | இ. பரஞ்சோதியார் | ஈ. உமாமகேஸ்வரி |
| 3. | சீராப்புராணத்திற்கு உரை எழுதியவர் யார்? | | | |
| | அ. உமாமகேஸ்வரி | ஆ. பரஞ்சோதியார் | இ. வீரமாமுனிவர் | ஈ. செய்குதம்பிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பாவலர் |
| 4. | செய்கு தம்பிப் பாவலர் ........... மாவட்டத்தில் பிறந்தார். | | | |
| | அ. புதுக்கோட்டை | ஆ. கன்னியாகுமரி | இ. திருவள்ளூர் | ஈ. காஞ்சிபுரம் |
| 5. | செய்கு தம்பிப் பாவலர் எவ்வாறு போற்றப்பட்டார்? | | | |
| | அ. தசாவதானி | ஆ. அஷ்டாவதானி | இ. சதாவதானி | ஈ. நவாவதானி |
| 6. | ஆவிக்கு என்னும் சொல்லின் பொருள் என்ன? | | | |
| | அ. உயிருக்கு | ஆ. நீராவிக்கு | இ. பிசாசுக்கு | ஈ. தலைக்கு |
| 7. | மருள் என்னும் சொல் உணர்த்தும் பொருள் யாது? | | | |
| | அ. துயரம் | ஆ. மயக்கம் | இ. கலக்கம் | ஈ. உறக்கம் |
| 8. | உயிருக்கு உற்ற துணையாய் இன்பம் சேர்ப்பது எது? | | | |
| | அ. வீரம் | ஆ. இன்பம் | இ. செல்வம் | ஈ. கல்வி |

## இயல் - 5 – செய்யுள் - திருவிளையாடற் புராணம்

**1. மன்னன், இடைக்காடனார் என்னும் புலவருக்குச் சிறப்புச் செய்தது ஏன்?**

- ➢ பாண்டிய நாட்டை ஆண்ட குசேல பாண்டியன் என்னும் மன்னன் தமிழ் புலமையில் சிறந்து விளங்கினான்.
- ➢ இடைக்காடனார் பாடிய கவிதையை மன்னன் அவமதித்தான்.
- ➢ இடைக்காடனார் இறைவனிடம் முறையிட்டார்.
- ➢ இறைவன் தனது இலிங்க வடிவத்தை மறைத்து கடம்பவனக் கோவிலை விட்டு நீங்கி வடதிரு ஆலவாயிலில் சென்று தங்கினார்.
- ➢ இதை அறிந்த மன்னர் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனை வேண்டிப் போற்றினான்.
- ➢ பிறகு இடைக்காடனாரைப் பொன் இருக்கையில் இருத்திச் சிறப்புச் செய்தான்.

**2. சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் பற்றிக் கூறுக.**

- ➢ ஏடானும் புலவரொருவர் நாடாளும் மன்னரைக் காணச் சென்றார்.
- ➢ களைப்பு மிகுதியால் அரசக் கட்டிலில் கண்ணயர்ந்தார்.
- ➢ அரச குற்றமான அச்செயலைச் செய்த புலவருக்குத் தண்டனை வழங்காமல் கவரி வீசினார் மன்னர்.
- ➢ உறங்கிய புலவர் மோசிகீரனார்.
- ➢ கவரி வீசிய மன்னன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை.
- ➢ கண்விழித்த புலவர் மன்னரின் செயலைக் கண்டு வியந்து பாமழை பொழிந்தார்.

**3. இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவி சாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.**

<table>
<tr><td></td><td colspan="4">

➢ இடைக்காடனார் இறைவனை வணங்கி, தமிழறியும் பெருமானே! பாண்டியன் பொருட்செல்வத்தோடு கல்விச்செல்வமும் மிக உடையவன் என அறிந்து

➢ சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதும் சுவைத்துத் தலை அசைக்காமல் அவமதித்தான்.

➢ பாண்டியன் சொல்லின் சொல்லின் வடிவாக இருக்கும் பார்வதி தேவியையும் சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையும் அவமதித்தான் என்றார் இடைக்காடனார்.

➢ அவரது சொல் இறைவனின் திருச்செவியைத் தைத்தது.

➢ இறைவன் கோவிலை விட்டு வெளியேறி, திருஆலவாயில் சென்று தங்கினார்.

➢ இதையறிந்த பாண்டியன் இறைவனிடம் மன்னிக்க வேண்டியும் தன் தவறு என்ன என்பதை உணர்த்துமாறும் வேண்டினான்.

➢ இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை என்றார் இறைவன்.

</td></tr>
<tr><td>4.</td><td colspan="4">திருவிளையாடற்புராணம் (அ) பரஞ்சோதி முனிவர் பற்றிக் குறிப்பு வரைக.</td></tr>
<tr><td></td><td colspan="4">

❖ பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் பிறந்தவர்.

❖ 17ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

❖ சிவபக்தி மிக்கவர்.

❖ வேதாரண்யப் புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரை பதிற்றுப்பத்தந்தாதி முதலிய நூல்களை இயற்றியவர்.

❖ இந்நூல் மதுரைக்காண்டம், கூடற்காண்டம், திருவாலவாய்க்காண்டம் என்னும் மூன்று காண்டங்களும் 64 படலங்களும் கொண்டது.

</td></tr>
<tr><td colspan="5">செய்யுள் அடியொற்றிய வினாக்கள்</td></tr>
<tr><td>1.</td><td colspan="4">“கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால்<br>பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்<br>மொழிந்து அரசன் தனைக் காண்டும் எனத் தொடுத்த பனுவலொடு மூரித் தீம் தேன்<br>வழிந்து ஒழுகு தாரனைக் கண்டு தொடுத்த உரைப்பனுவல் வாசித்தான் ஆல்”</td></tr>
<tr><td>1.</td><td colspan="4">இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன?</td></tr>
<tr><td></td><td>அ. திருவிளையாடற்புராணம்</td><td>ஆ. புதிய நம்பிக்கை</td><td>இ. மொழிபெயர்ப்புக்கல்வி</td><td>ஈ. நீதிவெண்பா</td></tr>
<tr><td>2.</td><td colspan="4">இப்பாடலின் காண்டத்தின் பெயர் என்ன?</td></tr>
<tr><td></td><td>அ. திருவள்ளூர் காண்டம்</td><td>ஆ. கூடல் காண்டம்</td><td>இ. மதுரைக் காண்டம்</td><td>ஈ. திருஆலவாய் காண்டம்</td></tr>
<tr><td>3.</td><td colspan="4">இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன?</td></tr>
<tr><td></td><td>அ. திருவள்ளுவர்</td><td>ஆ. பரஞ்சோதி முனிவர்</td><td>இ. ஔவையார்</td><td>ஈ. செய்குதம்பிப்</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | பாவலர் |
| **4.** | திருவிளையாடற்புராணம் எத்தனை காண்டங்களை உடையது? | | | |
| | அ. நான்கு | ஆ. மூன்று | இ. எட்டு | ஈ. இருபது |
| **5.** | பாண்டிய நாட்டை ஆண்ட மன்னனின் பெயர் என்ன? | | | |
| | அ. குசேல பாண்டியன் | ஆ. அரிமர்த்தன பாண்டியன் | இ. குலசேகர பாண்டியன் | ஈ. இராஜசேகர பாண்டியன் |
| **6.** | இப்பாடலில் குறிப்பிடப்படும் புலவரின் பெயர் என்ன? | | | |
| | அ. இடைக்காடனார் | ஆ. நக்கீரர் | இ. ஔவையார் | ஈ. சிவபெருமான் |
| **7.** | கேண்மை என்னும் சொல்லின் பொருள் என்ன? | | | |
| | அ. நன்மை | ஆ. கருமை | இ. நட்பு | ஈ. செல்வம் |
| **8.** | இடைக்காடனாரின் நண்பர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளவர் யார்? | | | |
| | அ. குலசேகரன் | ஆ. ஔவையார் | இ. சிவபெருமான் | ஈ. கபிலர் |
| **9.** | இறைவன் ................ விட்டு நீங்கி திருஆலவாயில் சென்று தங்கினார். | | | |
| | அ. கடம்பவனத்தை | ஆ. கும்பகோணத்தை | இ. திருவள்ளூரை | ஈ. காஞ்சிபுரத்தை |
| **10.** | திருவிளையாடற்புராணத்தில் உள்ள படலங்களின் எண்ணிக்கை எத்தனை? | | | |
| | அ. அறுபது | ஆ. அறுபத்து நான்கு | இ. எழுபது | ஈ. இருபத்தெட்டு |
| | **சந்நிதியில் வீழ்ந்து எழுந்து தமிழ் அறியும் பெருமானே தன்னைச் சார்ந்தோர்<br>நல் நிதியே திரு ஆலவாய் உடைய நாயகனே நகுதார் வேம்பன்<br>பொன்நிதி போல் அளவு இறந்த கல்வியும் மிக்கு உளன் எனப் புகலக் கேட்டுச்<br>சொல் நிறையும் கவி தொடுத்தேன் அவமதித்தான் சிறிது முடி துளக்கான் ஆகி** | | | |
| 1. | இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன? | | | |
| | அ. திருவிளையாடற்புராணம் | ஆ. புதிய நம்பிக்கை | இ. மொழிபெயர்ப்புக்கல்வி | ஈ. நீதிவெண்பா |
| 2. | இப்பாடலின் காண்டத்தின் பெயர் என்ன? | | | |
| | அ. திருவள்ளூர் காண்டம் | ஆ. கூடல் காண்டம் | இ. மதுரைக் காண்டம் | ஈ. திருஆலவாய் காண்டம் |
| 3. | இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன? | | | |
| | அ. திருவள்ளுவர் | ஆ. பரஞ்சோதி முனிவர் | இ. ஔவையார் | ஈ. செய்குதம்பிப் பாவலர் |
| 4. | திருவிளையாடற்புராணம் எத்தனை காண்டங்களை உடையது? | | | |
| | அ. நான்கு | ஆ. மூன்று | இ. எட்டு | ஈ. இருபது |
| 5. | தார் என்னும் சொல்லின் பொருள் என்ன? | | | |
| | அ. மணி | ஆ. மண் | இ. மாலை | ஈ. மலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | குசேல பாண்டியன் என்னும் மன்னன் .................. மிக்கவன் எனக் கேள்விப்பட்டார். | | | |
| | அ. போர்வீரம் | ஆ. படைத்திறம் | இ. கொடைப்பண்பு | ஈ. கல்வியறிவு |
| 7. | முடி துளக்கான் என்னும் சொல்லின் பொருள் யாது? | | | |
| | அ. தலையசைப்பு | ஆ. தலைக்குணிவு | இ. தலைவலி | ஈ. தலைமுடி |
| 8. | வேம்பன் என்பது யாரைக் குறிக்கிறது? | | | |
| | அ. இடைக்காடனார் | ஆ. சிவபெருமான் | இ. பாண்டியன் | ஈ. கபிலர் |
| 9. | இடைக்காடனார் பாடலைக் கேட்ட பாண்டியன் என்ன செய்தான்? | | | |
| | அ. கவலைப்பட்டான் | ஆ. அவமதித்தான் | இ. சிரித்தான் | ஈ. கவுரவித்தான் |
| | **“புண்ணியப் புலவீர் யான் இப்போழ்து இடைக்காடனார்க்குப்<br>பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க எனப் பரவித் தாழ்ந்தான்<br>நுண்ணிய கேள்வி யோரும் மன்னநீ நுவன்ற சொல்லாம்<br>தண்ணிய அமுதால் எங்கள் கோபத்தீ தணிந்தது என்னா”** | | | |
| 1. | இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன? | | | |
| | அ. திருவிளையாடற்புராணம் | ஆ. புதிய நம்பிக்கை | இ. மொழிபெயர்ப்புக்கல்வி | ஈ. நீதிவெண்பா |
| 2. | இப்பாடலின் காண்டத்தின் பெயர் என்ன? | | | |
| | அ. திருவள்ளூர் காண்டம் | ஆ. கூடல் காண்டம் | இ. மதுரைக் காண்டம் | ஈ. திருஆலவாய் காண்டம் |
| 3. | இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன? | | | |
| | அ. திருவள்ளுவர் | ஆ. பரஞ்சோதி முனிவர் | இ. ஔவையார் | ஈ. செய்குதம்பிப் பாவலர் |
| 4. | ‘பரவித் தாழ்ந்தவன்’ – யார்? | | | |
| | அ. குசேலபாண்டியன் | ஆ. சிவபெருமான் | இ. இடைக்காடன் | ஈ. கபிலன் |
| 5. | நுவன்ற – என்னும் சொல்லின் பொருள் என்ன? | | | |
| | அ. எழுதிய | ஆ. அடுத்த | இ. கொடுத்த | ஈ. கூறிய |
| 6. | தண்ணிய என்னும் சொல் உணர்த்தும் பொருள் யாது? | | | |
| | அ. அழுகிய | ஆ. குளிர்ந்த | இ. எரிந்த | ஈ. வெம்மையான |
| 7. | “கோபத்தீ தணிந்தது” – எனக் கூறியவர்கள் யார்? | | | |
| | அ. இறைவன் | ஆ. பொதுமக்கள் | இ. புலவர்கள் | ஈ. அரசர்கள் |

## துணைப்பாடம் - புதிய நம்பிக்கை

**குறிப்புச் சட்டகம்**

**முன்னுரை**

**மேரியின் குடும்ப நிலை**

**மேரிக்கு பிடித்த சூழல்**

**மேரியின் விருப்பம்**

**மேரிஜேன் பெற்ற கல்வி**

**பட்டமளிப்பு விழா**

**முடிவுரை**

முன்னுரை: வரலாற்றில் மனிதர்கள் வருகிறார்கள். சிலர் வரலாறாகவே இருக்கிறார்கள். இவர்கள் பாதையே இல்லாத இடத்தில் தங்கள் காலடிகளால் ஒற்றையடி பாதையிட்டு அதையே பெருஞ்சாலையாக ஆக்குகிறார்கள். இவர்களுள் ஒருவராக விளங்கிய மேரிஜேனைப் பற்றிக் காண்போம்.

மேரியின் குடும்ப நிலை : தினமும் காலை 5 மணிக்குக் கண்விழிக்கும் அவர்களுக்குப் பகல் முழுவதும் பருத்திக் காட்டில் வேலை. ஒரு நிமிடத்தைக் கூட வீணாக்கிவிடக்கூடாது என நினைக்கும் குடும்பம். மாலையில் அனைவரும் ஒன்றுகூடிப் பாடுவதும் பிரார்த்தனை செய்வதும் வழக்கம்.

மேரிக்கு பிடித்த சூழல் : மேரி கோடைக்கால இரவுகளை மிகவும் விரும்பினாள். தெளிந்த வானம், பருத்திப் பூக்களைப் பார்த்துச் கண் சிமிட்டும் நட்சத்திரங்கள் இவற்றைப் பார்ப்பது அவளுக்குப் பிடித்தமாயிருந்தது.

மேரியின் விருப்பம் : ஒருமுறை வெள்ளையர் வீட்டில் விளையாடியபடி சுற்றி வந்த போது ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்துப் புரட்டினாள். அப்போது வில்ஸனின் சிறுமி ‘‘புத்தகத்தை என்னிடம் கொடு, உனக்குப் படிக்கத் தெரியாது என்று அதைப் பிடுங்கிக் கொண்டாள். மேரி மனம் துவண்டாள். அது முதல் நான் படிக்க விரும்புகிறேன்: நான் படிக்க வேண்டும் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். மிஸ் வில்ஸன் அவர்கள் உன்னைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும் என முதல் முறையாக பள்ளிக்குச் செல்லவும் படிக்கவும் நம்பிக்கை கொடுத்தாள்.

மேரிஜேன் பெற்ற கல்வி : தான் பெற்ற புதிய கல்வியால் மேரி ஒரு முக்கியமான நபராக மாறிக் கொண்டுவந்தார். அவளால் இப்பொழுது கணக்குப் பார்க்க முடியும். மேரி தனது பள்ளியில் மேலும் புதிது புதிதாகக் கற்றுக்கொண்டு வந்தாள். தனது பாதையில் தான் மெதுவாக உயர உயர போய்க் கொண்டிருக்கிறோம் என மனதில் கூறிக் கொண்டாள்.

பட்டமளிப்பு விழா : பட்டமளிப்பு விழாவின் முக்கியப்பகுதி என்பது பட்டங்களை வழங்குவது. மதிப்புமிக்க வெள்ளைத்தாளில் ‘இப்பட்டம் பெறும் மாணவர்கள் எழுதவும் படிக்கவும் தெரிந்தவர்கள்’ என்று எழுதப்பட்டிருக்கும். மேரியின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்கள். மேரி தன்னுடைய பட்டத்தை மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டாள். பூப்போல அதை ஏந்தித் தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள்.

முடிவுரை: மேரிஜேன் கருப்பினப் பெண்ணாகப் பிறந்து கல்வி அறிவற்ற இருட்சமூகத்தில்

ஒற்றைச் சுடராக வந்து ஓராயிரம் சுடர்களை ஏற்றியவர். இவர்கள் வாழ்க்கையை அறிவது கல்வி வரலாற்றை அறிவதாகும்.

## இலக்கணம் - வினா, விடை வகைகள், பொருள்கோள்

*சான்று தருக*

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அறிவினா | | | |
| | அ. ஆசிரியர் மாணவரிடம் கேட்பது | ஆ. மாணவர் ஆசிரியரிடம் கேட்பது | இ. சந்தேகமாகக் கேட்பது | ஈ. கொடுப்பதற்காகக் கேட்பது |
| 2. | அறியாவினா | | | |
| | அ. ஆசிரியர் மாணவரிடம் கேட்பது | ஆ. மாணவர் ஆசிரியரிடம் கேட்பது | இ. சந்தேகமாகக் கேட்பது | ஈ. கொடுப்பதற்காகக் கேட்பது |
| 3. | ஐய வினா | | | |
| | அ. பருப்பு உளதா? | ஆ. நாளை வருவான் | இ. பாம்பா? கயிறா? | ஈ. சர்க்கரை உளதா? |
| 4. | கொளல் வினா | | | |
| | அ. நாளை வருவாயா? | ஆ. பாடலின் பொருள் என்ன? | இ. நாளை வருவான் | ஈ. பருப்பு உளதா? |
| 5. | ஏவல் வினா | | | |
| | அ. செய்யுளைப் படித்தாயா? | ஆ. செய்யுளைப் படித்தேன் | இ. நாளை வருக | ஈ. இது செய்வாயா? |
| 6. | மறை விடை அல்லது எதிர்மறை விடை | | | |
| | அ. செய்வேன் எனக் கூறுவது | ஆ. செய்யேன் எனக் கூறுவது | இ. வருவேன் எனக் கூறுவது | ஈ. வருவாயா எனக் கேட்பது |
| 7. | உற்றது உரைத்தல் விடை | | | |
| | அ. கால் வலிக்கும் | ஆ. கால் வலித்தது | இ. கால் வலிக்குமா | ஈ. கால் வலி வருமா? |
| 8. | ஏவல் விடை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அ. நீயே செல் | ஆ. நான் செல்கிறேன் | இ. நாளை செல்கிறேன் | ஈ. நான் செல்லட்டுமா? |
| 9. | உறுவது கூறல் விடை | | | |
| | அ. கால் வலி வருமா? | ஆ. கால் வலித்தது | இ. கால் வலிக்குமா | ஈ. கால் வலிக்கும் |
| | நிரப்புக. | | | |
| 1. | வினா .................. வகைப்படும். | | | |
| | அ. ஆறு | ஆ. ஏழு | இ. எட்டு | ஈ. பத்து |
| 2. | விடைகள் ................ வகைப்படும். | | | |
| | அ. ஆறு | ஆ. ஏழு | இ. எட்டு | ஈ. பத்து |
| 3. | ஐயத்தைப் போக்க வினவும் வினா .................. எனப்படும். | | | |
| | அ. அறிவினா | ஆ. அறியாவினா | இ. கொடைவினா | ஈ. ஐயவினா |
| 4. | ஒரு பொருளை வாங்கும் பொருட்டு வினவும் வினா .................... எனப்படும். | | | |
| | அ. கொளல்வினா | ஆ. கொடை வினா | இ. ஐய வினா | ஈ. ஏவல் வினா |
| 5. | ஒரு செயலைச் செய்யும் படி ஏவும் வினா ............ எனப்படும். | | | |
| | அ. அறி வினா | ஆ. ஏவல் வினா | இ.கொடை வினா | ஈ. ஐய வினா |
| 6. | கடைக்கு வழி யாது? என்ற வினாவிற்கு "இது" எனச் சுட்டிக் கூறும் விடை .................... எனப்படும். | | | |
| | அ. ஏவல் விடை | ஆ. நேர் விடை | இ. சுட்டுவிடை | ஈ. மறை விடை |
| 7. | கடைக்குச் செல்வாயா? என்னும் வினாவிற்குச் செல்வேன் என்று கூறும் விடை .................... எனப்படும். | | | |
| | அ. ஏவல் விடை | ஆ. நேர் விடை | இ. சுட்டுவிடை | ஈ. மறை விடை |
| 8. | கடைக்குச் செல்வாயா? என்னும் வினாவிற்குச் செல்லேன் என்று மறுத்துக் கூறும் விடை .................... எனப்படும். | | | |
| | அ. ஏவல் விடை | ஆ. நேர் விடை | இ. சுட்டுவிடை | ஈ. மறை விடை |
| 9. | கடைக்குச் செல்வாயா? என்னும் வினாவிற்கு நீயே செல் என்று ஏவலாகக் கூறும் விடை .................... எனப்படும். | | | |
| | அ. ஏவல் விடை | ஆ. நேர் விடை | இ. சுட்டுவிடை | ஈ. மறை விடை |
| 10. | கடைக்குச் செல்வாயா? என்னும் வினாவிற்கு நீ ஏன் போகமாட்டாய்? என்று கூறும் விடை .................... எனப்படும். | | | |
| | அ. நேர்விடை | ஆ. ஏவல்விடை | இ.சுட்டுவிடை | ஈ. வினாஎதிர் வினாதல் விடை |
| 11. | விளையாடலாமா என்ற வினாவிற்குக் கால் வலிக்கிறது எனக் கூறுதல் ............. விடை எனப்படும். | | | |
| | அ. உற்றது உரைத்தல் | ஆ. உறுவது கூறல் | இ. இனமொழி | ஈ. வினா எதிர் வினாதல் |
| 12. | ஆடலாமா? என்ற வினாவிற்குப் பாடலாம் என்று விடையாகக் கூறுவது .................... விடை எனப்படும். | | | |
| | அ. உற்றது உரைத்தல் | ஆ. உறுவது கூறல் | இ. இனமொழி | ஈ. வினா எதிர் வினாதல் |
| 13. | விளையாடலாமா என்ற வினாவிற்குக் கால் வலிக்கிறது எனக் கூறுதல் ............. விடை எனப்படும். | | | |
| | அ. உற்றது | ஆ. உறுவது கூறல் | இ. இனமொழி | ஈ. வினா எதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | உரைத்தல் | | | வினாதல் |
| 14. | செய்யுளில் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு சேர்த்தோ மாற்றியோ பொருள் கொள்ளும் முறைக்கு ................ என்று பெயர். | | | |
| | அ. ஆகுபெயர் | ஆ. யாப்பு | இ. புணர்ச்சி | ஈ. பொருள்கோள் |
| 15. | பொருள்கோள் ...................... வகைப்படும். | | | |
| | அ. இரண்டு | ஆ. ஒன்பது | இ. எட்டு | ஈ. பத்து |
| 16. | ஒர செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது ........................ பொருள்கோளாகும். | | | |
| | அ. கொண்டுகூட்டுப் | ஆ. தாப்பிசைப் | இ. ஆற்றுநீர்ப் | ஈ. விற்பூட்டுப் |
| 17. | பாடலின் தொடக்கும் முதல் முடிவு வரை நேராகப் பொருள் கொள்வது ........................... பொருள்கோளாகும். | | | |
| | அ. கொண்டுகூட்டுப் | ஆ. தாப்பிசைப் | இ. ஆற்றுநீர்ப் | ஈ. விற்பூட்டுப் |
| | **இலக்கணக் குறிப்பு** | | | |
| 1. | கேள்வியினான் | | | |
| | அ. வினையால் அணையும் பெயர் | ஆ. வினைத்தொகை | இ. பண்புத்தொகை | ஈ. ஆகுபெயர் |
| 2. | காடனுக்கும் கபிலனுக்கும் | | | |
| | அ.வினைத்தொகை | ஆ. எண்ணும்மை | இ. உருவகம் | ஈ. பண்புத்தொகை |
| 3. | ஐயா இப்பாடலின் பொருள் யாது? | | | |
| | அ. அறிவினா | ஆ. அறியாவினா | இ. ஐயவினா | ஈ. கொடை வினா |
| 4. | உன்னிடம் எழுதுகோல் இல்லையா? | | | |
| | அ. அறிவினா | ஆ. அறியாவினா | இ. ஐயவினா | ஈ. கொடை வினா |
| | **கூறியவாறு செய்க** | | | |
| 1. | சொக்க வெள்ளிப் பாற்குடமே? அமுத ஊற்றோ? - இத்தொடரில் பயின்று வந்துள்ள வினா வகையை எழுதுக. | | | |
| | அ. அறி வினா | ஆ. ஏவல் வினா | இ.கொடை வினா | ஈ. ஐய வினா |
| 2. | 'நிலவென வாராயோ அருள்மழை தாராயோ' - இத்தொடரில் பயின்று வந்துள்ள வினா வகையை எழுதுக. | | | |
| | அ. அறிவினா | ஆ. ஏவல் வினா | இ. ஐயவினா | ஈ. கொடை வினா |
| 3. | கிரிக்கெட் விளையாடலாமா? – வினாவிற்கு ஏற்ற இனமொழி விடையை எடுத்து எழுதுக. | | | |
| | அ. கால்பந்து விளையாடலாம் | ஆ. பாடம் படிக்கலாம் | இ. ஓவியம் வரையலாம் | ஈ. கோவிலுக்குச் செல்லலாம். |
| | **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக** | | | |
| |  | வனவளம் காப்போம்<br>வான்மழையைப் போற்றுவோம்<br>நெகிழியைத் தவிர்ப்போம்<br>மண்ணுலகைக் காப்போம்<br>மரங்களை வளர்ப்போம்<br>மாமழையை வரவேற்போம் | | |

| இயல் - 6 – உரைநடை பன்முகக் கலைஞன் | |
|---|---|
| 1. | **தமிழ்மொழிக்காகக்கலைஞர்செய்தசிறப்புகளுள்நீங்கள்அறிந்து கொண்டஇரண்டினைஎழுதுக.**<br>➢ மனோன்மணியம்சுந்தரனார்இயற்றிய 'நீராருங்கடலுடுத்த' எனும்பாடலைஅரசுவிழாக்கள்அனைத்திலும்தொடக்கப்பாடலாகப் பாடவழிவகுத்துள்ளார்.<br>➢ 2010ஆம்ஆண்டுகோவையில்தமிழ்நாடுஅரசின்சார்பில்உலகத்தமிழ்ச்செம்மொழிமாநாட்டைநடத்தினார்.<br>➢ தமிழ்மீதுதீராதபற்றுகொண்டகலைஞர், இலக்கியத்திலும்பெரும்பங்காற்றினார்.<br>➢ நளாயினி, சித்தார்த்தன்சிலை, சந்தனக்கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில்குஞ்சுஉள்ளிட்டபலசிறுகதைகளையும்ரோமாபுரிப்பாண்டியன், பொன்னர்சங்கர், தென்பாண்டிச்சிங்கம், ஒரேரத்தம்உள்ளிட்டபுதினங்களையும்எழுதியுள்ளார். |
| 2. | **போராட்டக்கலைஞர் – பேச்சுக்கலைஞர் – நாடகக்கலைஞர் – திரைக்கலைஞர் – இயற்றமிழ்க்கலைஞர்ஆகியதலைப்புகளைக்கொண்டுகட்டுரை ஒன்றுஎழுதுக.**<br><br><u>முன்னுரை :</u><br>கலைஞர்கருணாநிதிதிருவாரூர்மாவட்டத்தில்உள்ளதிருக்குவளையில் 3 ஜூன் 1924-ல்பிறந்தார். கலைஞர்பகுத்தறிவுகொள்கைபரப்பும்சிந்தனையாளர். பழுமரக்கனிப்பயன்கொள்ளும்பேச்சாளர். படிப்பவரைக்கவரும்ஆற்றல்கொண்டஎழுத்தாளர். கலைத்துறையில்வாகைசூடியபடைப்பாளர். முத்தமிழிலும்வல்லவித்தகர்.<br><br>**<u>போராட்டக்கலைஞர் :</u>**<br>➢ கலைஞர், திருக்குவளையில்தொடக்கக்கல்வியும், திருவாரூரில்உயர்நிலைக்கல்வியும்பயின்றார். |

| | |
|---|---|
| | ➢ 1921இல்சென்னைமாகாணத்திற்குநீதிக்கட்சியின்சார்பில்முதல்அமைச்சராகஇருந்தபனகல்அரசரின்சாதனைகளைக்கூறும்நூலைப்படித்தார்.<br>➢ அந்நூல்அவருக்குஅரசியல்அரிச்சுவடியாகஅமைந்தது.<br>➢ தன்னுடைய 14ஆம்வயதில்பள்ளிமுடிந்தபின்புதான்எழுதிய "வாருங்கள்எல்லோரும்போருக்குச்சென்றிடுவோம்" என்றபாடலைமுழங்கியபடி, இந்தித்திணிப்பைஎதிர்த்துதிருவாரூர்வீதிகளில்மாணவர்களுடன்சேர்ந்து போராடினார்.<br>**<u>பேச்சுக்கலைஞர் :</u>**<br>➢ இளமைப் பருவத்திலேயேதந்தைபெரியாரின்பகுத்தறிவுக்கருத்துகள்கலைஞரைஈர்த்தன.<br>➢ பட்டுக்கோட்டைஅழகிரி, அறிஞர்அண்ணாஆகியோரின்பேச்சாற்றல்அவரைக்கவர்ந்தது.<br>➢ இளம்வயதில் "நட்பு" என்னும்தலைப்பில்ஆற்றியசொற்பொழிவுபலராலும்பாராட்டப்பட்டது.<br>➢ பள்ளிப்பருவத்திலேயேமாணவர்களுக்குப்பேச்சுப்பயிற்சிஅளிப்பதற்காகச் "சிறுவர்சீர்திருத்தச்சங்கம்" மாணவரிடையேஒற்றுமையுணர்வைவளர்த்தெடுக்கத் "தமிழ்நாடுதமிழ்மாணவர்மன்றம்" ஆகியஅமைப்புகளைத்தொடங்கினார்.<br>**<u>நாடகக்கலைஞர் :</u>**<br>➢ கலைஞர்எழுதிய 'பழநியப்பன்' என்னும்முதல்நாடகம், 1944ஆம்ஆண்டுஅரங்கேற்றப்பட்டது.<br>➢ 'சாம்ராட்அசோகன், மணிமகுடம், வெள்ளிக்கிழமை, காகிதப்பூ' உட்படபலநாடகங்களைஎழுதினார்.<br>➢ தான்எழுதிய 'தூக்குமேடை' என்னும்நாடகத்தில்நடிகர்எம்.ஆர். இராதாவின்வேண்டுகோளுக்காகமாணவர்தலைவராகக்கருணாநிதிநடித்தார்.<br>➢ அந்நாடகத்திற்கானபாராட்டுவிழாவில்தான்அவருக்குக் 'கலைஞர்' என்னும்சிறப்புப்பெயர்வழங்கப்பட்டது.<br>**<u>திரைக்கலைஞர் :</u>**<br>➢ எம்.ஜி.ஆர். முதன்முதலாகநடித்த 'ராஜகுமாரி' (1947) படத்துக்கானமுழுவசனத்தையும்கலைஞர்எழுதினார். |

| | |
|---|---|
| | - அத்திரைப்படம்பெரும்வெற்றிபெற்றது.<br>- அதனைத்தொடர்ந்துஎம்.ஜி.ஆரின்நடிப்பில், மருதநாட்டுஇளவரசி, மந்திரிகுமாரி, நாம். மலைக்கள்ளன்முதலானபடங்கள்தொடர்ந்துவெளிவந்தன.<br>- கலைஞரின்வசனங்கள் ‘சொல்புதிதுசுவைபுதிது’ என்றுகேட்போர்வியக்கும்வண்ணம்அமைந்தன.<br>- சிவாஜிகணேசன்நடித்தமுதல்படமானபராசக்திக்கும்கலைஞர்திரைக்கதை, வசனம்எழுதினார்.<br>- அதன்பிறகு, சிவாஜிகணேசனின்நடிப்பில்உருவானதிரும்பிப்பார், மனோகரா, ராஜாராணிமுதலியதிரைப்படங்களும்கலைஞரின்கதை, வசனத்தில்தொடர்ந்துவெளிவந்தது.<br>- அறிஞர்அண்ணாவின்ரங்கோன்ராதாகதைக்குக்கலைஞர்வசனம்எழுதியதோடு, அப்படத்தில்நான்குபாடல்களும்எழுதினார்.<br>- 1947ஆம்ஆண்டு, தன் 23ஆம்வயதில்திரைப்படங்களுக்குஎழுதத்தொடங்கியகலைஞர், 2011இல் 92ஆம்வயதுவரைநிறைவாய்எழுதினார்.<br>**<u>இயற்றமிழ்க்கலைஞர் :</u>**<br>- தன்னுடைய 22ஆம்வயதில்மலேசியமண்ணில், சுபாஷ்சந்திரபோசின்இந்தியதேசியஇராணுவத்தைச்சேர்ந்ததமிழ்நாட்டுவீரர்மலேயாகணபதிஎன்பவர், ஆங்கிலேயரால்தூக்கிலிடப்பட்டுஇறந்ததைஅறிந்துகலைஞர் ‘கயிற்றில்தொங்கியகணபதி’ என்றசிறியகட்டுரைநூலைஎழுதினார்.<br>- நளாயினி, சித்தார்த்தன்சிலை, சந்தனக்கிண்ணம், தாய்மை, புகழேந்தி, அணில்குஞ்சுஉள்ளிட்டபலசிறுகதைகளையும்ரோமாபுரிப்பாண்டியன், பொன்னர்சங்கர், தென்பாண்டிச்சிங்கம், ஒரேரத்தம்உள்ளிட்டபுதினங்களையும்எழுதியுள்ளார்.<br>- தம்வாழ்க்கைவரலாற்றை “நெஞ்சுக்குநீதி” என்னும்தலைப்பில்ஆறுபாகங்களாகஎழுதிவெளியிட்டுள்ளார்.<br>- சங்கத்தமிழ், குறளோவியம், தொல்காப்பியப்பூங்காஎன்னும்பெயரில்பழந்தமிழ்இலக்கியங்களுக்கும்அவர்உரைஎழுதியுள்ளார்.<br>**<u>முடிவுரை :</u>**தமிழ், தமிழர், தமிழ்நாடுஎன்றசிந்தனையிலேயேதம்ஆயுளைச்செலவிட்டகலைஞர், |

<table>
<tr><td></td><td colspan="2">தாம்சென்றஇடமெல்லாம்செறிவாகத்தமிழ்பேசித்தன்மானத்தை, தமிழ்உணர்வை, தமிழிலக்கியத்தை, பகுத்தறிவை, மதஒருமைப்பாட்டை, சமூகநல்லிணக்கத்தைநமக்கெல்லாம்ஊட்டினார். தமிழின்பெருமிதங்களையும்விழுமியங்களையும்மீட்டெடுக்கஎண்ணியகலைஞர், அதற்கானபணிகளைதன்வாழ்நாள்முழுவதும்தொடர்ந்தார்.</td></tr>
<tr><td colspan="3">இயல் - 6 – செய்யுள் - பூத்தொடுத்தல்</td></tr>
<tr><td>1.</td><td colspan="2">நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப்பாடலில் வெளிப்படுகிறது – ஒப்பிட்டு எழுதுக.</td></tr>
<tr><td></td><td colspan="2"><u>நவீன கவிதை</u> : பூவினை இறுக்கி முடித்தால் காம்பு அறுந்துவிடும். தளரப் பிணைத்தால் தரையில் நழுவும். வாசலில் மரணம் இருப்பது தெரிந்தும் கவலைப்படாமல் சிரித்துக் கொண்டிருக்கும். அதுபோல பெண்ணும் வாழ்வில் வரும் பிரச்சனைகளை எதிர்க்கொண்டு மலர்ந்து கொண்டுதான் இருக்கிறாள்.<br>நாட்டுப்புறப்பாடல் : இறைவனுக்குப் போடப்போகும் பூவைக் கையால் தொடுத்தால் காம்பு அழுகிப் போகும். விரலால் தொடுத்தால் வெம்பிப் போகும். இதனால் தங்கத் துரட்டி கொண்டு நான் இறைவனுக்கு மாலையாகத் தொடுக்கிறேன்.<br>ஒப்பீடு : புதுக்கவிதையில் தொடுக்கும் பூ மரணத்திற்குப் போடப்படுகிறது. நாட்டுப்புறப்பாடலில் தொடுக்கும் பூ இறைவனுக்குப் போடப்படுகிறது. இரண்டிலும் தொடுக்கும் பூ ஒன்றே: ஆனால் சென்று சேரும் இடம் தான் வெவ்வேறாக இருக்கிறது.</td></tr>
<tr><td>2.</td><td colspan="2">பூத்தொடுக்கும் பெண்ணின் மனநிலையாகக் கவிஞர் உமாமகேஸ்வரியின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.</td></tr>
<tr><td></td><td colspan="2">➢ இந்தப் பூவை நான எப்படித் தொடுப்பேன்.<br>➢ இந்தப் பூவின் மென்மையான தண்டுகள் அமைதியான உலகத்தைச் சுமக்கின்றன.<br>➢ மெல்லிய தண்டை இறுக்கி முடிச்சிட்டால் காம்பு அறுந்துவிடும்.<br>➢ தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும்.<br>➢ வாசலில் மரணம் இருப்பது தெரிந்தும் கவலைப்படாமல் சிரிக்கும் இப்பூவை நான் எப்படித் தொடுப்பேன்.<br>➢ ஒருவேளை என் மனம் மிக நுட்பமாக மாறி நூலாகினால் மட்டுமே இது சாத்தியம் என்கிறார்.</td></tr>
<tr><td colspan="3">செய்யுள் அடியொற்றிய வினாக்கள்</td></tr>
<tr><td></td><td>இந்தப் பூவைத் தொடுப்பது எப்படி?<br>சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்<br>சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்<br>இறுக்கி முடிச்சிட்டால்<br>காம்புகளின் கழுத்து முறியும்<br>தளரப் பிணைத்தால்<br>மலர்கள் தரையில் நழுவும்</td><td>வாசலில் மரணம் நிற்பதறிந்தும்<br>வருந்தாமல் சிரிக்கும்<br>இந்தப் பூவை<br>எப்படித் தொடுக்க நான்?<br>ஒருவேளை,<br>என் மனமே நூலாகும்<br>நுண்மையுற்றாலொழிய......</td></tr>
<tr><td>1.</td><td colspan="2">இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள பாடத் தலைப்பு என்ன?</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| | அ. பூத்தொடுத்தல் | ஆ. பிள்ளைத் தமிழ் | இ. கம்ப ராமாயணம் | ஈ. திருக்குறள் |
| 2. | இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன? | | | |
| | அ. ரமா மகேஸ்வரி | ஆ. உமா மகேஸ்வரி | இ. சக்தி ஈஸ்வரி | ஈ. பிரியா மகேஸ்வரி |
| 3. | இப்பாடலின் ஆசிரியர் .......... மாவட்டத்தில் பிறந்தவர் ஆவார். | | | |
| | அ. கடலூர் | ஆ. திருச்சி | இ. மதுரை | ஈ. திருவள்ளூர் |
| 4. | மனித வாழ்விற்கு அழகூட்டுபவை எவை? | | | |
| | அ. தலைகள் | ஆ. மலைகள் | இ. பூக்கள் | ஈ. கலைகள் |
| 5. | தளரப் பிணைத்தால் மலர்கள் ......................... நழுவும். | | | |
| | அ. பையில் | ஆ. கையில் | இ. தரையில் | ஈ. வலையில் |
| 6. | பிரபஞ்சத்தைச் சுமப்பது எது? | | | |
| | அ. மல்லிச் செண்டுகள் | ஆ. ஒல்லித் தண்டுகள் | இ. முல்லைச் செண்டுகள் | ஈ. அல்லித் தண்டுகள் |
| 7. | மலர்களை இறுக்கி முடிச்சிட்டால் என்ன ஆகும்? | | | |
| | அ. கழுத்து முறியும் | ஆ. காம்பு வளரும் | இ. மாலை உருவாகும் | ஈ. தரையில் நழுவும் |
| 8. | மரணம் இருப்பதை அறிந்தும் மலர்கள் எவ்வாறு சிரிக்கின்றன? | | | |
| | அ. வருத்தத்துடன் | ஆ. வருந்தாமல் | இ. அழாமல் | ஈ. நிற்காமல் |
| 9. | எப்போது பூத்தொடுக்க இயலும் என்கிறார் கவிஞர்? | | | |
| | அ. மனமே நூலானால் | ஆ. நூல் மெலிதானால் | இ. பூ வாடினால் | ஈ. நூல் கடினமானால் |

# இயல் - 6 – செய்யுள் - முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

1. **வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.**

**<u>வைத்திய நாதபுரி முருகன் செங்கீரை ஆடும் அழகு</u>**

• கால்களில் அணிந்திருந்த சிறு செம்பொன் கிண்கினிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.

• இடையில் அரைஞாண் மணியோடு ஒளி வீசுகின்ற அரை வட்டங்கள் ஆடின.

• பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறு வயிறு சரிந்தாடியது.

• பட்டம் கட்டிய நெற்றியில் பொட்டுடன் வட்டவடிவான சுட்டி பந்தாடியது.

• கம்பிகளால் உருவான குண்டலங்களும் காதின் குழைகளும் அசைந்தாடின.

• உச்சிக் கொண்டை அதில் சுற்றிக் கட்டப்பட்டுள்ள ஒளியுள்ள முத்துகளோடு ஆடியது.

2. **பிள்ளைத்தமிழ் குறிப்பு வரைக**

| | |
|---|---|
| | ❖ 96 வகையான சிற்றிலக்கியங்களில் ஒன்று<br>❖ இறைவனையோ, அரசனையோ, தலைவரையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைக் குழந்தையாகக் கருதிப் பாடுவர்.<br>❖ பத்துப் பருவங்கள் அமைத்துப் பாடுவர்.<br>❖ பருவத்திற்குப் பத்துப் பாடல் வீதம் மொத்தம் நூறு பாடல்கள் இடம்பெறும்.<br>❖ ஆண்பால் பிள்ளைத்தமிழ், பெண்பால் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும். |
| 3. | **குமரகுருபரர் குறிப்பு வரைக.** |
| | பெயர் : குமரகுருபரர்<br>காலம் - கி.பி. 17ஆம் நூற்றாண்டு<br>புலமை பெற்ற மொழிகள் - தமிழ், வடமொழி, இந்துஸ்தானி<br>இயற்றிய நூல்கள் : கந்தர் கலிவெண்பா<br>நீதிநெறி விளக்கம்<br>திருவாரூர் மும்மணிக்கோவை<br>மதுரைக் கலம்பகம்<br>மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்<br>சகலாகலாவல்லி மாலை |

## செய்யுள் அடியொற்றிய வினாக்கள்

**“செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்**
**திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்**
**பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சிரிந்தாடப்**
**பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்**
**கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்**
**கட்டிய சூழியு முச்சியு முச்சிக் கதிர்முத் தொடுமாட**
**வம்பவ ளத்திரு மேனியு மாடிட ஆடுக செங்கீரை**
**ஆதி வயித்திய நாத புரிக்குக னாடுக செங்கீரை”**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இவ்வரிகள் இடம்பெற்றுள்ள பாடலின் தலைப்பு என்ன? | | | |
| | *அ. முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்* | ஆ. பூத்தொடுத்தல் | இ.கம்பராமாயணம் | ஈ. சிலப்பதிகாரம் |
| 2. | நம் பாடப்பகுதி பிள்ளைத்தமிழின் எப்பருவத்தில் இடம்பெற்றுள்ளது? | | | |
| | அ. அம்புலி | ஆ. நீராடல் | இ.வருகை | *ஈ. செங்கீரை* |
| 3. | சந்தத்துடன் பாடும் பாடலில் …................ இருக்கும். | | | |
| | அ. இன்னிசை | *ஆ. உயிர்ப்பு* | இ. சத்துகள் | ஈ. வேகம் |
| 4. | இப்பாடல் யாரைப்பற்றிப் பாடப்பட்டுள்ளது? | | | |
| | அ. சிவபெருமான் | ஆ. பிள்ளையார் | *இ. முருகன்* | ஈ. ஆஞ்சநேயர் |
| 5. | பிள்ளைத்தமிழ் என்பது 96 வகை …...................... ஒன்றாகும். | | | |
| | *அ. சிற்றிலக்கியம்* | ஆ. பேரிலக்கியம் | இ.கவிதைகள் | ஈ. காப்பியங்கள் |
| 6. | காலில் கிண்கிணியோடு அணிந்த அணிகலன் பெயர் என்ன? | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அ. வளையல் | *ஆ. சிலம்பு* | இ.குண்டலம் | ஈ. நெற்றிச்சுட்டி |
| 7. | முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் நூலின் ஆசிரியர் யார்? | | | |
| | அ. பாரதிதாசன் | ஆ. பாரதியார் | *இ. குமரகுருபரர்* | ஈ. பரஞ்சோதியர் |
| 8. | நுதல் என்னும் சொல்லின் பொருள் என்ன? | | | |
| | அ. வயிறு | ஆ. மூக்கு | *இ. நெற்றி* | ஈ. நாக்கு |
| 9. | குண்டலமும் குழைகளும் அணியும் பகுதி எது? | | | |
| | *அ. காதுகள்* | ஆ. மூக்கு | இ.வயிறு | ஈ. கால்கள் |
| 10. | மேனி என்னும் சொல் குறிக்கும் பொருள் என்ன? | | | |
| | அ. கால்கள் | ஆ. வயிறு | இ.நெற்றி | *ஈ. உடம்பு* |
| 11. | பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்? | | | |
| | *அ. இரண்டு* | ஆ. மூன்று | இ.நான்கு | ஈ. ஐந்து |

## இயல் - 6 – செய்யுள் - கம்பராமாயணம்

| | |
|---|---|
| 1. | **கோசல நாட்டின் வளத்தைக் கம்பனின் உத்தி எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?** |
| | ➢ கோசல நாட்டில் வறுமை சிறிதும் இல்லாததால் கொடைக்கு அங்கே இடம் இல்லை.<br>➢ நேருக்கு நேர் போர் புரிபவர் இல்லாததால் உடல் வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை.<br>➢ பொய்மொழி பேசுபவர் இல்லாததால் மெய்மை தனித்த விளங்குவதில்லை.<br>➢ பலவகை கேள்விச்செல்வம் மிகுந்து விளங்குவதால் அங்கு அறியாமை சிறிதும் இல்லை என்று ஒன்றின் இருப்பால் மற்றொன்று அடையாளப்படுத்தப்படுகிறது. |
| 2. | **இராமனின் திருமேனி அழகைக் கம்பர் எவ்வாறு விளக்குகிறார்?** |
| | ➢ பகலவன் பட்டொளி இராமனின் நீலமேனி ஒளியில் பட்டு இல்லையெனும்படி மறைந்துவிட இடையே இல்லை எனும்படியான நுண்ணிய இடையாள் சீதையொடும்<br>➢ இளையவன் இலக்குவனொடும் போனாள்.<br>➢ அவன் நிறம் மையோ? பச்சை நிற மரகதமோ? மறிக்கின்ற நீலக் கடலோ? கார்மேகமோ? ஐயொ! ஒப்பற்ற அழியாத அழகினை உடைய வடிவு கொண்டவன் இராமன் என இராமனின் திருமேனி அழகை விளக்குகிறார் கம்பர். |
| 3. | **ஏழைமை வேடன் இறந்திலன் - விளக்குக (அல்லது) உலகத்தார் தன்னை எவ்வாறு பழிப்பர் என்று குகன் கூறினான்?** |
| | ➢ ஆழமும் பெரிய அலைகளையும் உடைய கங்கை ஆற்றைக் கடந்து செல்வார்களா?<br>➢ யானைகள் கொண்ட சேனையைக் கண்டு புறமுதுகு காட்டி விலகிச் செல்கின்ற வில்வீரனோ நான்?<br>➢ தோழமை என்று இராமர் சொன்ன சொல் ஒப்பற்ற சொல் அல்லவா?<br>➢ தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகவிட்டால் அற்பனாகிய இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் என்னைப் பழிக்கமாட்டார்களா? என |

| | |
|---|---|
| | உரையாற்றினான். |
| 4. | **சரயு நதி எங்கெங்கு பாய்ந்து செல்கிறது?** |
| | ➤ மகரந்தம் சிந்துகின்ற சோலைகள்<br>➤ மரங்கள் செறிந்த செண்பகக் காடுகள்<br>➤ அரும்புகள் அவிழ்ந்து மலரும் பொய்கைகள்<br>➤ புதமணல் தடங்கள்<br>➤ குரக்கத்தி வேலியுடைய பாக்குத் தோட்டங்கள்<br>➤ நெல்வயல்கள்<br>➤ அனைத்திலும் சரயு நதி பரவிப் பாய்கிறது. |
| 5. | **கம்பர்குறிப்புவரைக .**<br>➤ ஆசிரியர் பெயர் : கம்பர்<br>➤ பிறந்தஊர் : சோழநாட்டில்உள்ளதிருவழுந்தூர்<br>➤ ஆதரித்தவர் : திருவெண்ணெய்நல்லூர்ச்சடையப்பவள்ளல்<br>➤ பெற்றசிறப்புகள் : கல்வியில்பெரியவர்கம்பர்<br>கம்பன்வீட்டுக்கட்டுத்தறியும்கவிபாடும்<br>விருத்தம்என்னும்ஒண்பாவிற்குஉயர்கம்பன்<br>➤ இயற்றியநூல்கள் : கம்பராமாயணம்<br>சரசுவதிஅந்தாதி<br>சடகோபர்அந்தாதி<br>திருக்கைவழக்கம்<br>ஏர்எழுபது<br>சிலைஎழுபது . |
| 6. | இயற்கைகொலுவீற்றிருக்கும்காட்சியைப்பெரியகலைநிகழ்வேநடப்பதான தோற்றமாகக்கம்பன்கவிஎவ்வாறுகாட்டுகிறது . (அல்லது ) மருதம்எவ்வாறுவீற்றிருக்கிறது ?<br>• குளிர்ந்த சோலைகளில்மயில்கள்ஆடின .<br>• தாமரைமலர்கள்விளக்குகள்ஏற்றியதுபோல்தோன்றின .<br>• மேகங்கள்மத்தளஒலியாய்எழுந்தன .<br>• குவளைமலர்கள்கண்கள்விழித்துப்பார்ப்பதுபோல்காட்சியளித்தன .<br>• நீர்நிலைகள்எழுப்பும்அலைகள்திரைச்சீலைகளாய்விரிந்தன .<br>• மகரயாழின்தேன்ஒத்தஇசைபோல்வண்டுகள்பாடமருதம்வீற்றிருந்தது . |
| 7. | கும்பகருணனைக்கம்பர்தம்கவிநயத்தால்எவ்வாறுஎழுப்புக |

ிறார் ?

- உறங்குகின்றகும்பகருணனே !
- உம்முடையபொய்யானவாழ்வுஎல்லாம்இன்றிலிருந்துஇறங்குவதற்குத்தொட ங்கிவிட்டது .
- அதனைக்காண்பதற்காகஎழுந்திடுவாய் ! எழுந்திடுவாய் !
- காற்றாடிபோலஎல்லாஇடங்களிலும்திரிகின்றவில்லைப்பிடித்த எமனுக்க ுத்தூதரானவர்கையில்இனிப்படுத்துஉறங்குவாயாக !

## செய்யுள் அடியொற்றிய வினாக்கள்

"தாதுகு சோலை தோறுஞ் சண்பகக் காடு தோறும்
போ தவிழ் பொய்கை தோறும் புதுமணற் றடங்க டோறும்
மாதவி வேலிப் பூக வனம்தொறும் வயல்க டோறும்
ஓதிய வுடம்பு தோறு முயிரென வுலாய தன்றே"

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூலின் பெயர் என்ன? | | | |
| | அ. கம்ப இராமாயணம் | ஆ. மணிமேகலை | இ. சிலப்பதிகாரம் | ஈ. சீவக சிந்தாமணி |
| 2. | இப்பாடலின் ஆசிரியர் பெயர் என்ன? | | | |
| | அ. பாரதியார் | ஆ. ஔவையார் | இ. பாரதிதாசன் | ஈ. கம்பர் |
| 3. | கம்பராமாயணம் எத்தனை காண்டங்களை உடையது? | | | |
| | அ. இரண்டு | ஆ. ஆறு | இ. ஐந்து | ஈ. எட்டு |
| 4. | கம்பர் இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி …….. எனப் பெயரிட்டார். | | | |
| | அ. கம்ப வரலாறு | ஆ. இராம வரலாறு | இ. இராமாவதாரம் | ஈ. இராமசரிதம் |
| 5. | பூகம் என்னும் சொல் உணர்த்தும் பொருள் யாது? | | | |
| | அ. பாக்கு | ஆ. வெற்றிலை | இ. சுண்ணாம்பு | ஈ. பூகம்பம் |
| 6. | இப்பாடலில் எந்த நதி பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது? | | | |
| | அ. காவிரி ஆறு | ஆ. சரயு நதி | இ. வைகை நதி | ஈ. தபதி ஆறு |
| 7. | மாதவி எனக் குறிக்கப்படும் செடி எது? | | | |
| | அ. வெற்றிலை | ஆ. ஆலமரம் | இ. அரசமரம் | ஈ. குறுக்கத்தி |
| 8. | கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் ………… பாடும். | | | |
| | அ. பாடல் | ஆ. கவிதை | இ. கவி | ஈ. பாட்டு |
| 9. | கம்பரை ஆதரித்த வள்ளலின் பெயர் என்ன? | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அ. சடையப்ப வள்ளல் | ஆ. குமண வள்ளல் | இ. பாரி வள்ளல் | ஈ. கடையெழு வள்ளல் |

# இயல் - 6 – துணைப்பாடம் - பாய்ச்சல்

| | |
|---|---|
| | **குறிப்புச் சட்டகம்**<br>*முன்னுரை*<br>*அழகு கண்ட காட்சி*<br>*அனுமார் பாய்ச்சல்*<br>*அழகின் அனுமார் ஆட்டம்*<br>*முடிவுரை*<br><br>முன்னுரை :உண்மைக் கலைஞன் தன் கலையில் முழு ஈடுபாட்டைக் காட்டுவான். கலை நிகழ்வின் ஊடாக அவன் பெருமிதம் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கும். தன்னைப்போன்ற கலைஞர்களிடமிருந்து வேறுபட்டுத் தமக்கெனத் தனித் தன்மைகளைக் காட்டுவான்.<br>அழகு கண்ட காட்சி : அழகு தலையை நீட்டிப் பார்த்தான். சிறுவர்கள் புழுதி பறக்க ஓடிக்கொண்டிருந்தார்கள். நாதசுரமும் மேளமும் ஒன்றாக ஒலித்தது. இவன் குனிந்து பார்த்தான். இரண்டு கால்கள் மின்னல் வெட்டி மறைவது போலத் துள்ளிப் பாய்ந்து சென்றன. அக்கால்கள் மனிதக் கால்களிலிருந்து மாறுபட்டு இருப்பதைக் கண்டான்.<br>அனுமார் காட்சி : அனுமார் வலது காலையும் இடது காலையும் உதைத்து வேகமாக நடக்க ஆரம்பித்தார். சதங்கையும் மேளமும் நாதசுரமும் ஒன்றாக இழைந்தன. அனுமார் தாவிக் குதித்துப் பாய்ந்து சென்றார். பெருங்குரல் எழுப்பியபடி அனுமார் பந்தல் கால் வழியாகக் கீழே குதித்தார். அனுமார் வாலில் பெரிய தீப்பந்தம் எரிந்தது. அழகு அவர்கள் அருகில் சென்றான். அழகு அருகில் சென்றதும் உன் பெயர் என்ன? என்று கேட்டான்.<br>அனுமார் பாய்ச்சல் : அனுமார் இன்னொரு பாய்ச்சல் பாய்ந்து வேகமாக ஆட ஆரம்பித்தார். பதுங்கியும் பாய்ந்தும் ஆடினார். புழுதி புகை போல எழுந்தது. கழுத்துமணி அறுந்து கீழே விழுந்ததையும் பொருட்படுத்தாமல் ஆடினார்.<br>அழகின் அனுமார் ஆட்டம் : அழகு எழுந்து தரையில் கிடந்த வாலை இடுப்பில் கட்டிக் கொண்டு காலில் சதங்கையைக் கட்டிக்கொண்டு அனுமார் மூஞ்சியை மாட்டிக் கொண்டு தான் கண்ட காட்சியெல்லாம் மனத்தில் நிறுத்தி ஆட ஆரம்பித்தான். முதலில் மரத்திலிருந்து கீழே குதிக்கும் ஆட்டத்தை ஆடி பின் வாலில் நெருப்புப் பற்ற வைத்து அனுமாரை நோக்கிப் பாய்ந்தான். அனுமார் அவனை உற்றுப் பார்த்தார். மனம் தன்னலை மறந்தது.<br>முடிவுரை: கலைஞனின் கலை ஈடுபாட்டில் வயதோ, உடற்சோர்வோ பாதிப்பு ஏற்படுத்துவதில்லை. தன் கலையைப் பின்பற்ற தகுந்த வாரிசு உருவாகும் போது அவன் கொள்ளும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அளப்பரியது. |
| **இயல் - 6 இலக்கணம் - அகப்பொருள்** | |
| | **நிரப்புக** |

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | அகம், புறம் ஆகிய இரண்டும் ………… இலக்கணம் ஆகும். | | | |
| | அ. எழுத்து | ஆ. சொல் | **இ. பொருள்** | ஈ. யாப்பு |
| 2. | குறிஞ்சி, முல்லை முதலிய ஐந்தும் ……….. எனப்படும். | | | |
| | **அ. அன்பின் ஐந்திணை** | ஆ. அகத்திணை | இ. புறத்திணை | ஈ. அஃறிணை |
| 3. | நெய்தல் திணைக்குரிய நிலப்பகுதி ………… பகுதியாகும். | | | |
| | அ. மணல் | ஆ. வயல் | இ. காடு | **ஈ. கடல்** |
| 4. | வயலும் வயல் சார்ந்த பகுதியும் ………. எனப்படும். | | | |
| | அ. குறிஞ்சி | ஆ. முல்லை | **இ. மருதம்** | ஈ. நெய்தல் |
| 5. | மலையும் மலை சார்ந்த பகுதியும் ………. எனப்படும். | | | |
| | **அ. குறிஞ்சி** | ஆ. முல்லை | இ. மருதம் | ஈ. நெய்தல் |
| 6. | காடும் காடு சார்ந்த பகுதியும் ………. எனப்படும். | | | |
| | அ. குறிஞ்சி | **ஆ. முல்லை** | இ. மருதம் | ஈ. நெய்தல் |
| 7. | இரவு பத்து மணி முதல் இரண்டு மணி வரை உள்ள சிறுபொழுது ………. எனப்படும். | | | |
| | அ. எற்பாடு | ஆ. நண்பகல் | இ. வைகறை | **ஈ. யாமம்** |
| 8. | ஒரு ஆண்டின் ஆறு பிரிவுகள் ………. எனப்படும். | | | |
| | **அ. பெரும்பொழுது** | ஆ. சிறுபொழுது | இ. நாள்பொழுது | ஈ. மாலைப்பொழுது |
| 9. | ஒரு நாளின் ஆறு பிரிவுகள் ………. எனப்படும். | | | |
| | அ. பெரும்பொழுது | **ஆ. சிறுபொழுது** | இ. நாள்பொழுது | ஈ. மாலைப்பொழுது |
| 10. | மருதம், நெய்தல் ஆகிய இரண்டிற்கும் .................... பெரும் பொழுதுகளும் வரும். | | | |
| | **அ. ஆறு** | ஆ. கார்காலம் | இ. இளவேனில் | ஈ. முதுவேனில் |
| 11. | பொருள் இலக்கணம் .......... வகைப்படும். | | | |
| | அ. மூன்று | ஆ. நான்கு | **இ. இரண்டு** | ஈ. பத்து |
| 12. | முல்லை நிலத்திற்குரிய தெய்வம் ................ | | | |
| | அ. முருகன் | ஆ. கொற்றவை | இ. இந்திரன் | **ஈ. திருமால்** |
| 13. | மணமுழா, நெல்லரிகிணை ஆகிய இரண்டும் ..................... திணைக்குரிய பறைகளாகும். | | | |
| | அ. குறிஞ்சி | ஆ. முல்லை | **இ. மருதம்** | ஈ. நெய்தல் |
| 14. | மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் ஆகியன ......... நிலத்திற்கு உரிய தொழில்கள் ஆகும். | | | |
| | அ. குறிஞ்சி | **ஆ. நெய்தல்** | இ. முல்லை | ஈ. மருதம் |
| 15. | அகத்திணைகள் ................ வகைப்படும். | | | |
| | அ. மூன்று | ஆ. நான்கு | **இ. ஏழு** | ஈ. பத்து |
| 16. | மார்கழி, தை ஆகிய இரண்டும் ........... காலத்துக்குரியனவாகும். | | | |
| | அ. இளவேனில் | ஆ. கார்காலம் | இ. முன்பனிக்காலம் | ஈ. முதுவேனில் |
| 17. | மருத நிலத்திற்குரிய தெய்வம் ................ | | | |
| | அ. முருகன் | ஆ. கொற்றவை | **இ. இந்திரன்** | ஈ. திருமால் |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | பாலை நிலத்திற்குரிய பறவைகள் .................. | | | |
| | **அ. புறா, பருந்து** | ஆ. கிளி, மைனா | இ. மயில், கிளி | ஈ. மைனா, மயில் |
| 19. | சிங்கம், புலி, கரடி ஆகியன ........ நிலத்து விலங்குகள் ஆகும். | | | |
| | **அ. குறிஞ்சி** | ஆ. நெய்தல் | இ. முல்லை | ஈ. மருதம் |
| 20. | வயலும் வயல் சார்ந்த இடமும் .......... திணைக்குரியன ஆகும். | | | |
| | அ. குறிஞ்சி | ஆ. நெய்தல் | இ. முல்லை | **ஈ. மருதம்** |
| 21. | அகவொழுக்கம் நிகழ்வதற்குக் காரணமான நிலமும் பொழுதும் ......................... ஆகும். | | | |
| | அ. கருப்பொருள் | **ஆ. முதற்பொருள்** | இ. உரிப்பொருள் | ஈ. தமிழ்ப்பொருள் |
| 22. | அன்புடைய தலைவன், தலைவி பற்றிய ஒழுக்கத்தினைக் கூறுவது ................ எனப்படும். | | | |
| | **அ. அகத்திணை** | ஆ. புறத்திணை | இ. ஐந்திணை | ஈ. அ∴றிணை |
| 23. | கதிரவன் மறையும் நேரம் ............ எனும் சிறுபொழுதாகும். | | | |
| | அ. வைகறை | ஆ. நண்பகல் | **இ. எற்பாடு** | ஈ. யாமம் |
| 24. | ஐப்பசி, கார்த்திகை இரு மாதங்களும் .......... காலத்துக்கு உரியன ஆகும். | | | |
| | அ. கார்காலம் | ஆ. முதுவேனில் | இ. இளவேனில் | **ஈ. குளிர்காலம்** |
| 25. | பொருள் இலக்கணத்தில் பொருள் என்பது ............ குறிக்கும். | | | |
| | **அ. ஒழுக்கமுறை** | ஆ. நடைமுறை | இ. தமிழ்முறை | ஈ. பரிகார முறை |


## இலக்கணக் குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | குண்டலமும் குழைகாதும் | | | |
| | **அ. எண்ணும்மை** | ஆ. உம்மைத்தொகை | இ. உருவகம் | ஈ. ஆகுபெயர் |
| 2. | ஆடுக | | | |
| | அ. தெரிநிலைப் பெயரெச்சம் | ஆ. எதிர்மறைப் பெயரெச்சம் | இ. இருபெயரொட்டுப் பண்புத்தொகை | **ஈ. வியங்கோள் வினைமுற்று** |
| 3. | பாலை நில சிறுபொழுது | | | |
| | அ. எற்பாடு | **ஆ. நண்பகல்** | இ. யாமம் | ஈ. வைகறை |
| 4. | ஏறு தழுவுதல், ஆநிறை மேய்த்தல் | | | |
| | அ. குறிஞ்சி | ஆ. நெய்தல் | **இ. முல்லை** | ஈ. மருதம் |
| 5. | வழிப்பறி, நிரை கவர்தல் | | | |
| | அ. குறிஞ்சி | ஆ. நெய்தல் | இ. முல்லை | **ஈ. பாலை** |

## சான்று தருக

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | குறிஞ்சிக் கடவுள் | | | |
| | **அ. முருகன்** | ஆ. கொற்றவை | இ. இந்திரன் | ஈ. திருமால் |
| 2. | குறிஞ்சியின் பெரும்பொழுது | | | |
| | அ. குளிர்காலம், இளவேனில் | **ஆ. குளிர்காலம், முன்பனிக்காலம்** | இ. இளவேனில், முதுவேனில் | ஈ. கார்காலம், முதுவேனில் |
| 3. | பாலை நில தெய்வம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அ. முருகன் | **ஆ. கொற்றவை** | இ. இந்திரன் | ஈ. திருமால் |
| 4. | இளவேனிற்கால மாதங்கள் | | | |
| | அ. ஆனி, ஆடி | ஆ. ஆடி, ஆவணி | இ. புரட்டாசி, ஐப்பசி | **ஈ. சித்திரை, வைகாசி** |
| 5. | நெய்தல் நிலப் பறவை | | | |
| | **அ. கடற்காகம்** | ஆ. மயில் | இ. புறா | ஈ. குருவி, கிளி |
| 6. | குறிஞ்சி நிலத்தின் பறை | | | |
| | அ. நெல்லரிகிணை | ஆ. ஏறுகோட்பறை | **இ. தொண்டகப்பறை** | ஈ. நெய்தற்பறை |
| 7. | மருதநில விலங்கு | | | |
| | அ. புலி, சிங்கம் | **ஆ. எருமை, நீர்நாய்** | இ. கரடி, யானை | ஈ. ஆடு, மாடு |
| 8. | குறிஞ்சி நிலத்தின் தொழில் | | | |
| | **அ. தேனெடுத்தல், கிழங்கெடுத்தல்** | ஆ. மீன் பிடித்தல், உப்பெடுத்தல் | இ. வழிப்பறி, நிரை கவர்தல் | ஈ. புல்லறிதல், ஆடு மேய்த்தல் |
| 9. | கார்காலத்திற்கு உரிய மாதங்கள் | | | |
| | அ. ஆனி, ஆடி | ஆ. ஆடி, ஆவணி | **இ. ஆவணி, புரட்டாசி,** | ஈ. சித்திரை, வைகாசி |
| 10. | முதுவேனிற்காலத்திற்கு உரிய மாதங்கள் | | | |
| | **அ. ஆனி, ஆடி** | ஆ. ஆடி, ஆவணி | இ. புரட்டாசி, ஐப்பசி | ஈ. சித்திரை, வைகாசி |
| | **இயல் - 6 – செய்யுள் திருக்குறள்** | | | |
| | **சிறந்த அமைச்சருக்கான இலக்கணமாகக் குறள் கூறும் கருத்துகளை எழுதுக.** | | | |
| | • தொழில் செய்வதற்கான கருவி, ஏற்ற காலம், செயலின் தன்மை, செய்யும் முறை ஆகியவற்றை அறிந்து செயற்கரிய செயலைச் செய்பவனே நல்ல அமைச்சன் ஆவான்.<br>• மனவலிமை, குடிகளைக் காத்தல், ஆட்சி முறைகளைக் கற்றல், நூல்களைக் கற்றல், விடாமுயற்சி ஆகிய ஐந்தும் சிறப்பாக அமைந்தவரே அமைச்சராவார்.<br>• இயற்கையான நுண்ணறிவும் நூலறிவும் உடைய அமைச்சர்களுக்கு முன், எந்த நுட்பமான சூழ்ச்சிகளும் நிற்க முடியாது.<br>• இத்தகைய பண்புகளைப் பெறாதவர்கள் தலைமைப் பொறுப்பில் நீடிக்க முடியாது | | | |
| | **பொருள்செயல்வகை மூலமாக வள்ளுவர் உணர்த்தும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.** | | | |
| | • ஒரு பொருளாக மதிக்காதவரையும் மதிப்புடையவராகச் செய்வது செல்வம் ஆகும்.<br>• அச்செல்வம் அல்லாமல் சிறந்த பொருள் வேறில்லை.<br>• முறையறிந்து தீமையற்ற வழியில் சேர்த்த பொருள் ஒருவருக்கு அறத்தையும் தரும். இன்பத்தையும் தரும்.<br>• எப்படியும் பொருளீட்டலாம் என்று கருதுதல் கூடாது. | | | |

| | | |
|---|---|---|
| | • மற்றவர்களிடம் இரக்கமும் அன்பும் இல்லாமல் ஈட்டும் பொருளை ஏற்றுக் கொள்ளாமல் நீக்கிடவேண்டும்.<br>• ஒருவர் பொருளை ஈட்ட வேண்டும்.<br>• அவருடைய பகைவரை வெல்லும் கூர்மையான ஆயுதம் அதைவிடச் சிறந்தது வேறு இல்லை. | |
| | **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக** | |
| |  | **ஒயிலாட்டம்**<br>**ஒய்யாரமாய் ஆடும் கலை**<br>**ஒயிலாட்டம் ஆன கலை**<br>**சீருடைப் போல் உடை அணிந்து**<br>**வீரமாய் ஆடும் கலை**<br>**துன்பம் தீர்க்கும் கலை**<br>**துள்ளித் துள்ளி ஆடும் கலை**<br>**ஆண்கள் மட்டுமே ஆடுகின்ற**<br>**அழகாய் ஆடும் கலை** |
| |  | **உழைப்பே உயர்வு**<br>உதிரத்தைஉழைப்பாக்கி<br>உலகத்தைஉயர்த்திடும்<br>உண்மைதொழிலாளியை<br>உள்ளத்தால்வணங்குவோம்<br>உழைக்கும்இனமே<br>உலகைஜெயிக்கும்<br>உழைப்போம் உயர்வோம்!<br>இலக்கைஅடைவோம் |
| |  | **விவசாய நிலம்**<br>போலியானமருத்துவர் ..<br>போலியானபொறியாளர்..<br>என்றுகேள்விப்பட்டிருப்போம்<br>ஆனால்எங்கேயும்<br>“போலியானவிவசாயி என்று<br>கேள்விப்பட்டதில்லை . ஏனென்றால்<br>விவசாயிகளுக்குபோலியாக<br>இருக்கவும்தெரியாது ..<br>போலியாகநடிக்கவும்தெரியாது . |

## அறம் செய விரும்பு

நீ அளித்த தானமும் தர்மமும்
நீ செய்த பாவமும் புண்ணியமும்
நீ கொடுத்த மதிப்பும் மரியாதையும்
நீ செய்த சூழ்ச்சியும் துரோகமும்
ஒருநாள் உன்னைத் தேடிவந்து
நீ செய்ததை விடச் சிறப்பாகச்
செய்துவிட்டுப் போகும்!



---

## நூலக வசதி வேண்டி நூலக இயக்குநருக்கு ஒரு கடிதம் எழுதுக.

திருவள்ளூர்,
...................

**அனுப்புநர் :**

..................
15, கண்ணகி தெரு,
கம்பர் நகர்,
கடம்பத்தூர், திருவள்ளூர்.

**பெறுநர் :**

நூலக ஆணையர் அவர்கள்,
தமிழ்நாடு நூலகத்துறை,
சென்னை - 2

பொருள் : நூலக வசதி வேண்டுதல் தொடர்பாக.

மதிப்பிற்குரிய அய்யா,

வணக்கம். நான் கடம்பத்தூர் கம்பர் நகரில் கடந்த பத்து ஆண்டுகளாக வசித்து வருகிறேன். இங்கு சுமார் ஆயிரம் வீடுகள் உள்ளன. ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். ஆனாலும் எங்கள் பகுதியில் நூலகம் இல்லை. அதனால் பொது நூலகம் இல்லாமல் மாணவ மாணவிகள் பெரிதும் பாதிப்பு அடைகின்றனர். பொதுமக்களும் பெரிதும் துன்பம் அடைகின்றனர்.

ஆகவே எங்கள் பகுதியில் விரைந்து நூலகம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.

நன்றி ஐயா!

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

உறைமேல் முகவரி: ..............................

**பெறுநர் :**

நூலக ஆணையர் அவர்கள்,
தமிழ்நாடு நூலகத்துறை,
சென்னை - 2

| 2. | *உங்கள் பகுதியில் அரசு மருத்துவமனை அமைக்க வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு ஒரு கடிதம் எழுதுக.* |
|---|---|

திருவள்ளூர்,
........................

அனுப்புநர் :

..................
15, கண்ணகி தெரு,
செந்தமிழ் நகர்,
பம்மல், சென்னை – 45.

பெறுநர் :

மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
சென்னை மாநகராட்சி அலுவலகம்,
சென்னை – 2.

பொருள் : மருத்துவமனை அமைத்துத் தரவேண்டுதல் தொடர்பாக.

மதிப்பிற்குரிய அய்யா,

வணக்கம். நான் சென்னை – பம்மல் செந்தமிழ் நகரில் கடந்த பத்து ஆண்டுகளாக வசித்து வருகிறேன். இங்கு சுமார் ஆயிரம் வீடுகள் உள்ளன. ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். ஆனாலும் எங்கள் பகுதியில் அரசு மருத்துவமனை இல்லை. அதனால் ஏழை எளிய மக்கள் அரசு மருத்துவமனைக்கு நெடுந்தூரம் செல்ல வேண்டிய அவலநிலை உள்ளது. சரியான மருத்துவ வசதி இல்லாமல் மக்கள் அனைவரும் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகின்றனர்.

ஆகவே விரைந்து அரசு மருத்துவமனை அமைத்துத் தர எங்கள் பகுதி மக்கள் சார்பாக வேண்டுகிறேன்.

நன்றி ஐயா!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,

.............................................

உறைமேல் முகவரி :
பெறுநர் :

மாநகராட்சி ஆணையர் அவர்கள்,

சென்னை மாநகராட்சி அலுவலகம்,

சென்னை – 2.

| 3. | உங்கள் ஊரில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டி விளையாட்டுத்துறை ஆணையர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதுக. |
|---|---|

மதுரை,

.......................

அனுப்புநர் :

..................
15, கண்ணகி தெரு,
செந்தமிழ் நகர்,
மதுரை – 45.

பெறுநர் :

விளையாட்டுத்துறை ஆணையர் அவர்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சரகம்,
தலைமைச் செயலகம்,
சென்னை – 5

பொருள் : உள்விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர வேண்டுதல் தொடர்பாக.

மதிப்பிற்குரிய அய்யா,

வணக்கம். நான் மதுரை நகரில் கடந்த இருபது ஆண்டுகளாக வசித்து வருகிறேன். தற்போது மதுரையின் மக்கள் தொகை பத்து இலட்சத்தைக் கடந்து விட்டது. ஆனாலும் எங்கள் பகுதியில் உள்விளையாட்டு அரங்கம் இல்லை. அதனால் குழந்தைகளும் தடகள விளையாட்டு வீரர்களும் விளையாடத் தகுந்த இடம் இல்லாமல் மிகுந்த துன்பத்திற்கு ஆளாகின்றனர்.

ஆகவே எங்களின் நீண்டநாள் கனவாகிய உள்விளையாட்டு அரங்கத்தை விரைந்து அமைத்துத் தர வேண்டுகிறேன்.

நன்றி ஐயா!

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

..............................................

உறைமேல் முகவரி :

பெறுநர் :

விளையாட்டுத்துறை ஆணையர் அவர்கள்,
விளையாட்டுத்துறை அமைச்சரகம்,
தலைமைச் செயலகம்,
சென்னை – 5

| | |
|---|---|
| 4. | பொதுத் தேர்வு எழுதவிருக்கும் உன் நண்பனை வாழ்த்தியும் உற்சாக மூட்டியும் கடிதம் ஒன்று எழுதுக. |
| | 49, முல்லைதெரு,<br>மலைக்கோட்டை,<br>திருச்சி,<br>............................<br><br>அன்புள்ள நண்பா!<br>வணக்கம்.<br><br>நலம். நலமறிய ஆவல். இங்குநான் நன்றாகப் படித்து வருகின்றேன். அதுபோலவே நீயும் உன்னுடைய படிப்பில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருவாய் என நம்புகின்றேன். இவ்வாண்டு நீ பொதுத்தேர்வு எழுத இருக்கின்றாய் என்பதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.<br><br>பொதுத்தேர்வு என்பது நம் எதிர்காலத்தை முழு உருவு செய்ய எடுத்து வைக்கும் முதல் படி. இவ்வுண்மையை உணர்ந்து பொதுத் தேர்விற்குத் தேவையான அனைத்து வகையான முயற்சிகளையும் எடுத்திட வேண்டும். அவை அனைத்தும் உன்னுடைய வெற்றிக்கு முழுமையாய்ப் பயன்படும்.<br>நீ எழுதவிருக்கும் பொதுத் தேர்வில் அனைத்துப் பாடங்களிலும் நன்மதிப்பெண்கள் பெற உளமாற வாழ்த்துகின்றேன்.<br><br>இப்படிக்கு,<br>உன் அன்பு நண்பன்,<br>...............................<br><br>உறைமேல் முகவரி<br>பெறுநர் :<br>க. இரவி,<br>எண் : 12, காந்தி தெரு,<br>சென்னை – 600 017. |
| 5. | உங்கள் பகுதியில் ஏற்படும் மின்அழுத்தக் குறையைச் சரிசெய்யுமாறு மின்சாரத்துறை ஆணையருக்குக் கடிதம் ஒன்று வரைக. |
| | திருச்சி,<br>.....................<br><br>விடுநர்<br>க. கண்ணன்,<br>எண்: 49, முல்லைத்தெரு,<br>மலைக்கோட்டை,<br>திருச்சி – 600 202. |

பெறுநர்

உயர்திரு. மின்வாரியஆணையர் அவர்கள்,
தமிழ்நாடுமின்சாரவாரியம்,
திருச்சி – 600 001.

அய்யா வணக்கம்!

பொருள் : மின்அழுத்தக் குறையைச் சரிசெய்யுமாறுகோருதல்.

நாங்கள் வசிக்கும் பகுதியில் சுமார் 300 குடும்பங்கள் உள்ளன. எங்கள் பகுதியில் தினந்தோறும் மின் அழுத்தம் குறைவான வகையில் மின்சாரம் வழங்கப்படுகிறது.

இதன் காரணமாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் இரவில் தங்களுடைய கல்வி சார்ந்த பணிகளைச் செய்ய முடியாமல் தவிக்கின்றனர். இதனால் அவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகின்றது. எனவே, கல்வி பயிலும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு எங்கள் பகுதியில் சீரான மின் அழுத்தம் உள்ள மின்சாரம் வழங்கிட அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி ஐயா!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
.........................

உறைமேல் முகவரி:
பெறுநர்

உயர்திரு. மின்வாரியஆணையர் அவர்கள்,
தமிழ்நாடுமின்சாரவாரியம்,
திருச்சி – 600 001.

6. சாலை வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.

திருவள்ளூர்,
...................

விடுநர்

வெ. ஐயப்பன்,
54, தென்றல் தெரு,
முத்தமிழ் நகர்,
திருவள்ளூர்.

பெறுநர்

நகராட்சிஆணையர்அவர்கள்,
திருவள்ளூர் நகராட்சி அலுவலகம்,
திருவள்ளூர்.

மதிப்பிற்குரிய அய்யா!
வணக்கம்.

பொருள் : சாலைகளைச் சீரமைக்க வேண்டுதல்.

| | |
|---|---|
| | மேற்படி முகவரியில் வசிக்கும் நான் எங்கள் பகுதி மக்கள் சார்பில் இந்த வேண்டுகோளைத் தங்களுக்கு அனுப்புகிறேன். எங்கள் பகுதியில் சாலைகள் மேடு பள்ளங்களாகவும் வாகனங்கள் செல்ல ஏற்றதாகவும் இல்லை.<br>முன்னரே சீர்க்கெட்டிருந்த சாலைகள் அண்மையில் பெய்த மழையினால் முழுவதும் பாழாகிக் கிடக்கின்றன. இரவில் இரு சக்கர வாகனங்களில் செல்வோர் பலரும் விபத்துக்கு உள்ளாகின்றனர். அதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் துன்பப்படுகின்றனர்.<br>பழுதுபட்ட சாலைகளை விரைந்து செப்பம் செய்ய வேண்டுகின்றேன்.<br>நன்றி ஐயா!<br>இப்படிக்கு,<br>தங்கள் உண்மையுள்ள,<br>....................................<br><br>உறைமேல் முகவரி<br>பெறுநர் :<br>நகராட்சி ஆணையர் அவர்கள்,<br>திருவள்ளூர் நகராட்சி அலுவலகம்,<br>திருவள்ளூர். |
| 7. | குடிநீர் வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று வரைக |
| | திருவள்ளூர்,<br>.....................<br>அனுப்புநர்<br>....................................,<br>78, கோயில் தெரு,<br>திருவள்ளூர்,<br>திருவள்ளூர் மாவட்டம்.<br><br>பெறுநர்<br>உயர்திருஆணையாளர்அவர்கள்,<br>திருவள்ளூர் நகராட்சி,<br>திருவள்ளூர்.<br><br>மதிப்பிற்குரியஅய்யா!<br>வணக்கம்.<br>பொருள்: எங்கள் தெருவிற்குக் குடிநீர் வசதி செய்து தர வேண்டுதல்<br>மேற்படி எங்கள் பகுதியில் சுமார் 200 குடும்பங்கள் உள்ளன. எங்கள் பகுதியில் குழாய்களில் குடிநீர் சரிவர வருவதில்லை. நாங்கள் குடிநீர் பெறுவதற்குக் குடங்களுடன் மூன்று தெருக்களைக் கடந்து சென்று எடுத்து வர வேண்டியுள்ளது. அங்கேயும் தண்ணீருக்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. பள்ளி மற்றும் அலுவலகம் செல்லும் எங்கள் பகுதி மக்கள் |

| | |
|---|---|
| | மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர்.<br>எனவே, தாங்கள் பேரருள் கொண்டு குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தண்ணீருக்குத் தவிப்போரின் துயரைப் போக்குமாறு வேண்டுகிறேன்.<br>இங்ஙனம்,<br>தங்கள் உண்மையுள்ள,<br>................................<br>உறைமேல் முகவரி<br>பெறுநர் :<br>உயர்திரு ஆணையாளர் அவர்கள்,<br>திருவள்ளூர் நகராட்சி,<br>திருவள்ளூர். |
| 8. | உணவு விடுதியில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்துச் சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக. |
| | சென்னை,<br>...................<br>அனுப்புநர் :<br>.............................,<br>25,வடக்கு ராஜ வீதி,<br>மயிலாப்பூர்,<br>சென்னை – 4.<br>பெறுநர் :<br>உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,<br>உணவுப் பாதுகாப்பு ஆணையம்,<br>சென்னை – 15.<br>ஐயா!<br>பொருள் : தரமற்ற உணவு குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுதல்.<br>வணக்கம். நான் நேற்று காலை மயிலாப்பூர் கோவிலுக்கு அருகில் உள்ள கணபதி பவன் உணவகத்திற்குச் சென்று சிற்றுண்டி அருந்தினேன். அங்குள்ள விலைப் பலகையில் இருந்ததை விட அதிகமாக பணம் வசூலித்தார்கள். காரணம் கேட்டபொழுது சரியான விளக்கம் அளிக்க மறுத்து விட்டார்கள். நேற்று மாலை முதல் தொடர்ந்து பலமுறை வாந்தி ஏற்பட்டது. மருத்துவரிடம் சென்று பரிசோதித்த போது தரமற்ற உணவுப்பொருளை உண்டதால் ஏற்பட்டது எனக் கூறினார்.<br>தரமற்ற உணவுப் பண்டங்களை வழங்கியதோடு அதிக விலையும் வசூலிக்கும் மேற்படி உணவகத்தின் மீது நடவடிக்கை எடுத்து மக்களின் பணம் மற்றும் உயிரைக் காக்க வேண்டுகிறேன்.<br>நன்றி ஐயா!<br>இப்படிக்கு,<br>தங்கள் உண்மையுள்ள,<br>....................................... |

| | |
|---|---|
| | உறைமேல் முகவரி<br>பெறுநர்:<br>உணவுப் பாதுகாப்பு ஆணையர் அவர்கள்,<br>உணவுப் பாதுகாப்பு ஆணையம்,<br>சென்னை – 15. |
| 9. | வெற்றிக்குத் தடையாக இருப்பவை எவை என்பது பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் ஒன்று எழுதுக. |
| | 49, முல்லைதெரு,<br>மலைக்கோட்டை,<br>திருச்சி,<br>..............................<br><br>அன்புள்ள நண்பா!<br><br>நலம், நலமறிய ஆவல். இங்கு நான் நன்றாகப் படித்து வருகின்றேன். அது போலவே நீயும் உன்னுடைய படிப்பில் ஆழ்ந்த கவனம் செலுத்தி வருவாய் என நம்புகின்றேன். மேடையில் பேசுவதற்கு அஞ்சுகிறாய் என்பதை அறிந்து மிகவும்வருத்தமாக இருந்தது.<br>உன்னிடம் உள்ள பேச்சாற்றல் குறித்து உனக்குத் தெரியவில்லை. உன்னிடம் உள்ள பயத்தையும் தயக்கத்தையும் தூர தள்ளிவை. இவை இரண்டுமே வெற்றிப்பாதையை நோக்கிச் செல்லத் தடையாக இருப்பவை ஆகும். உன்னுள் இருக்கும் தன்னம்பிக்கையைத் தட்டி எழுப்பு. துணிச்சலுடன் செயல்படு. வெற்றி நிச்சயம் உனக்கே.<br><br>நீ வெற்றி பெற உளமாற வாழ்த்துகின்றேன்.<br>இப்படிக்கு,<br>உன் அன்பு நண்பன்,<br>...............................<br><br>உறைமேல் முகவரி<br>பெறுநர்<br>க. இரவி,<br>எண் : 12, காந்தி தெரு,<br>சென்னை – 600 017. |
| 10 | உன் பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்றத் தொடக்க விழா பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக. |
| | 16, அண்ணல் தெரு,<br>மலைக்கோட்டை,<br>திருச்சி,<br>........................<br><br>அன்புள்ள நண்பா! |

| | |
|---|---|
| | நலம், நலமறிய ஆவல். இங்கு நான் நன்றாகப் படித்து வருகின்றேன். சென்ற வாரம் எங்கள் பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்கவிழா தாளாளர் திரு. இரமேஷ் சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. இறைவணக்கத்திற்குப் பின் பள்ளித்தலைமை மாணவன் வரவேற்புரை ஆற்றினான்.<br>சிறப்புச் சொற்பொழிவாற்றிய தமிழறிஞர் திரு. சாலமன் பாப்பையா அவர்கள் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தாற்போல் கருத்துமழை பொழிந்தார். தமிழிலக்கியங்களிலிருந்து அவர் கூறிய கவிதைக் காட்சிகள் மாணவர்கள் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தது. அவரது சிறப்புரை தமிழிலக்கியங்களின் மேல் அனைவருக்கும் ஆர்வத்தைத் தூண்டியது.<br>இறுதியில் மாணவர் மன்றச் செயலர் நன்றி நவில நாட்டுப்பண்ணுடன் விழாஇனிதே நிறைவேறியது.<br><br>இப்படிக்கு,<br>உன் அன்பு நண்பன்,<br>...............................<br><br>உறைமேல் முகவரி<br>பெறுநர்<br>க. முத்துமணி,<br>எண் : 12, காந்தி தெரு,<br>சென்னை – 600 017. |
| 11 | உங்கள் பள்ளிக்குத் தேவையான கையேடுகளை அனுப்பி வைக்குமாறு புத்தக பதிப்பாளருக்குக் கடிதம் எழுதுக. |
| | திருவள்ளூர்,<br>............................<br><br>விடுநர்<br>க. கண்ணன்,<br>பத்தாம் வகுப்பு,ஈ பிரிவு,<br>ஏ.பி.எஸ். வித்யா மந்திர்,<br>திருவள்ளூர்.<br><br>பெறுநர்<br>மேலாளர் அவர்கள்,<br>சாரதா பதிப்பகம்,<br>10, மகாலட்சுமி தெரு,<br>தி.நகர், சென்னை – 17.<br><br>ஐயா,<br>பொருள் : கையேடுகள் சில அனுப்பி வைத்தல் தொடர்பாக.<br><br>வணக்கம். தாங்கள் பதிப்பித்துள்ள சில கையெடுகள் எம் பள்ளிக்குத் தேவைப்படுகின்றன. அவற்றுக்குரிய தொகையினைப் பணவிடைத்தாள் மூலம் அனுப்பியுள்ளேன். மேலே குறிப்பிட்டுள்ள எனது முகவரிக்குக் கொரியர் மூலம் தாமதமின்றி அனுப்பி வைக்க வேண்டுகிறேன். |

| | |
|---|---|
| | 1. தமிழ் பத்தாம் வகுப்புக் கையேடு 30 பிரதிகள்<br>2. ஆங்கிலம் பத்தாம் வகுப்புக் கையேடு 30 பிரதிகள்<br>3. கணிதம் பத்தாம் வகுப்புக் கையேடு 30 பிரதிகள்<br>4. அறிவியல் பத்தாம் வகுப்புக் கையேடு 30 பிரதிகள்<br>நன்றி,<br>இப்படிக்கு,<br>தங்கள் உண்மையுள்ள,<br>க. கண்ணன்.<br>உறைமேல் முகவரி<br>பெறுநர்<br>மேலாளர் அவர்கள்,<br>சாரதா பதிப்பகம்,<br>10, மகாலட்சுமி தெரு,<br>தி.நகர், சென்னை – 17. |
| 12 | நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி நாளிதழின் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக. |
| | திருவள்ளூர்,<br>..................<br>விடுநர்<br>க. கண்ணன்,<br>49, முல்லை தெரு,<br>பூங்கா நகர்,<br>திருவள்ளூர்,<br>பெறுநர்<br>ஆசிரியர் அவர்கள்,<br>தினமணி அலுவலகம்,<br>எக்ஸ்பிரஸ் எஸ்டேட்,<br>அம்பத்தூர், சென்னை –56.<br>ஐயா,<br>பொருள் : கட்டுரையை வெளியிட வேண்டி விண்ணப்பம்.<br>வணக்கம்.<br>இந்த ஆண்டு பொங்கல் விழா எங்கள் பகுதியில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. நான்கு நாட்கள் நடைபெற்ற நிகழ்வுகள் அனைவரையும் கவர்ந்தன. அதன் தொடர்பாக நான் ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறேன். இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அக்கட்டுரையைத் தங்களின் நாளிதழில் வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.<br>நன்றி,<br>இப்படிக்கு,<br>தங்கள் உண்மையுள்ள,<br>க. கண்ணன். |

| | |
|---|---|
| | உறைமேல் முகவரி<br>பெறுநர்<br>ஆசிரியர் அவர்கள்,<br>தினமணி அலுவலகம்,<br>எக்ஸ்பிரஸ் எஸ்டேட்,<br>அம்பத்தூர், சென்னை – 56. |
| 13 | விடுதி வாழ்க்கையின் சிறப்புகள் குறித்து நண்பனுக்கு/ தம்பிக்குக் கடிதம் எழுதுக |
| | 21, வடக்கு ராஜ வீதி,<br>திருவள்ளூர்,<br>................................<br><br>அன்புள்ள நண்பனுக்கு/ தம்பிக்கு,<br>நலம். நலமறிய ஆவல். வரவிருக்கின்ற அரசுத் தேர்விற்கு உன்னைத் தயார் படுத்திக்கொண்டு இருப்பாய் என நம்புகிறேன். தேர்விற்குத் தயார் செய்யும் போது உடன் படிக்கும் மாணவர்கள் அருகில் இருப்பது மிகவும் நன்மையானதாகும். விடுதியில் தங்கிப் படிக்கும் உனக்கு உன் நண்பர்கள் அருகில் இருப்பதால் உனக்கு ஏற்படும் ஐயங்களை உடனுக்குடன் தெளிவு செய்து கொள்ள அதிக வாய்ப்பு பெற்றுள்ளாய். மற்றவர்களுக்கு ஏற்படும் ஐயங்களை நீ தீர்த்து வைப்பதால் நீ கற்றவைகளை மீண்டும் ஒரு முறை நினைவு கூற வாய்ப்பாக அமையும். உறவுகளைப் பிரிந்து இருக்கின்றோம் என்ற எண்ணம் ஏற்படும் போது நண்பர்களுடன் தங்கி இருப்பது பன்மடங்கு உனக்கு நன்மைகளைத் தரும் என்பதனை நினைவில் கொள்க.<br>மேலும் விடுதியில் தங்கியிருப்பதால் அதிக நேரத்தைப் படிப்பதில் நீ செலவு செய்யலாம். எனவே விடுதியில் தங்கிப் படிப்பது என்பது மாணவர்களுக்கு மிகச் சிறந்த வாய்ப்பாகும். நன்கு படித்து தேர்வில் முதலிடம் பெற வாழ்த்துகிறேன்.<br>மற்றவை அடுத்த கடிதத்தில்.<br><br>இப்படிக்கு,<br>உன் அன்பு நண்பன்/அண்ணன்,<br>..............................................<br>உறைமேல் முகவரி<br>பெறுநர்<br>...........................,<br>25, கம்பர் தெரு,<br>வேலூர் - 604 009 |

| | |
|---|---|
| 14 | உன் பள்ளியின் ஆண்டுவிழாவில் பங்கேற்க வேண்டி சிறப்பு விருந்தினருக்குப் பள்ளியின் சார்பில் அழைப்பிதழ் அனுப்பிக் கடிதம் எழுதுக |
| | திருவள்ளூர்,<br>................................<br><br>அனுப்புநர்<br>தமிழிசை,<br>தமிழ் இலக்கிய மன்றத் தலைவர்.<br>ஏ.பி.எஸ். வித்யா மந்திர்,<br>திருவள்ளூர்.<br><br>பெறுநர்<br>திரு. சாலமன் பாப்பையா அவர்கள்,<br>16, கண்ணகி தெரு,<br>கோவலன் நகர்,<br>சென்னை – 17.<br>பொருள் : பள்ளி ஆண்டுவிழாவில் பங்கேற்க வேண்டுதல். |
| | மதிப்பிற்குரிய ஐயா,<br>வணக்கம். எங்கள் பள்ளியின் 13ஆம் ஆண்டுவிழா வருகிற ........................ அன்று மாலை 5.00 மணி அளவில் பள்ளி வளாகத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளோம். இத்தினத்தில் சிறப்பு விருந்தினராக வருகைத்தர ஒப்புக்கொண்டமைக்கு மிக்க நன்றி. மேலும் ஆண்டுவிழா அன்று மதியம் 3 மணிக்கே தங்கள் வருகையை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். பள்ளி ஆண்டு விழா அழைப்பிதழை இத்துடன் இணைத்துள்ளேன்.<br>இப்படிக்கு,<br>தங்கள் உண்மையுள்ள மாணவி,<br>தமிழிசை.<br>உறைமேல் முகவரி:<br>பெறுநர்<br>திரு. சாலமன் பாப்பையா அவர்கள்,<br>16, கண்ணகி தெரு,<br>கோவலன் நகர்,<br>சென்னை – 17. |
| 15 | பள்ளியில்/கல்லூரியில் சேர விரும்பும் பாடப்பிரிவு குறித்த தகவல்களைக் கேட்டறிந்து உன் உறவினருக்குக் கடிதம் எழுதுக. |
| | சென்னை,<br>.......................<br>அன்புள்ள அத்தை அவர்களுக்கு வணக்கம்.<br>நலம். நலமறிய ஆவல். தற்போது பத்தாம் வகுப்பு படிக்கும் நான் தேர்ச்சிக்குப் பிறகு எப்பாடப்பிரிவைத் தேர்வு செய்வது எதிர்கால வாழ்விற்கு நலம் பயக்கும் என்பதில் எனக்கு வழிகாட்ட வேண்டும் என எதிர்பார்க்கிறேன். தங்களை நேரில் சந்தித்து ஆலோசனை பெற விரும்பினேன். ஆனால் பொதுத் தேர்விற்குத் தயார் செய்ய வேண்டி இருப்பதால் நேரில் வர இயலவில்லை.<br>எனவே தங்களின் அறிவுரையையும் ஆலோசனையையும் வழிகாட்டுதலையும் பதில் கடிதத்தின் வாயிலாக அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறேன். |

| | |
|---|---|
| | இப்படிக்கு,<br>தங்கள் அன்புடன்,<br>தமிழினி.<br>உறைமேல் முகவரி :<br>பெறுநர்<br>திருமதி. மணிமேகலை,<br>16, கண்ணகி தெரு,<br>கோவலன் நகர்,<br>சென்னை – 17. |
| 16 | உங்கள் பகுதியில் காவல்நிலையம் அமைத்துத் தருமாறு வேண்டிஉள்துறை அமைச்சருக்குக் கடிதம் எழுதுக. |
| | முசிறி,<br>....................<br>விடுநர்/அனுப்புநர்<br>.................................,<br>14,கம்பர் தெரு,<br>நேரு நகர்,<br>முசிறி, திருச்சி.<br><br>பெறுநர்<br>மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்கள்,<br>உள்துறை அமைச்சரகம்,<br>தலைமைச் செயலகம்,<br>சென்னை.<br><br>மதிப்பிற்குரிய ஐயா<br><br>பொருள் : காவல் நிலையம் அமைத்துத் தருமாறு வேண்டுதல் குறித்து.<br><br>வணக்கம். நான் திருச்சியைச் சார்ந்த முசிறி நேரு நகரில் கடந்த பத்து ஆண்டுகளாக வசித்து வருகிறேன். இங்கு சுமார் நானூறு வீடுகள் உள்ளன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். ஆனாலும் எங்கள் பகுதியில் காவல்நிலையம் இல்லை. அதனால் பொது மக்கள் புகார் அளிக்க திருச்சி நகரத்திற்குச் செல்ல வேண்டிய அவலநிலை உள்ளது. காவல் நிலையம் அருகில் இல்லாததால் திருடர்கள் தொல்லையும் வழிப்பறித் தொல்லையும் அதிகரித்துள்ளது.<br>ஆகவே விரைந்து எங்கள் பகுதியில் காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டுகிறேன்.<br><br>நன்றி ஐயா! |

| | |
|---|---|
| | **இப்படிக்கு,**<br>**தங்கள் உண்மையுள்ள,**<br>.................................<br>**உறைமேல் முகவரி**<br>**பெறுநர்**<br>**மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்கள்,**<br>**உள்துறை அமைச்சரகம்,**<br>**தலைமைச் செயலகம்,**<br>**சென்னை.** |
| **கட்டுரைப் பயிற்சி** | |
| 1. | **உழவின் சிறப்பு** |
| | ❖ **முன்னுரை**<br>❖ **உணவு தரும் தொழில்**<br>❖ **உழவர் உலகத்தார்க்குஆணி**<br>❖ **இந்தியா கிராமங்களில் வாழ்கிறது**<br>❖ **இன்றைய நிலை**<br>❖ **விளைநிலங்கள் வீடு ஆதல்**<br>❖ **செயற்கைஉரம் தரும் சீரழிவு**<br>❖ **வெள்ளமும் வறட்சியும்**<br>❖ **தீர்வு**<br>❖ **முடிவுரை** |
| | **முன்னுரை :** “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்” என்கிறார் வான்புகழ் வள்ளுவர். இவ்வுலகில் முதன்மையான மேன்மையான தொழில் என்று உழவுத் தொழிலையே பதிவு செய்கின்றார். அத்தகைய உழவுத்தொழிலின் நிலையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br><br>**உணவு தரும் தொழில் :** உலகில் எத்தனையோ தொழில்கள் இருந்தாலும் அனைவருக்கும் உணவளிக்கும் அனைத்து உயிர்களையும் காத்திடும் தொழில் உழவுத் தொழிலே ஆகும். எனவே தான் “சுழன்றும் ஏர்ப்பின்னது” உலகம் என்கிறார் வள்ளுவர்.<br><br>**உழவர் உலகத்தார்க்கு ஆணி :** உழவன் சேற்றில் கால் வைக்கவில்லையெனில் நம்மால் சோற்றில் கைவைக்க முடியாது. எனவே தான் உழவர்கள் இந்நாட்டின் முதுகெலும்பு என்றும் உழுவோர் உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றனர்.<br><br>**இந்தியா கிராமங்களில் வாழ்கிறது :** இந்தியா எண்ணற்ற கிராமங்களைக் கொண்ட நாடு. கிராமங்களில் தான் பயிர்த்தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. எனவே நகரங்களின் உயிர் கிராமங்களில் தான் உள்ளது எனக் கூறுகின்றனர்.<br><br>**இன்றைய நிலை - விளைநிலங்கள் வீடு ஆதல் :** இன்றைய சூழலில் சரியான மழையின்மை, விளைச்சல் குறைவு மற்றும் பல்வேறு காரணங்களுக்காக |

| | |
|---|---|
| | விவசாயிகள் பயிர்த்தொழிலை விட்டுவிட்டு வேறு வேலைகளுக்குச் செல்கின்றனர். விளைநிலங்களை விற்றுவிட்டு நகரங்களுக்குக் குடிபெயர்கின்றனர். எனவே விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாறிவரும் அவலநிலையைக் காண்கிறோம்.<br><br>**செயற்கைஉரம் தரும் சீரழிவு** : இயற்கை உரங்களுக்கு மாற்றாக செயற்கை உரங்களைப் பயன்படுத்தி வருவதால் மண்ணின் வளம் குறைந்தது மட்டுமில்லாது மண்ணும் நஞ்சாக மாறி வருகிறது. எனவே விளைச்சல் குறைந்தது மட்டுமில்லாது பல்வேறு புதிய நோய்களும் மனிதர்களைத் தாக்குகின்றன.<br><br>**வெள்ளமும் வறட்சியும்** : காலநிலையில் ஏற்பட்டு வரும் மாற்றங்களினால் பருவமழைகள் பொய்த்தும் தேவையற்ற நேரங்களில் புயல், மழைகள் ஏற்பட்டு பயிர்களையும் உழவுத் தொழிலையும் வாட்டி வதைக்கின்றன.<br><br>**தீர்வு** : **1.** செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.<br>2. விளைநிலங்களை வீட்டுமனைகளாக மாற்றுவதைத் தவிர்க்க வேண்டும்.<br>3. பிளாஸ்டிக் பொருட்கள் உபயோகத்தைத் தவிர்த்து மண்வளம் காக்க வேண்டும்.<br>4. இயற்கை விவசாயத்தைக் காக்க வேண்டும்.<br><br>**முடிவுரை** : உழவு இல்லையெனில் உணவு இல்லை: உணவு இல்லையெனில் உயிர்கள் இல்லை. எனவே உயிர்காக்கும் உழவுத்தொழிலை நாமும் போற்றிச் சிறப்புடன் வாழ்வோமாக. |
| **2.** | **உழைப்பேஉயர்வு** |
| | ➢ **முன்னுரை**<br>➢ **மானுட மேன்மைக்கான வழிகள்**<br>➢ **தன்னம்பிக்கை முதற்படி**<br>➢ **ஓய்வில்லா உழைப்பு இரண்டாம் படி**<br>➢ **விடாமுயற்சியம் ஊக்கமும் அடுத்த படி**<br>➢ **செயலைத் திட்டமிடு**<br>➢ **திட்டத்தைச் செயல்படுத்து**<br>➢ **வானம் வசப்படும்**<br>➢ **முடிவுரை** |
| | **முன்னுரை: உழைத்தால் உயரலாம். கடின உழைப்பே வாழ்க்கையில் உயர்வதற்குச் சிறந்த வழியாகும். அத்தகைய உழைப்பின் சிறப்புகளைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.**<br><br>**மானுட மேன்மைக்கான வழிகள் : ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்வில்** |

மேன்மை அடைய வேண்டுமானால் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டியவை :

- தன்னம்பிக்கை
- உழைப்பு
- விடாமுயற்சி
- அறிவுக் கூர்மை
- சாதிக்க விரும்புவது
- மாற்றத்தை வரவேற்பது

தன்னம்பிக்கை முதற்படி: தளராத உள்ளம் கொண்டவனுக்கு இந்த உலகில் முடியாதது என்று எதுவும் இல்லை. தன்னம்பிக்கை என்னும் ஆயுதம் நம்மிடம் இருந்தால் அனைத்தையும் வென்றுவிடலாம்.

ஓய்வில்லா உழைப்பு இரண்டாம் படி: மனிதன் தன்னுடைய வாழ்வில் வெற்றிக்கனியைப் பறிப்பதற்கு ஓய்வில்லாத கடின உழைப்பு மிகவும் அவசியம் ஆகும்.

விடாமுயற்சியும் ஊக்கமும் அடுத்த படி:'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பது பொன்மொழி. 'தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' என்கிறார் வள்ளுவர். விடாமுயற்சி விஸ்வரூப வெற்றி என்பது பொன்மொழி. ஒரு செயலில் ஊக்கமும் விடாமுயற்சியும் இருப்பின் வெற்றிக்கனி பறித்தல் உறுதி.

செயலைத் திட்டமிடு- திட்டத்தைச் செயல்படுத்து: எந்த ஒரு செயலைச் செய்யும் முன்னும் சரியான திட்டமிடல் மிகவும் அவசியம் ஆகும். திட்டம் வகுத்து அந்த திட்டத்தைச் சரியான முறையில் சரியான காலத்தில் செயல்படுத்துதல் வெற்றிக்கான ஆதாரம் ஆகும்.

வானம் வசப்படும் : மேற்கண்ட வழிமுறைகளைத் தவறாது வாழ்க்கையில் பின்பற்றினால் நாம் எண்ணிய செயல்களை வெற்றியுடன் செய்து முடிப்பதோடு வானத்தையும் வசப்படச் செய்யலாம் என்பது உறுதி.

முடிவுரை : வாழ்க்கைப் பயணத்தில் நாம் சாதனை சிகரத்தை அடைய நமக்கு வேண்டிய மூலதனம் உழைப்பே ஆகும். விடாமுயற்சியுடன் ஊக்கத்தையும் கைப்பிடித்து வாழ்க்கையில் உழைப்போம் உயர்வோம்.

3. **உலகம் வெப்பமயமாதல்**

குறிப்புச் சட்டகம்

- முன்னுரை
- அறிவியலால் மாசுபடிதல்
- மரம் நடுவதன் இன்றியமையாமை
- ஆய்வு மையம்
- முடிவுரை

| | |
|---|---|
| | **முன்னுரை** :இயற்கை மிகவும் அழகானது. அந்த இயற்கையை மனிதன் ஆள முற்படுகின்றான். எனவே அவ்வியற்கையைத் தன் கட்டுக்குள் வைக்க முயல்கின்றான். மனிதனின் செய்கைகளால் இயற்கை அழிந்து வருகிறது. அதனால் பல்வேறு பேரழிவுகள் மற்றும் இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் ஒன்றான உலக வெப்பமயமாதல் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br>**அறிவியலால் மாசுபடிதல்** : நாட்டின் பல இடங்களிலும் நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலைகளிலிருந்து வரும் புகை மற்றும் வாகனங்கள் வெளியிடும் புகை காற்றில் கலக்கின்றன. மேலும் வீடுகளில் உபயோகப்படுத்தும் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் குளிரூட்டிகளிலிருந்து வரும் குளோரோ ஃபுளூரோ கார்பன் முதலிய நச்சு வாயுக்களும் காற்றில் கலந்துஇயற்கையை மாசுபடுத்துகிறது. மேலும் நகரமயமாக்கல் மூலம் கணக்கில்லாத மரங்கள் வெட்டப்படுகின்றன. மரங்கள் குறையக் குறைய புவியின் வெப்பம் அதிகமாகிறது.<br>**மரம் நடுவதன் இன்றியமையாமை** : புவி வெப்பமாவதால் வெயிலின் தாக்கம் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. புவி வெப்பத்தைக் குறைக்கப் பல ஆய்வுகள் நடைபெறுகின்றன. ஆய்வின் அடிப்படையில் புங்கன் மரங்கள் மற்றும் பல்வேறு மரங்களை நடுவதன் மூலம் புவி வெப்பமாவதையும் அதைத் வெயிலின் தாக்கத்தையும் குறைக்கலாம் என்று கண்டுள்ளனர்.<br>**ஆய்வு மையம்** : புவி வெப்பமயமாதலைத் தடுப்பதில் மரங்களின் பங்கு குறித்து மாநில வன ஆய்வு மையம் ஆய்வு நிகழ்த்தியது. அதன் முடிவில் புவி வெப்பமயமாதலைத் தடுப்பதில் மரங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. வாயு மண்டலத்திலிருந்து புவிக்கு வரும் வெப்பத்தை மரங்கள் பல்வேறு முறையில் திருப்பி அனுப்புகின்றன. நம் வீட்டைச் சுற்றி புங்கன் மரங்களை நட்டு வளர்த்தால் கோடைக்காலத்தில் வெப்பம் தாக்க வழியில்லை என்று வெளியிட்டுள்ளன.<br>**முடிவுரை:** வேப்பமரம், அல்பிடோ, கடம்ப மரம், வாகை மரம் போன்றவை கரிமிலவாயுவை உள்ளிழுப்பதன் மூலம் புவியின் வெப்பத்தைத் தணிக்கின்றன. எனவே நம் சுற்றுச்சூழலில் அதிக மரங்களை நட்டு எதிர்காலத்தில் புவி வெப்பமயமாதலைத் தடுப்போம். |
| 4. | **இந்தியாவின் கணினிப் புரட்சி** |
| | குறிப்புச் சட்டகம்<br>❖ முன்னுரை<br>❖ பாரதத்தில் கணினியின் வளர்ச்சி<br>❖ கணினியின் பயன்கள்<br>❖ பிறதுறைகளில் கணினி |

- கல்வித்துறையில் கணினி
- முடிவுரை

**முன்னுரை** : உலக நாடுகளின் போட்டிகளுக்கிடையே இந்தியா வல்லரசு நாடாக வளர்ந்து வருகின்றது. அதற்கு கணினித் துறையில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தகு வளர்ச்சிகள் மற்றும் முயற்சிகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**பாரதத்தில் கணினியின் வளர்ச்சி** : முதன்முதலாக மும்பையிலுள்ள டாடா அய்வு மையம் தான் 1966இல் கணினியை செயல்படுத்தத் தொடங்கியது. நம்நாட்டிலுள்ள மின்னியல் கழகம் கணினிகளை வணிக நோக்குடன் தயாரிக்கத் தொடங்கியது. மின்னியல் துறையில் ஒரு புரட்சி ஏற்பட்டது. அப்போதைய பாரதப் பிரதமர் திரு இராஜீவ் காந்தி அவர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கும் அளவிற்கு மின்னியல் துறையை வளர்த்தார்.

**கணினியின் பயன்கள்** : இன்று நம் வாழ்வின் எல்லா நிலைகளிலும் கணினி முக்கியப் பங்கு வகிக்கிறது. வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதிலும் திரைப்படத்துறையிலும் கணினி அங்கம் வகிக்கிறது. போர்க்கால அடிப்படையில் எல்லா வங்கிகளும் பொதுத்துறை நிறுவனங்களும் கணியை ஏற்றுக் கொண்டன. இணையம் பயன்பாட்டிற்கு வந்த பிறகு நம் வாழ்வின் ஒரு முக்கியப்பொருளாக கணினி பயன்பட்டு வருகிறது.

**பிறதுறைகளில் கணினி** : பேருந்து, விமானம், இரயில் முதலிய போக்குவரத்துத் துறைகளில் இருக்கை முன்பதிவு செய்யவும் அவற்றைக் கட்டுப்பாட்டுக்குள் செயல்படவும் கணினி பயன் படுகிறது. மருத்துவத்துறைகளில் நோய்களைக் கண்டறியவும், பரிசோதனைகள் செய்யவும் அறுவை சிகிச்சைகள் செய்யவும் கணினி குறிப்பிடத்தக்க அளவில் பயன்படுகிறது.

**கல்வித்துறையில் கணினி** : கல்வித்துறையில் கல்வி மேம்பாட்டுப்பணிகளைச் செய்கிறது. கல்வி நிலையங்களில் கணினி ஒரு பாடத்திட்டமாக அமைந்துள்ளது. கணினி பாடப்பிரிவுகள் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. கணினி துறையில் பட்டங்கள் மற்றும் பட்ட மேற்படிப்புகள் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பில் முதன்மை இடம்பெறுவதால் அனைவரும் விரும்பிப் படிக்கும் துறையாக வளர்ந்து வருகிறது.

**முடிவுரை** : கணினித்துறை எதிர்காலத்தில் நம் நாட்டில் மிக விரைவாகவும் திறமையாகவும் செயல்படும் என்பதில் ஐயமில்லை. நாமும் கணினி கல்வி கற்று வாழ்வில் முன்னேற்றம் காண்போம்.

| 5. | **உலக மகளிர் தினம்** |
|---|---|
| | குறிப்புச் சட்டகம்<br>❖ முன்னுரை<br>❖ இந்தியாவை வளமாக மாற்றுவதில் மகளிரின் பங்கு<br>❖ பெண்களின் வளர்ச்சியைக் கொண்டாடுதல்<br>❖ பல துறைகளில் பெண்கள்<br>❖ முடிவுரை<br><br>**முன்னுரை** :'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்' என்று பாரதி பெண்விடுதலைக்காகப் பாடினார். சங்க காலத்திலும் பெண்கள் சமுதாயத்தில் சிறந்து விளங்கி இருந்தனர். இடைப்பட்ட காலத்தில் 'அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதற்கு' என்று வீட்டிலே பூட்டி வைத்தனர். ஆனால் இன்று எல்லாத் துறைகளிலும் ஆண்களை மிஞ்சும் அளவில் முன்னிலை வகித்துச் சாதனைகள் புரிந்து வருகின்றனர்.<br>**இந்தியாவை வளமாக மாற்றுவதில் மகளிர் பங்கு** : ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8ஆம் தேதி உலக மகளிர் தினத்தைக் கொண்டாடி வருகின்றனர். இந்தியாவை வளமுள்ள நாடாக மாற்றுவதற்கு மகளிரின் பங்கு மகத்தானது. குடும்பம், சமூகம், நாடு என்று அனைத்திலும் தாக்கத்தை ஏற்படுத்த பெண்களே சிறந்த காரணிகளாக உள்ளனர். தகுதியும் முக்கியத்துவமும் வாய்ந்த கல்வியை அவர்களுக்கு அளிப்பதால் வலிமையான சமுதாயம் அமையும்.<br>**பெண்கள் வளர்ச்சியைக் கொண்டாடுதல்** : பெண்கள் அடைந்துள்ள வளர்ச்சியைக் கொண்டாடவும் சமுதாயத்திற்குப் பெண்கள் தந்த பங்கினைப் பாராட்டவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. நமது அரசு மகளிர் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. கல்வி வேலைவாய்ப்புகளில் 30% ஒதுக்கிட்டை அளித்துள்ளது. பெற்றோர் சொத்தில் பெண்களுக்குச் சமஉரிமை உண்டு எனத் தனிச்சட்டம் நிறைவேற்றி உள்ளது.<br>**பல துறைகளில் பெண்கள்** : பட்டம் பெறுவோரில் மருத்துவத் துறையில் 50%, கணினித்துறையில் 21%, அறிவியல் தொழில்நுட்பத்துறையில் 25% பேர் மகளிர். உள்ளாட்சி அமைப்புகள், கிராம பஞ்சாயத்து ஆட்சியில் 78 ஆயிரம் பெண்கள் தலைவர்களாக உள்ளனர். ஆண்களுக்கு உள்ள சகல திறமைகளும் பெண்களுக்கும் உண்டு. இன்று சமுதாயத்தில் எல்லாத்துறைகளிலும் பெண்கள் புகுந்து தங்கள் சதனைகளைப் பதிவு செய்து வருகின்றனர்.<br>**முடிவுரை** : பெண்கல்வியைக் கட்டாயமாக்கப்பட வேண்டும். பெண்கள் துணிச்சலுடன் நாட்டில் வலம்வரத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட |

| | |
|---|---|
| | வேண்டும். சர்வதேச மகளிர் தினம் பெண்களின் நல்வாழ்வுக்காகவும் நாட்டு முன்னேற்றத் திற்காகவும் பயன்படக் கொண்டாடப்படுவது அவசியமாகும். |
| 6. | **தூய்மை இந்தியா** |
| | குறிப்புச் சட்டகம்<br><br>❖ முன்னுரை<br>❖ தூய்மை இல்லாமை<br>❖ தூய்மை திட்டத்தைச் செயல்படுத்துதல்<br>❖ நாம் செய்ய வேண்டியன<br>❖ முடிவுரை<br><br>**முன்னுரை** : வளம் நிறைந்த இந்திய நாடு வேற்றுமையில் ஒற்றுமை என்னும் அமைப்பில் பல தொழில்நுட்ப வளர்ச்சி நோக்கி முன்னேறிக் கொண்டு இருக்கின்றது. இம் முன்னேற்றம் நிலையாகவும் தொடர்ச்சியாகவும் தூய்மையாகவும் நடைபெற அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்றது. அவற்றுள் அன்று தான் தூய்மை இந்தியா திட்டம் ஆகும்.<br>**தூய்மை இல்லாமை** : இந்தியா ஒரு ஏழ்மை நாடு. மக்களில் பலர் வசதியாக இருந்தாலும் தூய்மை இல்லாது இருப்பதால் பல்வேறு தொற்று நோய்கள் பரவுகின்றன. பொது இடங்களில் புகைப்பது, கண்ட இடங்களில் குப்பைகளைப் போடுதல், எச்சில் துப்புதல், கழிப்பறைகளை உபயோகிக்காமல் கண்ட இடங்களில் சிறுநீர் கழித்தல் போன்ற விரும்பத்தகாத செயல்களில் ஈடுபடுவதால் நம்மைச் சுற்றியுள்ள பகுதி அசுத்தமாகிறது.<br>**தூய்மை திட்டத்தைச் செயல்படுத்துதல்** :'காந்தியின்' உண்மைத் திட்டமான 'தூய்மை இந்தியா' திட்டத்தை முதன்மை நோக்கமாகக் கொண்டு தூய்மை பாரதம் என்று பொது இடங்களைத் தூய்மை செய்தல் என்ற திட்டம் நாடு முழுவதும் செயல்படுத்தப்பட்டது.<br>இத்திட்டத்தைப் பள்ளிகள், கல்லூரிகள், பொது இடங்கள், அரசுஅலுவலகங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில், வீடுகளில் அனைத்து மக்களும் செயல்பாட்டில் கொண்டு வந்துள்ளனர். அதன் விரிவாக்கமாக கிராமங்களில் கழிவறை கட்டுதல், பள்ளி, கல்லூரிகளில் கழிப்பிட வசதி ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.<br>**நாம் செய்ய வேண்டியன** :<br>❖ நாம் வசிக்கும் இடத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.<br>❖ விலங்குகளைத் துன்புறுத்தாமலும், அவற்றை இறைச்சிக்காக பயன்படுத்தாமலும் இருக்க வேண்டும்.<br>❖ காடுகளில் விலங்குகளையும் மரங்களையும் அழிக்காமல் பாதுகாக்க |

| | |
|---|---|
| | வேண்டும்.<br>❖ பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தக் கூடாது.<br>❖ மழைநீரைச் சேமித்து நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கவேண்டும்.<br>❖ வீட்டிற்கு ஒரு மரம் வளர்க்க வேண்டும்.<br><br>**முடிவுரை** : அனைவரும் ஒன்றுபடுவோம்! தூய்மை இந்தியா திட்டத்தைச் செயல்படுத்துவோம்!! நாட்டையும் நம்மையும் தூய்மையாக வைத்துக் கொண்டு நலமாக, வளமாக வாழ்வோம். |
| 7. | **சான்றோர் வளர்த்த தமிழ்** |
| | குறிப்புச் சட்டகம்<br>➢ முன்னுரை<br>➢ தொன்மை<br>➢ உயர்மொழி<br>➢ தமிழ் - தனிமொழி<br>➢ தமிழ் - செம்மொழி<br>➢ தமிழின் பொதுப்பண்பு<br>➢ அரசின் கடமை<br>➢ முடிவுரை<br><br>**முன்னுரை** :'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மொழி' என்று தமிழின் பழமையை வரையறுத்தவர் பரிதிமாற்கலைஞர். உயர், தனி, செம்மை ஆகிய மூன்று அடைமொழிகள் கொண்டு தமிழ் விளங்கக் காரணம் என்ன என்று காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.<br><br>**தொன்மை** : குமரிக்கண்டம் எனப்படும் லெமூரியாக் கண்டத்து மக்கள் பேசிய மொழி தமிழே என்பது எலியர் கருத்து. மனிதன் இனம் தோன்றிய போதே தோன்றியது தான் நம் தமிழ்மொழி. உலக மொழிகளுள் தொன்மையும் இலக்கண, இலக்கிய வளமும் உடையது தமிழ். பல மொழிகள் காலவெள்ளத்தில் சிதைந்து மாறுபட்டு விளங்குகின்றன. ஆனால் பத்தாயிரம் ஆண்டுகட்கு முன்பே பேசப்பட்டும் இன்றும் அழியாமல் நிலைத்து நிற்கும் சிறப்பான தன்மை தமிழ் மொழிக்கு மட்டுமே அமைந்துள்ளது.<br><br>**உயர்மொழி:** தான் பேசப்படும் நாட்டிலுள்ள பலமொழிகளுக்கும் தலைமையும் மென்மையும் உள்ள மொழியே உயர்மொழி என்கிறார் பரிதிமாற்கலைஞர். அதன்படி திராவிட மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகிய மொழிகளுக்குத் தலைமையும் மேன்மையும் பெற்றிருப்பதால் தமிழே உயர்மொழி ஆகும்.<br><br>**தமிழ் - தனிமொழி** : நாட்டின் மற்ற மொழிகளின் உதவியில்லாமல் தனித்து இயங்கவல்ல மொழியே தனிமொழியாகும்.பிமொழிகளின் உதவி இன்றி தனித்தியங்கும் ஆற்றல் பெற்றிருப்பதால் தமிழ்மொழி தனிமொழி எனப்படும். |

| | |
|---|---|
| | **தமிழ் - செம்மொழி :** திருந்திய பண்பும். நீர்த்த நாகரிகமும் பெற்ற தூயமொழி செம்மொழி ஆகும். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதைத் தமிழ் இன்றளவும் ஏற்றிருப்பதால் தமிழ்மொழி செம்மொழி என்றழைக்கப்படுகிறது.<br><br>**தமிழின் பொதுப்பண்பு :** தமிழரல்லாத போப், வீரமாமுனிவர், கால்டுவெல் போன்றோர் தமிழைக்கற்று இலக்கியத்திற்கு வளம் சேர்த்தனர். மதம், மொழி, இனம், நிறம் கடந்து 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று முதல் முழக்கமிட்டது தமிழ்மொழியே ஆகும். "தீதும் நன்றும் பிறர்தர வாரா," பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும், உண்பது நாழி, உடுப்பவை இரண்டே என்று உயர்ந்த சிந்தனைகளை உலகுக்கு உணர்த்தியது தமிழே. இல்வாழ்வை அகம், புறம் எனப் பிரித்துக் காட்டியதும்வாழ்வியலுக்கே இலக்கணம் கூறியதும் நம் தமிழ் மொழியே ஆகும்.<br><br>**அரசின் கடமை :** பழைமையும் செம்மையும் தனிச்சிறப்பும் உடைய தமிழ்மொழியை ஆட்சிமொழியாக்கி அரியணையில் அமரச் செய்ய வேண்டும். இதன் மூலம் பல நாட்டவர் நம் தமிழ்மொழியைக் கற்பர். நம் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் பிற மொழியாளர்களால் ஆராயப்படும். நம் தமிழ்மொழியின் மதிப்பு உலக அளவில் உயரக்கூடும்.<br><br>**முடிவுரை :** செம்மொழியாம் தமிழ்மொழியை உலகறியச்செய்து தமிழ் மொழியைச் சிறப்படையச் செய்வோம். தமிழர்களாகிய நாமும் வாழ்வில் உயர்வோம். |
| **8.** | **நான் விரும்பும் கவிஞர் - பாரதியார்** |
| | குறிப்புச் சட்டகம்<br>➢ முன்னுரை<br>➢ தோற்றம்<br>➢ விளையும் பயிர்<br>➢ தமிழ்ப் பற்று<br>➢ விடுதலை வேட்கை<br>➢ முடிவுரை<br><br>முன்னுரை : தமிழ்இலக்கிய உலகில் தனக்கென ஒரு தனி முத்திரை பதித்தவர்,'தேசியக்கவி' எனப் போற்றப்படும் பாரதியார். "செந்தமிழ்த் தேனீ: சிந்துக்குத் தந்தை" என்று பாரதிதாசனால் போற்றப்படும் பாரதியே நான் விரும்பும் கவிஞர் ஆவார்.<br><br>தோற்றம் : திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்தில் சின்னசாமி அய்யர் - இலக்குமி அம்மையாருக்கு 1882 ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 11ஆம் நாள் மகனாகத் தோன்றினார்.<br><br>விளையும் பயிர் : "விளையும் பயிர் முளையிலேயே தெரியும்" என்பதற்கேற்ப தம் இளம் வயதிலேயே கவிபாடும் திறமை பெற்றிருந்தார். தமது சிறு வயதிலேயே சிறந்த பாடல்களை இயற்றி எட்டையபுர மன்னரால்"பாரதி" என்ற சிறப்புப் பெயரைப் பெற்றார். |

| | |
|---|---|
| | தமிழ்ப்பற்று : பாரதியார் தமிழ், ஆங்கிலம், வடமொழி, இந்தி, வங்காளம் முதலிய பலமொழிகளில் புலமை பெற்றுத் திகழ்ந்தார். ஆயினும் “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்” என்று தமிழ்மொழியின் சிறப்பினைப் போற்றிப் பாடுகின்றார். “செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே” என்றும் “சொல்லில் உயர்வு தமிழ்ச சொல்லே- அதனைத் தொழுது படித்திடடி பாப்பா” என்றும் தமிழ் மொழியைப் பலவாறு போற்றிப் பாடுகின்றார்.<br><br>விடுதலை வேட்கை : தம்முடைய அனல் கக்கும் பாடல் வரிகளால் விடுதலை வேட்கையைத் தட்டியெழுப்பியவர் பாரதி. “ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்” என்று நாடு விடுதலை பெறும் முன்பே விடுதலை பெற்று விட்டதாக நம்பிக்கையுடன் களித்தவர். ஆங்கில அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக விடுதலை, விடுதலை, விடுதலை என்று கூக்குரலிட்டவர்.<br><br>முடிவுரை: தேசியக்கவி பாரதி தம்முடைய சுவை மிகுந்த கவிதைகளால் தாய் நாட்டின் விடுதலைக்கும் சமூக நீதிக்கும் பெண்ணுரிமைக்கும் முழக்கமிட்டார். பாரதியின் கனவுகளை நனவாக்குவோம்! தாய்நாட்டின் பெருமையைக் காத்திடுவோம்!! |
| **9.** | **சுற்றுப்புறச்சூழலும் மாசுக்கட்டுப்பாடும்** |
| | குறிப்புச் சட்டகம்<br>**1.** முன்னுரை<br>**2.** காற்றுமாசு<br>**3.** தண்ணீரில் மாசு<br>**4.** நிலத்தினால் ஏற்படும் மாசு<br>**5.** ஒலி மாசு<br>**6.** மாசுக்கட்டுப்பாடு<br>**7.** முடிவுரை<br>முன்னுரை: “சுத்தம் சோறு போடும்” என்பது பழமொழி. இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த மனிதன் அந்த இயற்கையை வேருடன் அழிக்க முற்படுகிறான். உலகில் மாசுகளினால் ஏற்படும் துன்பங்கள் என்பது கவனிக்கப்பட வேண்டிய பிரச்சனைகளுள் ஒன்றாக அமைந்து விட்டது. அவற்றைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br><br>காற்றுமாசு:நாம் சுவாசிக்கும் காற்றில் தொழிற்சாலைகளினால் வெளியிடப்படும் விஷ வாயுக்கள் கலந்து விடுகின்றன. ஆலைகள் விடும் புகையாலும் ஊர்திகள் விடும் புகையாலும் காற்று மாசு அடைகின்றது. நூற்பு பஞ்சு ஆலைகளில் வெளிப்படும் பஞ்சுத் தூசுகள் காற்றில் கலக்கின்றன. இக்காற்றை மக்கள் சுவாசிக்கும் போது மக்கள் துன்புறுகின்றனர்.<br><br>தண்ணீரில் மாசு:தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுநீர், சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறும்நீர் ஆற்றிலும் கடலிலும் கலக்கின்றன. இதனால் தண்ணீரின் இயற்கைத் தன்மை சிதைந்து நச்சுத் தன்மையுறுகிறது. |

உணவாக அமையும் தண்ணீரைக் கெடுத்து விடுகிறது. இதனால் கடலில் வாழும் உயிரினங்கள் அழிந்து விடுகின்றன. மனிதர்களுக்கும் பல்வேறு நோய்களை உண்டாக்குகின்றன.

நிலத்தினால் ஏற்படும் மாசு: தொழிற்சாலைகள் பயன்படுத்திய குப்பைகள், நெகிழிப்பைகள், வேதியியல் பொருட்கள் ஆகியன பூமியில் புதைக்கப்படுவதால் நிலம் மாசு அடைகிறது. விவசாய நிலங்களுக்குச் செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன் படுத்துவதால் மண்ணின் குறைந்து வளமற்றதாகி விடுகின்றன.

ஒலி மாசு:ஊர்திகளின் இரைச்சல், விமானங்களின் சத்தம், ஒலிபெருக்கிகளின் சத்தம், வெடிகளின் ஒலி இவற்றால் ஒலி மாசு ஏற்படுகின்றன. இவையனைத்தும் சேர்ந்து நம் நரம்பு மண்டலத்தைப் பாதிக்கின்றன.

கட்டுப்படுத்தும் வழிகள்:

- சுற்றுப்புறச் சூழல் தூய்மையானதாக அமைய வேண்டும் என்ற விழிப்புணர்வு வேண்டும்.
- காடுகள் அழிக்கப் படுவதைத் தடுக்க வேண்டும்.
- அணு ஆயுதச் சோதனைகள் நிறுத்தப்பட வேண்டும்.
- காற்று மண்டலம் மாசு படாமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும்.
- காற்றில் உள்ள கரிவளியைக் குறைக்க மரம், செடி, கொடிகளை வளர்க்க வேண்டும்.
-

முடிவுரை : இளைய தலைமுறையினர் மற்றும் உலக உயிரினங்கள் அனைத்தும் வாழ இன்றியமையாத காற்றையும் நீரையும் மாசுகள் கலக்காதவாறு காக்க வேண்டியது நம் கடமையாகும்.

10 **உடற்பயிற்சியின் அவசியம்**

குறிப்புச் சட்டகம்

1. முன்னுரை
2. உடற்கல்வி
3. உடற்பயிற்சியின் பயன்கள்
4. சீரான பயிற்சி
5. முடிவுரை

முன்னுரை : ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ ஆகும். உடல் நோயற்று இருக்க வேண்டும் என்றால் நாம் நாள்தோறும் உடற்பயிற்சி செய்வது இன்றியமையாதது ஆகும். அவ்விதமான உடற்பயிற்சியின் அவசியம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

உடற்கல்வி : மாநில அரசு மட்டுமல்லாது மைய அரசும் எதிர்கால இளைய

| | |
|---|---|
| | சமுதாயம் ஏற்றமுடன் வாழவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் பள்ளிகளில் உடற்கல்வியைக் கட்டாயமாக்கி உள்ளனர். உடற்கல்வியைப் பாடமாகவும் புகுத்தி உள்ளன.<br><br>உடற்பயிற்சியின் பயன்கள் : சீரான குருதி ஓட்டம், உணவு செரித்தல் போன்ற உடலின் உள் இயக்கங்களும் செவ்வனே நடைபெற உடற்பயிற்சி உதவுகின்றன. இதன் காரணமாய் மாணவர்களுக்குக் கல்வியில் கவனமும் படிப்பில் ஆர்வமும் பிறக்கின்றன. உடற்பயிற்சியை ஒழுங்காய் தொடர்ந்து செய்யும் பெரியோர் முதுமையின் காரணமாய் தோன்றும் தளர்ச்சி நீங்கி என்றும் இளமையுடன் நோயுற்ற வாழ்வு பெற்று வளமுடன் இருப்பர்.<br><br>சீரான பயிற்சி : எந்தப் பயிற்சியையும் இளமைப் பருவத்திலிருந்து கற்பது நல்லது. உடற்பயிற்சியும் அவ்வாறே. காலையிலும் மாலையிலும் முறையான நடைப்பயிற்சி, மெதுவாய் ஓடுதல், எடை தூக்குதல், குனிந்து நிமிர்தல், மூச்சுப்பயிற்சி, தியானம், யோகா ஆகியவற்றைச் சீராய் மேற்கொண்டால் நல்ல உடலும் நல்ல மனமும் அமையும்.<br><br>முடிவுரை: உடலினை உறுதியாக்க, நாள்தோறும் உடற்பயிற்சி செய்வோம். உயர்ந்த தோற்றத்தையும் உன்னதமான மனவளத்தையும் பெற்று மகிழ்வோம். |
| **11** | **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்** |
| | குறிப்புச் சட்டகம்<br><br>❖ முன்னுரை<br>❖ வருமுன் காப்போம்<br>❖ உணவே மருந்து<br>❖ நோயற்ற வாழ்வு<br>❖ உடற்பயிற்சி<br>❖ முடிவுரை<br><br>**முன்னுரை** : 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்' என்பவை உடலோம்பல் பற்றிய பழமொழிகளாகும். உள்ளத்தில் வலிமை என்பது உடலின் வலிமையைப் பொருத்து தான் அமையும். உடல்நலம் குன்றிவிட்டால் அதைத் திரும்பப் பெறுவது மிகக் கடினம். அத்தகைய உடல் நலம் காக்கும் வழிகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br><br>**வருமுன் காப்போம்** : நோய் வந்த பின் காப்பதைவிட வரும்முன் காப்பதே நல்லது. 'வருமுன் காப்போம்' என்பது பொருள் பொதிந்த சொற்றொடராகும். உடலோம்பல் முறைகளைக் கற்று முறையுடன் பின்பற்றி உடலை நோயில்லாமல் தற்காத்துக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.<br><br>**உணவே மருந்து** :'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு' என்னும் வள்ளுவன் |

| | |
|---|---|
| | குறளுக்கு ஏற்ப நாம் உண்ணும் உணவே மருந்தாக அமைகிறது. துரித உணவுகள் சாப்பிடுவதைத் தவிர்த்து நிறை கீரைகள், பழங்கள், காய்கறிகள், சிறுதானியங்கள், முளைகட்டிய தானியங்கள், உலர்பழங்கள் ஆகியவற்றை அதிக அளவில் சேர்த்துக் கொள்ளும் போது அவை உடலுக்கு வலிமையைக் கொடுக்கும். உணவை நன்கு மென்று விழுங்குதல் வேண்டும்.<br><br>**நோயற்ற வாழ்வு** :“உடலில் உறுதி உடையவரே உலகில் இன்பம் உடையவராம்” என்கிறார் கவிமணி.உடல்நலமில்லாத வாழ்க்கை முறைகளால் தான் பலர் பலவிதமான நோய்களால் அல்லல்படுகின்றனர். உடலைப் பாதுகாத்தால் நோயின்றி நீண்டநாள் வாழலாம்.<br><br>**உடற்பயிற்சி** : உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் உடற்பயிற்சி அவசியம். ஒரு நாளைக்குக் குறைந்தது ஒரு மணி நேரமாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும். “ஓடி விளையாடு பாப்பா” என்று பாரதியார் கூறியிருப்பதும் இதுவே. உடற்பயிற்சியை விடாமல் செய்து நோய் நம்மை அண்டாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.<br><br>**முடிவுரை** :‘நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்’ என்னும் குறளின் கருத்தை வாழ்வில் கடைப்பிடித்து நோயற்ற வாழ்வை இனிமையாக வாழ்வோம். |
| **12** | **நான் விரும்பும் நூல் - ‘திருக்குறள்’** |
| | குறிப்புச் சட்டகம்<br><br>1. முன்னுரை<br>2. நூலின் அமைப்பு<br>3. நூல் கூறும் கருத்துகள்<br>4. பயன்கள்<br>5. இந்நூலை விரும்புவதற்கான காரணம்<br>6. முடிவுரை<br><br>**முன்னுரை** : அனைத்து நாட்டினரும் இனத்தினரும் தத்தமக்கே உரியவெனக் கொண்டாடும் வகையில், பொதுமைக் கருத்துக்களைத் திருக்குறளில் படைத்தவர் திருவள்ளுவர். அவ்விதம் சிறப்புப் பொருந்திய திருக்குறளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br><br>**நூலின் அமைப்பு** : திரு + குறள் = திருக்குறள். திரு – செல்வம், சிறப்பு, அழகு, மேன்மை, தெய்வத்தன்மை எனப் பல பொருள் கொண்ட ஒரு சொல். குறள் - குறுகிய அடி உடையது. இரண்டே அடி உடைய செய்யுள் குறள். அதாவது, ஏழு சீர்களைக் கொண்ட ஈரடி வெண்பாக்களால் ஆனது திருக்குறள். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் மூன்று இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. மொத்தம் 133 அதிகாரங்களில், அதிகாரத்திற்கு |

| | |
|---|---|
| | 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் திருக்குறளில் இடம்பெற்றுள்ளது.<br><br>**நூல் கூறும் கருத்துகள்** : அன்பின் சிறப்பு, ஒழுக்கத்தின் மேன்மை, கல்வியினால் எய்தும் புகழ், விருந்தோம்பலின் அவசியம், பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதல், நட்பின் உயர்வு போன்ற தலைப்புக்களில் திருக்குறள் கூறும் ஒவ்வொரு கருத்துக்களும் உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியனவாக அமைந்துள்ளது.<br><br>**பயன்கள் :** மக்கள் வாழ்வில் அடையத்தக்க உறுதிப்பொருள்களாகிய அறம், பொருள், இன்பம் என மூன்று பிரிவுகளிலும் இருக்கும் தேவையான மற்றும் தேவையற்ற கருத்துக்களை எடுத்துரைக்கிறது. அனைத்துத்தர மக்களும் மதம், மொழி, இனத்திற்கு அப்பாற்பட்டு ஏற்றுக் கொள்ளும் பொருட்டு அனைத்துக் கருத்துக்களையும் உலகப்பொதுமறையாக நின்று எடுத்துரைக்கிறது.<br>**இந்நூலை விரும்புவதற்கான காரணங்கள்** : இரண்டடியில் குறள் வெண்பாவில் அமைந்துள்ள திருக்குறள் உலகமக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய மிகப்பெரிய கருத்துக்களையும் ‘பனித்துளிக்குள் பனைமரம்’ என்னும் முதுமொழிக்கேற்ப அனைத்துக் கருத்துக்களையும் தன் இரண்டடியில் அடக்கி எடுத்துரைப்பதால் இந்நூலான திருக்குறளை நான் விரும்புகின்றேன்.<br><br>**முடிவுரை**: இவ்விதம் பல தலைப்புக்களில் எடுத்துரைக்கும் திருக்குறளின் எளிமையான கருத்துக்களைப் படிப்பதுடன், அவற்றில் கூறியுள்ளவாறே நாமும் வாழ்வில் நடந்துகாட்டுவோம்; நன்மைகள் பலபெறுவோம். |
| 13 | ***பெண்கல்வி*** |
| | குறிப்புச் சட்டகம்<br>➢ முன்னுரை<br>➢ இடைக்காலம்<br>➢ பெண்கல்வி<br>➢ மகளிர் முன்னேற்றம்<br>➢ நன்மைகள்<br>➢ முடிவுரை<br>**முன்னுரை** : “மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா” என்று கவிமணி அவர்களின் பெண்களின் பிறப்பை உயர்வாகக் கூறுகிறார். இத்தகைய பெண்கள சங்க காலத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்தனர். ஔவையார், காக்கைப்பாடினியார் போன்ற பெண்டிர் கற்பும் கல்வியும் பெற்றுத் திகழ்ந்தனர்.<br><br>**இடைக்காலம்** : இடைக்காலத்தில் இந்நிலை மாறி மகளிரை அடக்கி ஆளும் நிலை ஏற்பட்டது. அறிவும் ஆற்றலும் குறைந்தன. பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் நிலை ஏற்பட்டது. |

| | |
|---|---|
| | பெண்களின் முன்னேற்றத்திற்காக பல தலைவர்கள் குரல் எழுப்பிப் போராட்டங்கள் நடத்தினர்.<br><br>**பெண்கல்வி :** “பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்” என்று பாரதியின் குரலுக்கேற்ப 20-ஆம்நூற்றாண்டில் மகளிர்முன்னேற்றம் தொடங்கியது. பெண்களுக்குக் கல்வி வாய்ப்புகள் கிடைத்ததனால் அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு என்ற நிலை மாறி ஆணுக்கு இங்கே பெண் சரிநிகர் சமானம் என்ற நிலை உருவானது. இன்று பெண்கள் உயர்கல்விகள் பல கற்று மருத்துவராகவும் பொறியாளர்களாகவும் பல துறைகளிலும் உயர் பதவிகள் வகிக்கின்றனர்.<br><br>**மகளிர் முன்னேற்றம் :** பெண்கல்வியை அடுத்து மகளிர் முன்னேற்றத் திட்டங்கள் பல வகுக்கப்பட்டன. காந்தியடிகள், பெரியார், திரு.வி.க.,ஈ.வெ.ரா., மோகன்ராய் போன்ற பல தலைவர்கள் மகளிர் முன்னேற்றத்திற்காகப் பாடபட்டனர். குழந்தைத் திருமணம், வரதட்சணை ஒழிப்பு, பலதார மணம், உடன்கட்டை ஏறுதல் போன்ற பல கொடுமைகளை எதிர்த்தனர். இன்று அரசு பெண்களுக்கெனத் தனிப்பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் போன்றன ஏற்படுத்தி பெண்கல்விக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது.<br><br>**நன்மைகள் :**ஒரு ஆண் கல்வி கற்றால் அது அவனுக்கு மட்டுமே அளிக்கப்பட்ட கல்வி. ஆனால் ஒரு பெண் கல்வி கற்றால் அவள் குடும்பத்திற்கே ஒளி விளக்காகத் திகழ்வாள். அறிவுள்ள பெண்மணி தன் குடும்பத்தைத் திறம்பட நடத்த முடியும்.<br><br>**முடிவுரை :** “மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்” என்ற பாரதியின் மொழிப்படி இன்று பலதுறைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளனர். பெண்கல்விக்கு முன்னுரிமை அளிப்போம். பெண்கள் முன்னேற்றத்தை ஊக்குவிப்போம். |
| 14 | **காலத்தை வெல்லும் கணினி** |
| | குறிப்புச் சட்டகம்<br><br>❖ முன்னுரை<br>❖ கணினியின் தோற்றம்<br>❖ கணினியின் வளர்ச்சி<br>❖ கணினியின் வகைகள்<br>❖ கணினி வழிக்கல்வி<br>❖ கணினியின் பயன்கள்<br>❖ முடிவுரை<br><br>**முன்னுரை** : தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி இன்று எவ்வளவோ முன்னேற்றங்களைப் பெற்று உலகையே ஒரு சிற்றூராக மாற்றிவிட்டது. இத்தொழில்நுட்ப முன்னேற்றங்களின் வளர்ச்சி நம் வாழ்வில் புத்தம் புதிய மலர்ச்சியை ஏற்படுத்தி வருகின்றன. இதில் முதலிடம் வகிப்பது பணினியே. அக்கணினியைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br><br>**கணினியின் தோற்றம்** :கி.பி. 1833ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த |

சார்லஸ் பாப்பேஜ் என்பவர் கணினியை முதலில் வடிவமைத்தார். ஆகையால் அவர் கணினியின் தந்தை என அழைக்கப்படுகிறார். கணிதச் செயல்பாட்டிற்குத் தேவையான அனைத்துக் கட்டளைகளையும் வகுத்தவர் லேடி லவ்லேஸ் என்பவராவார். இவரே முதல் செயல் திட்ட வரைவாளர் எனவும் போற்றப்படுகிறார்.

**கணினியின் வளர்ச்சி** :பேராசிரியர் ஹோவார்டு ஐக்கன் என்பவர் 1880ஆம் ஆண்டு ஐ.பி.எம். பொறியாளர் துணையுடன் எண்ணிலக்கக் கணினியைக் கண்டறிந்தார். 1890 ஆம் ஆண்டு ஹேர்மன் என்பவர் அமெரிக்க ஜனத்தொகை கணிப்பட்டையைப் பயன்படுத்தி வெற்றியாக அதைச் செயல்படுத்தினார். இவரே இன்றைய ஐ.பி.எம். உருவாகக் காரணமாக இருந்தவராவார்.

**கணினியின் வகைகள் :**

- ✓ பல்லூடக வசதிக்கொண்ட கணினி
- ✓ நுண்கணினி
- ✓ மீத்திறன் கணினி
- ✓ மேசைக்கணினி
- ✓ கையடக்கக் கணினி
- ✓ மடிக்கணினி
- ✓ வரைப்பட்டிகைக் கணினி
- ✓ உள்ளங்கைக் கணினி
- ✓ பெருமுகக் கணினி
- ✓ குறுமுகக் கணினி

**கணினி வழிக் கல்வி** :நாம் இருக்கும் இடத்திலிருந்தே தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல், வானியல், வரலாறு, புவியியல், பொது அறிவு, நடனம், கைவேலைப்பாடு, சமையல் போன்ற பல்வேறு துறை பற்றிய செய்திகளைக் கணினி வாயிலாகக் கற்றுக் கொள்ள இயலுகிறது. இன்றைய சூழலில் தொலைதூரக் கல்வியை இணையத்தின் வாயிலாகக் கணினியின் துணைக் கொண்டு பலரும் கற்று வருகின்றனர்.

**கணினியின் பயன்கள்** :கணினி இல்லாத வீடுகளை இன்று குறைவு தான். வணிகம், அறிவியல், தொழில்நுட்பம், தொலைத் தொடர்பு, கல்வி, மருத்துவம், விண்வெளி, பாதுகாப்பு, பொறியியல் வரைபடம் வரைதல், பொழுதுபோக்கு, விளையாட்டுகள் என எல்லாவற்றிலும் கணினி பயன்பட்டு வருகிறது. பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், வங்கிகள், கல்வி நிலையங்கள், உணவகங்கள் போன்றவற்றில் பெரும்பங்கு வகிப்பது கணினியே ஆகும்.

**முடிவுரை** :கணினி நமது அறிவை விரிவுபடுத்துவதற்கும் உலகத் தொடர்பிற்கும் சிறந்த வாயிலாகத் திகழ்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கணினியை நற்செயல்களுக்கு மட்டுமே பயன்படுத்தி பல நன்மைகளைப் பெறுவோம்.

**15** **அன்றாட வாழ்வில் அறிவியல்**

| | |
|---|---|
| | குறிப்புச்சட்டகம்<br>✓ முன்னுரை<br>✓ கல்வி<br>✓ மருத்துவம்<br>✓ போக்குவரத்து<br>✓ அன்றாட வாழ்க்கை<br>✓ முடிவுரை<br>**முன்னுரை** : காலை விடிந்தது முதல் இரவு வரை அறிவியல் நம் அன்றாட வாழ்க்கையோடு ஒட்டிப் பிணைந்து விட்டது. அறிவியலின்றி நம் வாழ்க்கை இல்லை என்னும் அளவிற்கு நம் வாழ்வில் முக்கிய இடம் பெற்றுவிட்டது. அத்தகை அறிவியலின் சிறப்புகள் பற்றி இக்கட்டரையில் காண்போம்.<br>**கல்வி:**அறிவியல் கண்டுபிடிப்புகளான வானொலியும் தொலைக்காட்சியும் கணினியும் கல்வி வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகின்றன. கல்விக்கு உதவும் ஆய்வுகளும் பரிசோதனைகளும் ஆய்வுக் கருவிகளும் அறிவியலால் ஏற்பட்ட சாதனைகளே. ஏட்டில் பார்த்துப் படித்த காலம் போய் இன்று கணிப்பொறியின் மூலமும் இணையத்தின் மூலமும் நாம் கற்பது ஏராளம்.<br>**மருத்துவம்** : புதிய புதிய மருத்துவக் கருவிகளும் மருந்துகளும் அறுவை சிகிச்சை முறைகளும் நவீன அறிவியலின் கண்டுபிடிப்புகள் ஆகும். இது மனிதனைப் பல்வேறு நோய்களினின்று காத்தும் அவனது வாழ்நாளை நீட்டித்தும் சாதனை படைத்துள்ளது. பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை போன்ற பல்வேறு முறைகள் மருத்துவத் துறையில் அறியலின் சாதனைகளாகும்.<br>**போக்குவரத்து** : பழங்காலத்தைப் போன்று இல்லாமல் நவீன போக்குவரத்துச் சாதனங்கள் பயணத்தை எளிதாக்கி விட்டன. அதிநவீனத்துடன் அதிவேகமாக பயணம் செய்து நேரத்தை மிச்சப்படுத்த முடிகிறது. அயல்நாடுகளுக்கு மட்டுமல்லாமது அண்டைக் கோள்களுக்கும் நம்மால் பயணம் செய்யமுடியும் என்ற நிலை உருவானது அறிவியலின் சாதனைகளே.<br>**அன்றாட வாழ்க்கை** :நாம் தினசரி வாழ்க்கையில் பயன் படுத்தும் மின்விளக்கு, மின்விசிறி, குளிர்சாதனம், தொலைக்காட்சி, வானொலி, கணினி, தொலைபேசி, கைப்பேசி போன்ற பொருட்கள் நம் வாழ்க்கையில் ஒரு இன்றியமையாத பொருளாகி விட்டது. அதுமட்டுமல்லாமல் நம் வாழ்க்கையை எளிமையாக்கி விட்டது. உணவு உற்பத்தியில் தொடங்கி உணவு சமைப்பது வரை அனைத்தும் புதுமைகள் நிறைந்த அறிவியல் கண்டுபிடிப்புகளே ஆகும்.<br>**முடிவுரை** : அறிவியல் கண்டுபிடிப்புகள் வியத்தகு வளர்ச்சியடைந்தாலும் தீமைகளும் நிறைந்துள்ளன. எனவே அறிவியலை நல்வழியில் பயன்படுத்தி மேலும் பல்வேறு துறைகளில் வளர்ச்சியும் முன்னேற்றமும் காண்போம். |
| 16 | **மாணவர்களும் சமுதாயத்தொண்டு** |

முன்னுரை:

மாண்பு என்னும் பெருமையை வீட்டிற்கும் நாட்டிற்கும் உண்டாக்குபவர்கள் மாணவர்கள். அவர்கள் மாணவராய்த் திகழும்போது கடமை உணர்வோடு, கண்ணியம் காத்துக் கட்டுப்பாட்டோடு செயலாற்றும் திறனைப் பெற வேண்டும். பண்போடு நாகரிகமும் பெற நல்ல சமுதாயம் உருவாக மாணவர்கள் எவ்வாறு பணியாற்றுகின்றனர் என்பதைக் காண்போம்.

பொதுநலத்தொண்டு:

ஏடு தூக்கிப் பள்ளியில் பயிலும் மாணவர்களே நாடு காக்கும் தலைவனாய் நாளை வரப் போகிறான். நம் நாடு சிற்றூர்களை மிகுதியாகக் கொண்ட நாடு. அதனால் விடுமுறைக் காலங்களில் மாணவர்கள் சிற்றூர்களுக்குச் சென்று சொற்பொழிவு, படக்காட்சி, கிராமப்பள்ளி இவற்றின் வாயிலாக கிராமப்புற மக்கள் கல்வி அறிவு மற்றும் நாட்டு நடப்புகளையும் அரசு மக்களுக்கு செய்து வரும் பல நற்காரியங்களையும் அறிந்து கொள்ள ஆவன செய்தல் வேண்டும்.

பலவகைப் பொதுப்பணிகள்:

உழுவார் உலகத்தாருக்கு ஆணி அச்சாணி என்பதை உணர்ந்து உற்சாகத்துடன் உழைத்து நல்ல பயன் பெற உதவ வேண்டும். சுற்றுச்சூழல் பாதிப்பால் புதுப்புது நோய்கள் பரவுகின்றன. நோய்கள் வராமல் பாதுகாத்தும், வந்தவிட்டு மிகாமல் தடுத்தும் நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதை உணரச் செய்ய வேண்டும்.

சாரணர் இயக்கம்:

பள்ளிகளில் சிறப்புடனே இயங்கி வரும் சாரணர் இயக்கத்தில் மாணவர்கள் சேர்ந்து சமுதாயத்திற்கு தங்களால் இயன்ற நன்மைகளைச் செய்திடல் வேண்டும். வெள்ளம், தீ, புயல் போன்ற துன்பங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிபுரிய மாணவர்கள் முன்வரவேண்டும்.

பள்ளியில் தூய்மைப்பணி:

மாணவர்களின் சமுதாயப் பணியிலிருந்து தொடங்குகிறது. பள்ளியைத் தூய்மையாக வைத்திருப்பதும் தூய்மைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஒவ்வொரு மாணவர்களின் தலையாய கடமையாகும். தேவையற்ற பொருட்களை உரிய இடத்தில் சேர்ப்பதும் பிறரையும் அவ்வாறே செய்திடச் செய்வதும் மாணவர்களின் எண்ணங்களில் நிறைந்திருக்க வேண்டும்.

மாணவர் தொண்டுசெய் இயக்கங்கள்:

பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் பேரழிவு மீட்புக் குழுக்களிலும் ஆர்வத்துடன் பங்கேற்று சமுதாயத்திற்கு நன்மைகள் பல புரிந்திட வேண்டும்.

முடிவுரை:

| | |
|---|---|
| | நாட்டைக் காக்கும் தூண்களாகவும் நாட்டுக்கு வழி நல்வழி காட்டும் கலங்கரை விளக்கமாகவும் விளங்குபவர்கள் மாணவர்களே. அவர்களே இந்தச் சமுதாயத்தைச் சீர்படுத்தும் சிந்தனைச் சிற்பிகள். |
| 17 | **உடலோம்பல்**<br><br>முன்னுரை:<br><br>“அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது” என்றார் ஔவையார். மனிதப் பிறவியைப் பேணிக்காத்துச் சமுதாயத்திற்குப் பயன்படுமாறு வாழ வேண்டும். உறுதியான உடலைப் பெற்று நோயில்லாமல் வாழ்வதற்கு உரிய வழிமுறைகளை இக்கட்டுரையில் காண்போம்.<br><br>வைகறை துயில் எழு:<br><br>வைகறைத் துயில் எழு என்பதற்கு ஏற்ப நாள்தோறும் விடியற்காலையில் எழுந்து காலைப் பணிகளை முடிக்க வேண்டும். கூழானாலும் குளித்துக் குடி. கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்னும் பழமொழிகள் உடலையும் உடையையும் தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறு கூறுகின்றன.<br><br>உடற்பயிற்சி:<br><br>நல்ல மனவளத்திற்கு உடல் நலமே ஆதாரம். ஒளிபடைத்த கண், உறுதி கொண்ட நெஞ்சம் வேண்டுமானால் வலிமையான உடல் தேவை. உடல் வலிமையடைய நாள்தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டியது அவசியம் ஆகும். உடல்தான் உயிரின் காப்பகம் என்பதை உணர்ந்து உடற்பயிற்சியினை நாள்தோறும் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டும்.<br><br>உள்ளம், உணவுத்தூய்மை:<br><br>மனித வாழ்வு சிறப்பாக அமைய சத்தான உணவை உண்ண வேண்டும். தூய்மையான ஆடையை உடுத்த வேண்டும். வெளிச்சம், காற்றோட்டம் நிறைந்த வீட்டில் குடியிருக்க வேண்டும். வலுவுள்ள உடல் இருந்தால்தான் நோயில்லாமல் வாழ முடியும்.<br><br>“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்<br><br>உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே” என்று திருமூலர் கூறுவார்.<br><br>சுற்றுப்புறமும் நம் கடமையும்:<br><br>வீட்டைச் சுற்றிலும் கழிவுநீர் தேங்காமல் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். நோய்த் தொற்று வராமல் பாதுகாப்பது நம் கடமையாகும். காப்பி, தேநீர் போன்றவற்றை அடிக்கடி குடிப்பதைத் தவிர்த்தல் வேண்டும். அனைவரோடும் அன்பை வளர்த்துக் கோபம் தவிர்த்து வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். |

| | |
|---|---|
| | **முடிவுரை:**<br><br>**மேலை நாடுகளில் உடலோம்பல் முதன்மை இடம் பெறுகின்றது. சத்துள்ள உணவு, ஒழுக்கம் தவறாத வாழ்வு, உடற்பயிற்சி ஆகியவற்றைத் தவறாது பின்பற்றினால் நெடுநாள் வாழலாம்.** |
| | **நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்** |
| | **குறிப்புச் சட்டகம்**<br><br>❖ முன்னுரை<br>❖ வருமுன் காப்போம்<br>❖ உணவே மருந்து<br>❖ நோயற்ற வாழ்வு<br>❖ உடற்பயிற்சி<br>❖ முடிவுரை<br><br>**முன்னுரை :** 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' 'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்' என்பவை உடலோம்பல் பற்றிய பழமொழிகளாகும். உள்ளத்தில் வலிமை என்பது உடலின் வலிமையைப் பொருத்து தான் அமையும். உடல்நலம் குன்றிவிட்டால் அதைத் திரும்பப் பெறுவது மிகக் கடினம். அத்தகைய உடல் நலம் காக்கும் வழிகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.<br><br>**வருமுன் காப்போம்** :நோய் வந்த பின் காப்பதைவிட வரும்முன் காப்பதே நல்லது. 'வருமுன் காப்போம்' என்பது பொருள் பொதிந்த சொற்றொடராகும். உடலோம்பல் முறைகளைக் கற்று முறையுடன் பின்பற்றி உடலை நோயில்லாமல் தற்காத்துக் கொள்ள வேண்டியது நமது கடமையாகும்.<br>**உணவே மருந்து** :'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு' என்னும் வள்ளுவன் குறளுக்கு ஏற்ப நாம் உண்ணும் உணவே மருந்தாக அமைகிறது. துரித உணவுகள் சாப்பிடுவதைத் தவிர்த்து நிறை கீரைகள், பழங்கள், காய்கறிகள், சிறுதானியங்கள், முளைகட்டிய தானியங்கள், உலர்பழங்கள் ஆகியவற்றை அதிக அளவில் சேர்த்துக் கொள்ளும் போது அவை உடலுக்கு வலிமையைக் கொடுக்கும். உணவை நன்கு மென்று விழுங்குதல் வேண்டும்.<br>**நோயற்ற வாழ்வு** :"உடலில் உறுதி உடையவரே உலகில் இன்பம் உடையவராம்" என்கிறார் கவிமணி.உடல்நலமில்லாத வாழ்க்கை முறைகளால் தான் பலர் பலவிதமான நோய்களால் அல்லல்படுகின்றனர். உடலைப் பாதுகாத்தால் நோயின்றி நீண்டநாள் வாழலாம்.<br><br>**உடற்பயிற்சி** :உடல் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால் உடற்பயிற்சி அவசியம். ஒரு நாளைக்குக் குறைந்தது ஒரு மணி நேரமாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும். "ஓடி விளையாடு பாப்பா" என்று பாரதியார் கூறியிருப்பதும் இதுவே. உடற்பயிற்சியை விடாமல் செய்து நோய் நம்மை அண்டாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.<br><br>**முடிவுரை** :'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்' என்னும் குறளின் கருத்தை வாழ்வில் கடைப்பிடித்து நோயற்ற வாழ்வை இனிமையாக வாழ்வோம். |

*******************